# தமிழரசு

சிதம்பரனார் மாவட்டச்
சிறப்பிதழ்



16-10-1986
ரூ. 1

# ஏற்றும் தீபம் ஒளிபெற வேண்டும்.....
# கதர் ஆடை அணிந்து எழில் வீசவேண்டும்....
# இல்லமெல்லாம் இன்பம் இனித்திட வேண்டும்.



## தீபாவளி

சிறப்புத் தள்ளுபடி

பருத்திக் கதர்

**35%**

பாலியஸ்டர் கதர்

**30%**

கதர்ப் பட்டு

**20%**

எல்லா *காதிகிராஃப்ட்* களிலும்
கிடைக்கும்.

தமிழ்நாடு கதர் கிராமத்
தொழில் வாரியம்
குறளகம், சென்னை-600 108.

D.I.P.R. 786/Elegant



# தாயகம் திரும்பினார் தமிழக முதல்வர்

மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள அமெரிக்க நாடுசென்றிருந்த மாண்பு மிகு முதல் அமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 30.9.1986 அன்று நள்ளிரவு விமானம் மூலம் டெல்லி வந்து சேர்ந்தார்.

விமானநிலையத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், வாரியத்தலைவர்களும், அரசு அலுவலர்களும், டெல்லிவாழ் தமிழர்கள் பெரும்பாலோரும் மாண்புமிகு முதல்வர் அவர்களை மாலை அணிவித்து வரவேற்றனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1.10.86 அன்று மாலை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ்காந்தி அவர்களைச் சந்தித்தார்.

மத்திய அரசின் பத்திரிக்கைத் தகவல் தொடர்புத்துறையால் அண்மையில் வெளியிடப்பட்ட இந்தி சுற்றறிக்கையினால் தமிழக மக்களுக்கு ஏற்பட்ட உணர்வுகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம் எடுத்துக் கூறினார்.

மத்திய அரசின் ஆட்சிமொழிக் கொள்கையில் எந்தவித மாற்றமும் இல்லை; எந்த மாநிலத்தின் மீதும் எந்த மொழியையும் திணிக்கும் எண்ணமும் இல்லை; குறிப்பாக தமிழக மக்கள் மீது இந்தியைத் திணிக்கும் எண்ணம் இல்லை என்று பிரதமர் அவர்கள் உறுதி அளித்தார்.

இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும் என்று, மறைந்த பிரதமர்கள் பண்டித நேரு, திருமதி இந்திராகாந்தி ஆகியோர் அளித்த உறுதி மொழி தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்று பிரதமர் அவர்கள் தெரிவித்தார்.

காவிரிநீர்ப் பிரச்னை குறித்தும் இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்தும் முதல்வர் அவர்கள் பிரதமர் அவர்களிடம் எடுத்துக்கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2.10.86 அன்று இரவு டெல்லியிலிருந்து விமானம்மூலம் சென்னை வந்து சேர்ந்தார். அவருக்கு விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது

**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2017

அட்சய - புரட்டாசி 30

மலர் : 17 இதழ் : 8

16-10-1986



# வ.உ.சி.யின் மறக்க முடியாத தொண்டு

**—பேரறிஞர் அண்ணா**

மறைந்த மாவீரர் வ.உ.சி. அவர்களையும் அவர் நாட்டின் விடுதலைக்காக ஆற்றிய அரும்பெரும் தொண்டுகளையும் மக்கள் மறக்க முடியாது. பேரும் புகழும் பெற்று, சொந்த வாழ்க்கைக்குத் தங்களுடைய உழைப்பும் தேசபகதியும் பயன்பட வேண்டுமென்ற சுயநல நோக்கம் கொண்டவர்களைப் போலன்றி உண்மையாகவே நாட்டுக்கு விடுதலையும், மக்களுக்கு நல் வாழ்க்கையும் ஏற்பட வேண்டுமென்ற பொது நல நோக்குடன்-பேரையும், புகழையும் விரும்பாமல் - ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்தி நாட்டுப் பணியாற்றியவர்.

வெள்ளையன் இந்நாட்டை விட்டு விரட்டப்பட வேண்டுமானால், அவனுடைய ஆதிக்கத்தின் ஆணிவேரான வியாபாரத் துறையைத் தான் முதலில் கைப்பற்ற வேண்டும்மென்ற ஒரு சிறந்த திட்டத்தை முதலில் வகுத்த பெருமை சிதம்பரனாருக்கே உரியதாகும். 1906ல் அவரால் ஆரம்பிக்கப்பட்ட ''சுதேசிக் கப்பல் கம்பெனி'' இந்தச் சிறந்த நோக்கத்துடனேயே தொடங்கப்பட்டதாகும். என்றாலும் அவருடைய திட்டம் வெற்றி பெற முடியாதபடி அரசாங்கம் அவரை நாட்டை விட்டே துரத்தி விட்டது. தீவாந்திரத் தண்டனை கொடுக்கப் பட்டது. கடலில் கப்பலோட்ட முயன்ற ஒரு தமிழன், கடல் நடுவே கப்பல்போல மிதந்து கொண்டு இருக்கும் ஒரு தீவில் சிறை வைக்கப் பட்டார்.

ஆறாண்டுகள் பொறுத்து வீரர் சிதம்பரனார் சிறையினின்று வெளியே வந்தபோது வறுமையென்னும் கொடிய பகைவனே அவரை வரவேற்றான். வறுமை அவரை ஆட்டிப் படைத்தது. அன்றாட வாழ்க்கையை நடத்துவதுகூட முடியாது போயிற்று. அவரை ஆதரித்த 'அன்பர்கள்' எல்லோரும் கைவிட்டு விட்டனர். விடுதலைக்காக ஒரு பெரிய அரசாங்கத்தோடு போராடிய சிதம்பரனார் கடைசியாக வறுமையோடு போராடி அதில் வெற்றி பெற முடியாமல் 1936-ல் உயிர் நீத்தார்.

எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று அவர் அன்று பாடுபட்டாரோ, அந்தக் காரியம் இன்று வெற்றிபெற்று விட்டது. 43 ஆண்டுகளுக்கு முன் ஓட்ட வேண்டுமென்று அவர் நினைத்த கப்பல் இன்று ஓடுகிறது. இது அவருடைய கனவை நனவாக்கும் ஒரு நற்செய்தியாகும்: தமிழ்மக்களுக்கு அவர் உண்டாக்கித் தந்த பெருமையாகும். பண்டைக் காலத்தில் கப்பலோட்டிப் புகழ்பெற்ற தமிழ் மக்களின் சிறந்த பண்பை,'வ.உ. சிதம்பரம்' என்ற கப்பல் நிலைநாட்டிவிட்டது.

ஒப்பற்ற சேவை புரிந்த சிதம்பரனாருக்கு நாடு காட்ட வேண்டிய நன்றியறிதலையும் செய்ய வேண்டிய கடமையையும் இதுவரை மறந்திருந்தது போல் இனியும் இருக்கக்கூடா தென்பதையும் இந்தச் சமயத்தில் நினைவூட்டுவதோடு, செய்ந்நன்றி கொல்லாத தமிழர் பண்பாட்டினை நிலை நாட்டிடவும், சிதம்பரனார் புகழ் என்றும் நிலைக்கவும், அவருடைய குடும்பம் மன வேதனையால் நொந்து போகாதபடி பார்த்துக் கொள்ளவும் இப்போதாவது தமிழ் மக்கள் முன்வந்து ஆவன செய்யவேண்டுமென்பதே எமது வேண்டுகோளும் விருப்பமுமாகும்.



## வ.உ.சியின் சமுதாயப் புரட்சிகள்

1. சகஜாநந்தா என்ற பிற்பட்ட வகுப்பினரைத் தம் வீட்டில் வைத்து, போதித்து, தமிழறிவு ஊட்டி, அக்காலத்தில் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் விடிவெள்ளி ஆனார்.

2. விருதுநகர் இராமையா தேசிகர் என்ற ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பிறவிக் குருடரைத் தம் இல்லத்தில் வைத்து ஆதரித்து, சான்றாண்மைக்குச் சான்று புகன்றார்.

3. வக்கீலாய் நின்று வழிப்பறி செய்யும் திக்கில்லாரைச் சாடினார்.

4. கையூட்டு வாங்கிய ஏகாம்பரம் என்ற துணை நீதிபதியையும் வாசுதேவராவ், பஞ்சாபிகேசவராவ் என்ற அதிகாரிகளையும் நீதி மன்றத்தின் முன்நிறுத்தி லஞ்சப் பேய்க்கு எதிராகப் போர் முரசு கொட்டி வெற்றி பெற்றார்.

5. 1927ல் கோவை பிராமணர் அல்லாதார் மாநாட்டிலும், மதுரை, சமூகச் சீர்திருத்த மாநாட்டிலும் கலந்து உணவு விடுதிகளிலுள்ள சாதி வேறுபாடுகளைக் களைய முயற்சி செய்தார்.

6. விதவை மறுமணம், கலப்புமணம் போன்ற முற்போக்குச் சீர்திருத்தங்களுக்கு ஆதரவளித்தார்.

# வ.உ.சி.யின் தமிழ்ப்பணி



1. எழுதிய நூல்கள்:

   1. மெய்யறிவு, 2. மெய்யறம், 3. எனது பாடல் திரட்டு, 4. வ.உ.சி. கண்ட பாரதி, 5. சுயசரிதை.

2. மொழிபெயர்ப்பு நூல்கள்:

   1. மனம்போல வாழ்வு, 2. அகமே புறம், 3. வலிமைக்கு மார்க்கம், 4. சாந்திக்கு மார்க்கம்.

3. உரை எழுதிய நூல்கள்:

   1. இன்னிலை, 2. திருக்குறள், 3. சிவஞான போதம்

4. பதிப்பித்த நூல்கள்:

   1. தொல்காப்பியம்—எழுத்ததிகாரம் (இளம்பூரணர் உரை)
   2. தொல்காப்பியம்—சொல்லதிகாரம் (இளம்பூரணர் உரை)
   3. சிவஞான போதம்.

5. அச்சு வடிவில் வந்த அரசியல் சொற்பொழிவு: "எனது அரசியல் பெருஞ்செயல்".

6. நடத்திய ஏடுகள்:

   1. விவேகபாநு 2. தமிழ் நேஷனல் பத்திரிகை, 3. இந்துநேசன்

7. அச்சில் வராத நூல்கள்:

   1. அழகும் ஆரோக்கியமும்
   2. ஆயுளை நீடிக்கும் ஆறு
   3. ஊழை வெல்ல உபாயம்
   4. சிவ மதம்
   5. விஷ்ணு மதம்
   6. புத்த மதம்
   7. இஸ்லாம் மதம்
   8. கிறிஸ்து மதம்
   9. மனித மதம்
   10. முக்தி நெறி
   11. The Universal Scripture
   12. திருக்குறள்—மணக்குடவர் உரை (பொருள்)
   13. திருக்குறள்—மணக்குடவர் உரை (இன்பம்)
   14. திலக மகரிஷி (இலங்கையிலிருந்து வெளிவரும் 'வீர கேசரி' நாளிதழின் ஞாயிறு மலரில் 1½ ஆண்டுக் காலம் எழுதிய தொடர் கட்டுரை)

## பெரிய தியாகி

திரு இராமசாமி நாயக்கரைப் பற்றி, நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவரைப் பற்றி ஐரோப்பாவிலே உள்ள பார்லிமெண்டில் பேசப்படுகிறது என்றால் நாயக்கரின் புகழைப் பற்றி நான் என்ன சொல்வது!

சுருங்கச் சொல்லின் நாயக்கரவர்கள் தமிழ் நாட்டின் எல்லாத் தலைவர்களையும்விடப் பெரிய தியாகி என்றுதான் சொல்ல வேண்டும்.

—கப்பலோட்டிய தமிழன்
வ.உ. சிதம்பரனார் (1928)

# சிதம்பரனார் மாவட்டம்

## சில தகவல்கள்

வட்டங்கள் .... 7

1. தூத்துக்குடி
2. ஸ்ரீவைகுண்டம்
3. திருச்செந்தூர்
4. சாத்தான் குளம்
5. கோவில்பட்டி
6. ஓட்டப்பிடாரம்
7. விளாத்திகுளம்

ஊராட்சி ஒன்றியங்கள் .... 12

1. புதுக்கோட்டை
2. ஸ்ரீவைகுண்டம்
3. கருங்குளம்
4. சாத்தான்குளம்
5. உடன்குடி
6. திருச்செந்தூர்
7. ஆழ்வார்திருநகரி
8. ஓட்டப்பிடாரம்
9. விளாத்திகுளம்
10. புதூர்
11. கோவில்பட்டி
12. கயத்தாறு









நகராட்சிகள் .... 2

1. தூத்துக்குடி
2. கோவில்பட்டி

வருவாய்க் கோட்டங்கள் .... 2

1. தூத்துக்குடி : தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், சாத்தான்குளம்
2. கோவில்பட்டி : கோவில்பட்டி, விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம்

வருவாய்க் கிராமங்கள் .... 457

ஊராட்சி மன்றங்கள் 408

பேரூராட்சிகள் .... 20

மாவட்ட மொத்த மக்கள் தொகை .... 13,50,581

| | | |
|---|---|---|
| ஆண்கள் | ... | 6,57,303 |
| பெண்கள் | ... | 6,93,278 |
| படித்தவர்கள் | ... | 7,57,530 |
| தாழ்த்தப்பட்டோர் | ... | 2,17,664 |

மக்கள்தொகை ஒரு சதுர கி.மீட்டருக்கு ... 291

மாவட்டத்தின் மொத்தப் பரப்பு: 4635.1 சதுர கி.மீ.

பயிரிடப்பட்ட பரப்பளவு ... 2,54,971 எக்டேர்

கால்நடைகள் ... 6,53,797




மாவட்ட நில அளவை அலுவலகம், திருநெல்வேலி.

## கல்வி நிலையங்கள்

| | | |
|---|---|---|
| ஆரம்பப் பள்ளி | ... | 1122 |
| உயர்நிலைப் பள்ளி | ... | 58 |
| மேல்நிலைப் பள்ளி | ... | 53 |
| தொழிற் கல்லூரி | ... | 9 |
| கலைக் கல்லூரி | ... | 8 |



## முக்கியச் சாலைகள்

தூத்துக்குடி—மதுரை

திருநெல்வேலி—தூத்துக்குடி—தேசீய நெடுஞ்சாலை 7ஏ

## தொழில்

முத்துக் குளிப்பு, உப்புத்தொழில்

தீப்பெட்டி தொழிற்சாலைகள்

தூத்துக்குடி அல்காலிக் கெமிக்கல்ஸ்

தாரங்கதாரா கெமிக்கல்ஸ்

நாசரேத் ஸ்பின்னிங் மில்ஸ்

பனைப் பொருள் பயிற்சி நிலையம்

தூத்துக்குடி துறைமுகம்

தூத்துக்குடி அனல் மின் நிலையம்

அரசாணை எண் 535, வருவாய்த்துறை, நாள் 23.4.86ன் படி மாவட்ட அமைப்பு நடைபெறுகிறது.

## வட்டம் வாரியாக மக்கள்தொகை

| | மொத்தம் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| தூத்துக்குடி | 2,89,680 | 1,47,557 | 1,42,123 |
| ஸ்ரீவைகுண்டம் | 1,83,864 | 88,063 | 95,801 |
| திருச்செந்தூர் | 2,64,194 | 1,23,618 | 1,40,576 |
| சாத்தான்குளம் | 1,00,707 | 46,857 | 53,850 |
| கோவில்பட்டி | 2,47,052 | 1,21,412 | 1,25,640 |
| ஓட்டப்பிடாரம் | 1,09,959 | 54,121 | 55,838 |
| விளாத்திகுளம் | 1,55,125 | 75,675 | 79,450 |
| மொத்தம் | 13,50,581 | 6,57,303 | 6,93,278 |



# மலர்கிறது சிதம்பரனார் மாவட்டம்

தமிழ்நாட்டில் இருபதாவது மாவட்ட மாகக் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பர னார் அவர்களின் திருப்பெயரைத் தாங்கி சிதம்பரனார் மாவட்டம் உதயமாகிறது. இம்மாவட்டத்திற்குப் பல சிறப்புகள் உண்டு. வ.உ.சிதம்பரனார் அவர்கள் இம்மாவட்டத் தில் ஓட்டப்பிடாரத்தில் பிறந்தவர். ஆங்கி லேயர் ஆட்சிக்கு எதிராக ஆரம்ப காலத்தில் எதிர்க்குரல் கொடுத்துத் தூக்கிலிடப்பட்ட வீர பாண்டிய கட்டபொம்மன் தோன்றிய ஊரும் ஓட்டப்பிடாரம். மகாகவி பாரதியார் பிறந்த ஊரான எட்டயபுரம் இம்மாவட்டத் தைச் சேர்ந்தது. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீக்ஷிதர் அவர்கள் இயற்கை எய்தியதும் இம்மாவட்டத்தைச் சேர்ந்த எட்டயபுரம் தான். ஆறு படைவீடு களில் ஒன்றான திருச்செந்தூர் இம்மாவட்டத் தில் உள்ளது. கிருத்தவர்களின் புனித ஆலய மான பரிசுத்தமேரி ஆலயமும் தூத்துக்குடியில் உள்ளது. தூத்துக்குடி, முத்துக்குளிப்புக்குப் பெயர் பெற்ற நகரம்.

''முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே
மொய்க்கும் வணிகர் பல நாட்டினர்
வந்தே''

என்று பாரதியாரால் பாராட்டப்பட்ட நகரம் தூத்துக்குடி.

செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்கள் திருப் பெயரில் ஒரு மாவட்டம் அமைக்கப்பட வேண்டும் என்ற மக்களின் நெடுநாளைய எண்ணம் நிறைவேற்றப்படுகிறது.

சிதம்பரனார் மாவட்டத்தை அக்டோபர் 19ஆம் நாள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்கள்.

சிதம்பரனார் மாவட்டம் 4635 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. மக் கள் தொகை 13,50,581 ஆகும். மாவட்டத் தலைமையிடமான தூத்துக்குடியில் 'ஸ்பிக்' உரத் தொழிற்சாலை, ஆல்காலிக் கெமிக்கல்ஸ், கனநீர்த் தொழிற்சாலை, அனல் மின் நிலை யம், மதுரை கோட்ஸ் ஆகியவை உள்ளன. திருச்செந்தூர் வட்டம் ஆறுமுகநேரியில் தாரங் கதாரா இரசாயனத்தொழிற்சாலை, கோவில் பட்டியில் லாயல் மில், மற்றும் லட்சுமி மில் ஆகியவை உள்ளன. இந்த மாவட்டத்தில் ஓர் பொறியியல் கல்லூரியும், ஓர் விவசாயக் கல்லூரியும், இரண்டு பாலிடெக்னிக்குகளும், ஓர் மீன்துறை கல்லூரியும், ஏழு கலைக் கல் லூரிகளும், இரண்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி களும் உள்ளன.

கோவில்பட்டியில் தீப்பெட்டித் தொழில் சிறப்புற விளங்குவது குறிப்பிடத்தக்கது. இதன் பயனாக வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு வசதி உள்ளது.

மொழிவாரி மாநிலம் ஏற்படுத்திய காலத் தில் திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்தில் ஓர் பகுதி திரு நெல்வேலி மாவட்டத்துடன் 1956ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது. அதுசமயம் கீழ்க்காணும் வட்டங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்தன:

1. திருநெல்வேலி, 2. தென்காசி, 3. அம்பாசமுத்திரம், 4. நான்குநேரி, 5. திருச் செந்தூர், 6. ஸ்ரீவைகுண்டம், 7. கோவில்பட்டி 8. சங்கரன்கோவில். பின்னர் நிர்வாக நலனை முன்னிட்டுக் கீழ்க்காணும் துணை வட்டங் கள், வட்டங்களாக உயர்த்தப்பட்டன:

1. இராதாபுரம், 2. சாத்தான்குளம், 3. பாளையங்கோட்டை, 4. விளாத்திகுளம், 5. ஓட்டப்பிடாரம், 6. தூத்துக்குடி, 7. சிவகிரி.

தற்போது பிரிக்கப்படாத திருநெல்வேலி மாவட்டத்தில் நான்கு கோட்டங்களும் பதி னாறு வட்டங்களும் உள்ளன. மாவட்டத்தில் முப்பத்தொரு ஊராட்சி ஒன்றியங்கள் உள் ளன.

இந்த விசாலமான திருநெல்வேலி மாவட் டத்தை மேலும் திறமையாக, விரைவாக அரசின் செயல் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு இரு மாவட்டங்களாகப் பிரிப்



**ரெ. ஆறுமுகம் இ.ஆ.ப.**
**தனி அலுவலர்,**
**சிதம்பரனார் மாவட்டம்.**

பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. திருநெல்வேலியைத் தலைநகரமாகக் கொண்ட திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடியைத் தலைநகரமாகக் கொண்ட சிதம்பரனார் மாவட்டம் எனப் பிரிக்கப்படவுள்ளது. திருநெல்வேலியைத் தலைநகரமாகக் கொண்ட திருநெல்வேலி மாவட்டம் 9 வட்டங்களும், 19 ஊராட்சி ஒன்றியங்களும், தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படவிருக்கும் சிதம்பரனார் மாவட்டம் 7 வட்டங்களும், 38 குறு வட்டங்களும், 12 ஊராட்சி ஒன்றியங்களும், 465 கிராமங்களும் அடங்கியுள்ளதாக இருக்கும். புதிய மாவட்டத்தில் தூத்துக்குடி, கோவில்பட்டி ஆகிய நகராட்சிகள் உள்ளன.

புதியதாக ஏற்படுத்தப்படுகிற சிதம்பரனார் மாவட்டமும், புதியதாக ஏற்படுத்தப்படுகிற தென்காசிக் கோட்டமும் அரசு நிர்வாகத்தை மேலும் திறமை வாய்ந்ததாகச் செய்யும். மக்களின் குறைபாடுகளை விரைந்து நிவர்த்தி செய்வதற்கு இந்தப் பிரிவினை மாற்றங்கள் உறுதுணையாக அமையும். பெரிய மாவட்டங்களைப் பிரித்து சிறிய மாவட்டங்களாகச் சீரமைப்பதன் மூலம் நிர்வாகச் சீர்மைக்கு வழிகோல இயலும். இது தமிழக அரசின் கொள்கை முடிவு. நிர்வாக இயல் வல்லுநர்களும் அவ்வாறே கருதுகின்றனர்.

## வ.உ.சி. புகழ்மாலை

**வல்லாளன் சிதம்பரனார் சிறையிற் பட்ட**
**வருத்த மெல்லாம் விரித்துரைக்கில் வாய்விட்டேங்கி**
**கல்லான மனத்தவரும் கண்ணீர் சொட்ட**
**கனல்பட்ட வெண்ணெய்எனக் கரைவார் இன்றும்!**

**—நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை**

**வளர்ச்சித் திட்டங்களை வளர்த்திடுவோம்!**

புதிதாக உருவாகும் சிதம்பரனார் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக அரசு பல புதிய திட்டங்களை மேற்கொள்ள இருக்கின்றது.

தூத்துக்குடி, திருச்செந்தூர் முதலிய கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழிலில் தீவிர வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

இந்தப் பகுதிகளில் உப்புத் தொழில் எப்போதும் உச்சம் பெற்றுள்ளது. ஆகவே, இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு மேலும் ஊக்கம் அளித்து உப்புத் தொழில் மேன்மேலும் சிறக்க திட்டங்கள் உருவாகும்.

இந்த மாவட்டத்தில் விளாத்திகுளம் மற்றும் சில பகுதிகள் வானம் பார்த்த பூமியாக உள்ளன. இந்தப் பகுதிகளில் வேளாண்மை வளர்ச்சிக்காக வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உதவியுடன் பல புதிய திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

நெடுஞ்சாலைத் துறையின் மூலம், கிராமங்களில் புதிய சாலைகள் அமைக்கவும், பழைய சாலைகளைச் சீரமைக்கவும் தீவிரப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூபாய் 10 கோடி செலவில் குடிநீர் வசதி செய்வதற்குரிய ஆய்வு தீவிரமாக மேற்கொள்ளப்படும்.

சிப்காட் மூலம் 1000 ஏக்கரில் மாபெரும் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் விரைந்து செயல்படத் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

தூத்துக்குடி அருகில் வாகைக்குளம் என்னும் பகுதியில் விமான நிலையம் அமைய, மத்திய அரசின் ஆணைகள் பெற தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாவட்டப் பணிகள் தொடங்கி ஓராண்டுக் காலத்திற்குள், அரசு ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

கழிவுநீர் அகற்றுவதற்கும், குடிநீர் நல்ல முறையில் வழங்குவதற்கும், சாலை வசதிகள் அமைப்பதற்கும் உரிய சிறப்பான திட்டங்கள் தூத்துக்குடி நகராட்சி மூலம் நிறைவேற்றப்படவுள்ளன.

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை அதிகரிக்கும் திட்டம் கதர்-கிராமத் தொழில் மற்றும் கைத்தறித் துறையின் மூலம் நிறைவேற்றப்படவுள்ளது.

சிதம்பரனார் மாவட்டத்தின் தலைநகரான தூத்துக்குடியிலும், இம்மாவட்டத்தின் பிறபகுதிகளிலும் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள், மக்கள் நெஞ்சங்களை மலரச் செய்வது உறுதி.

ஓட்டப்பிடாரத்தில் வ.உ.சியின் பிறந்த இல்லம் நினைவுச் சின்னமாகப் பல்லாண்டுகளாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இன்று ஒரு மாவட்டமே, அவர் பெயரால் நினைவுச் சின்னமாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

''செல்விருந்தோம்பி வருவிருந்து'' எதிர் பார்க்கும் வேளாளர் மரபைச் சேர்ந்த சிதம்பரனார், தேசத்தைக் காக்கும் முயற்சியில் சிறைப்பட்டதை மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வியந்து பாராட்டியிருக்கிறார்.

''வேளாண் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதைவிரைவிற் கேட்பாய்நீ
வருந்தலைஎன் கேண்மைக் கோவே!
தாளாண்மை சிறிதுகொலோ யாம்புரிவேம்
நீஇறைக்குத் தவங்கள் ஆற்றி
வாளாண்மை நின்துணைவர் பெறுகெனவே
வாழ்த்துதிநீ வாழ்தி! வாழ்தி!''

பாரதியின் வரிகளைப் பாடி நாமும் வ.உ.சி.யின் புகழ்பாடுவோம் வாரீர்! சிதம்பரனார் மாவட்டத்தின் சிறப்பு மிகு வளர்ச்சிப் பணிகளில் சீரிய நோக்குடன் நாம் அனைவரும் ஈடுபடுவோம் வாரீர்! வாரீர்!!

# வீரச் சிதம்பரம் பிள்ளை

—கவியோகி சுத்தானந்த பாரதியார்





வீரச்சி தம்பரம் பிள்ளை—தமிழ்
  வித்தகன்; முத்தமி ழன்பன்!

பாரத சுதந்திரச் சிங்கம்—நல்ல
  பண்பாடு மிக்கவ ருங்குணத் தங்கம்!

எங்கள்சி தம்பரம் என்னில்—நெஞ்சில்
  ஏறிடும் வீரக்க னலெழுந் தாங்கே!

பொங்கிடும் தேசாபி மானம்—அச்சம்
  போயொழி யும்இன்பப் புன்னகை மலரும்!

திலகரின் வலக்கரம் ஆனான்—அவன்
  செந்தமிழ் நாட்டுச் செயமுர சானான்!

பொலமிகு பாரதி பாட்டில்—வீரப்
  புலவனின் உள்ளமே துள்ளிடக் காண்போம்!

வங்கம்ந டத்திய சிங்கம்—ஓம்
  வந்தேமா தரமெனும் மந்திரம் பொங்கும்!

எங்கள்சு தேசி இயக்கம்—வெல்லும்
  என்றுமுன் சென்றனன் இடர்களி னூடே!

காலில் விலங்குகள் பூட்டி—கடுங்
  கார்சிறை யிட்டங்கு செக்கும் இழுக்க

வேலைசெய் வேர்வைத் துளிகள்—நாட்டு
  விடுதலைப் பயிருக்கு விண்மழை போலும்!

தியாகச்சி தம்பரம் என்னில்—எங்கள்
  செய்கையி லேஒரு திட்பங்க னலுது!

வேகம் பிறக்குது வாழ்வில்—ஆண்மை
  வீறுபெ ருகுது விடுதலைப் போரில்!

திருக்குற ளேஅவன் மூச்சு—வீரத்
  திலகரின் உள்ளத் துடிப்பவன் பேச்சு!

உருக்குமென் னெஞ்சத்தை அன்னோன்—சொன்ன
  உரைகளைப் பருகியு யர்ந்தனன் முன்னே!

அத்தகை நண்பனின் றெங்கே?—சற்றும்
  அச்சமில் லாதஅ றிஞனிங் கெங்கே?

சித்த வுறுதியும் எங்கே?—ஒரு
  சிதம்பரத் திற்கிணை செப்புவ தெங்கே?





# இப்போது! பேன்மின்த்*

(மோரென்ட்டல் சிட்ரேட்)

## நாக்குப் புழுக்களை அழிக்கிறது.
## நாக்குப் புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பு.



நாக்குப்புழுக்கள்—உங்கள் கண்ணுக்குத் தெரியாத எதிரிகள்.

கால்நடையின் வயிற்றிற்குள் நாக்குப் புழுக்கள் வளர்ந்து வாழ்கின்றன. அவை கால்நடையின் ஊட்டச் சத்துக்களை. உண்ணுகின்றன. இதன் பலனாக கால்நடை மெலிந்து, உற்பத்தி குறைந்து விடுகிறது, லாபம் குறைந்து விடுகிறது.

மேய்ச்சல் தளத்திலே கால்நடைகள் மேயும்போது நாக்குப் புழுக்கள் தொற்றிப் பரவுகின்றன. அடிக்கடி புழு நோய் வருவதால், நிரந்தரமான, புழுவே அற்ற கால்நடைகள் இருக்க வாய்ப்பே இல்லை எனலாம். ஆகவேதான், கால்நடை மருத்துவர்கள், 3-4 மாதங்களுக்கொரு முறைப்புழுக்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்கின்றனர்.

பேன்மின்த் நாக்குப்புழுக்களை அழிக்கிறது நாக்குப்புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பாக.

பேன்மின்த், உலகெங்கிலும் கால்நடைகளைத்தாக்கும் நாக்குப் புழுக்களை ஒழிக்கிறது.

பேன்மின்த், பாதுகாப்பானது பலகீனமான சோர்வான, கால் நடைகளுக்கும், சினையுள்ள மற்றும் கன்று ஈன்ற கால்நடைக்கும். இதர சில புழுக்கொல்லிகளை போல் இது, பால் நிறத்தில் மாற்றமோ, தீய விளைவுகளோ ஏற்படுத்தாது. பேன்மின்த் கொடுத்த பின்பும், பாலினைப் பயன்படுத்தலாம்.

இப்போது, பேன்மின்த் எளிதான வசதியான புழுக்கொல்லி.

உபயோகிக்க எளிதானது பேன்மின்த்—காரணம், உடனடி உபயோகத்திற்கான கரைசல் மாத்திரை, உருண்டை ஆகிய வடிவங்களிலே கிடைக்கின்றது.

கால்நடை மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

கரைசல் கிடைக்கிறது
100 மி.லி, 500 மி.லி. மற்றும் 4.5 லிட்டர் பேக்குகளில்

சிறிய கால்நடைக்கு மாத்திரைகள்.




பெரிய கால்நடைக்கு உருண்டைகள்.

ஒப்பற்ற **பேன்மின்த்**

புழுக்களை அழித்திடும் ஆரோக்கியம் அளித்திடும்

*யு.எஸ்.ஏ .:.பைஸர் இன்கார்ப்பரேட்டடின் ட்ரேட்மார்க்

**pfizer**

கேட்பதன் பேரில் மேலும் தகவல்கள் கிடைத்திடும்.

# என் தந்தை

— வ.உ.சி. சுப்பிரமணியம் பேட்டி

கேள்வி : பாரதம் சுதந்திரம் அடைந்து வெள்ளி விழாக் கொண்டாடிவிட்டது. ஒரு தேசபக்தரின் புதல்வர் என்ற முறையில் இந்த நிகழ்ச்சியைப் பற்றித் தங்களின் கருத்து என்ன ?

பதில் : 'ஒரு மனிதனுடைய ஆன்மாவிற்கு விடுதலை மோட்சம்' என்று சொன்னார் சுப்ரமண்யசிவா. அதுபோல் நமக்கு விடுதலை பெற்ற, இந்த இருபத்தைந்து ஆண்டுகள் என்பது குறுகிய காலம். இக்காலத்தில் நாடு அடைந்த முன்னேற்றம் பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

சுதந்திரம் வாங்கித் தந்த தியாகிகள் சுகமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்திய அரசாங்கமும், தமிழ்நாடு அரசாங்கமும் சுதந்திரத் தியாகிகளுக்குச் செய்யும் நன்மை, அவர்கள் வாழ வழி செய்கிறது என்று நினைக்குங்கால், நாம் மட்டுமல்ல எல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

கேள்வி : இளம் பிராயத்தில் தங்கள் தந்தை சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொழுது ஏதேனும் மறக்க முடியாத நிகழ்ச்சியைக் கூற முடியுமா?

பதில் : அவர் புகழுடம்பு எய்திய பொழுது எனக்கு வயது 11. அப்போது நான் அறியாச் சிறுவன்.

ஒருமுறை சிவா உயர்நிலைப் பள்ளியில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. தந்தையார் பேசிய அக்கூட்டத்திற்கு என்னையும் அழைத்துச் சென்றார். அறம் செய்ய வேண்டிய கடமையைப் பற்றி நெடுநேரம் பேசிய அவர் அருகில் உட்கார்ந்திருந்த நான் 'எங்கள் வீட்டிற்குப் பிச்சைக்காரர்கள் வந்தால் வேலையாயிருக்கு போ என்று சொல்லி விடுகிறார்கள். இப்படி இல்லை என்று கூறலாமா' எனக் கேட்டுவிட்டேன். உண்மை நிலவரத்தை எடுத்துரைக்க ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்ற மகிழ்ச்சியில் என் தந்தை விளக்கம் கூறினார்கள்.

'வாரத்தில் ஒருநாள் வரும் பிச்சைக்காரர்களுக்கெல்லாம் இல்லை என்னாது தாம் உதவி வருவதாகவும், தினமும் தர்மம் செய்வது அதன் குறிக்கோளை நிறைவேற்றுமா என்ற ஐயப்பாடு காரணமாகவே தாம் செய்யாதிருப்பதாகவும், ஆனால் இன்று முதல் ஒரு பெரிய பாத்திரம் அளவில் (பெட்ரோல் டின்) முழுவதும் அரிசியை நிரப்பி எனது மகனிடம் கொடுத்து தினமும் வரும் பிச்சைக்காரர்களுக்கும் போடும்படி ஒப்படைத்து விடுகிறேன் என மகிழ்ச்சி பொங்கக் கூறினார்.



வ.உ.சி, தம் இரண்டாம் மனைவியார் மீனாட்சி அம்மையாருடன்

கேள்வி : செக்கிழுத்த சிதம்பரனார் என்று தங்கள் தகப்பனாரைப் பற்றி புகழ்ச்சியாகக் கூறுவார்கள். அந்த முக்கியமான சம்பவம் பற்றி அவர் புதல்வர் என்ற முறையில் என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : திரு. டி. கே. எஸ். சகோதரர்கள் தேசபக்தர் சிதம்பரனார் என்று நடத்திய நாடகத்திலும், திரு சிவாஜி அவர்கள் நடித்த கப்பலோட்டிய தமிழன் என்ற படத்திலும் அவர் செக்கிழுத்த காட்சியைக் கண்டு மிகவும் மனம் நெகிழ்ச்சியுற்றேன். எனது தகப்பனார் பட்ட துன்பம் எனக்குத் தெரியாது. மாட்டுக்குப் பதில் மனிதர்களைப் போட்டுச் செக்கிழுப்பதைப் படத்தில் பார்த்த பிறகுதான் அந்தத் துன்பம் எத்தகையது என்று உணர முடிந்தது.

கேள்வி : தன் நாட்டிற்காக உடல், பொருள், ஆவி ஆகிய எல்லாவற்றையும் ஈந்த தங்கள் தந்தை இன்று இருந்தால் இந்நாட்டு நிலைபற்றி என்ன நினைப்பார் எனத் தாங்கள் கூற முடியுமா?

பதில் : கற்பனையான கேள்வி, எனக்கு எட்டியமட்டில் தான் இதற்குப் பதில் சொல்ல முடியும். எனது தகப்பனார் குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர். ஆழ்ந்த சமயப் பற்று உடையவர். பெரிய சைவசித்தாந்தி. இன்று நாட்டில் உள்ள இன்னல்கள் பலவற்றிற்கு, இளைஞர்களிடம் முறையான நெறியையும் சமய அறிவையும் அரசு வளர்த்

# தென்னாட்டு வீரதிலகன்

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை



'அஞ்சுவனோ! வெள்ளையரின் ஆட்சியொழிப்பேன்' என்று
வஞ்சினம் கூறிநின்ற மாவீரன்— விஞ்சுபுகழ்
செந்தமிழ்ச் செம்மல் சிதம்பரப் பேரண்ணலைநாம்
வந்தனை செய்வோம் மகிழ்ந்து.

கைநோவக் கால்நோவக் கல்லுடைத்துச் செக்கிழுத்து
மெய்சோர்ந்தும் ஊக்கம் விடாதுநின்ற—ஐயன்
சிதம்பரம் அன்றுசிறை சென்றிலனேல், இன்று
சுதந்திரம் காண்பாயோ சொல்.

கப்பலை ஓட்டிக் கடுங்காவற் காளாகி
உப்பிலாக் கூழ்உண்டுடல் மெலிந்தோன்—ஒப்பிலாத்
தென்னாட்டு வீர திலகன் சிதம்பரத்தின்
நன்னாமம் வாழ்த்துக என் நா.

திருந்தால் தோன்றியிருக்கமாட்டா எனக் கருதியிருப்பார்.

கேள்வி : அன்று நீங்கள் பார்த்து அவர் செய்த தொண்டினைப் பற்றி என்ன நினைத்தீர்கள். இன்று அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று சொல்ல முடியுமா?

பதில் : நான் சிறு வயதாயிருக்கும் பொழுது அவர் செய்த தொண்டை ஓரளவுக்குத்தான் புரிந்து கொண்டேன். ஓரளவுக்குப் பெரியவனானவுடன் ஏதோ நம் தந்தை மற்றவர்கள் புகழும் வண்ணம் செயல் செய்திருக்கிறார் என்று அறிந்தேன். ஆனால் இன்று அவர் செயற்கரிய செயல்களைச் செய்து நாட்டிற்காகத் தன் உடலையே ஈந்தவர் என்று அறிந்து மிகவும் பெருமைப்படுகிறேன்.

கேள்வி : வேறு ஏதாவது நிகழ்ச்சிகள் உங்கள் தகப்பனாரின் வாழ்வில் நடந்து உங்கள் நினைவில் இருந்தால் அதைச் சொல்ல முடியுமா?

பதில் : அவர் இறக்கும் தறுவாயில் இருக்கும்போது அவர் விரும்பியது இரண்டே இரண்டுதான். ஒன்று விடுதலை அடைந்த நாட்டைக் காணவில்லையே என்ற ஏக்கம் ஒரு பக்கம். தாம் உரை எழுதிய திருக்குறள் அறத்துப்பால் மட்டும் திருச்செந்தூர் முருகன் சன்னதியில் புத்தக வடிவில் வெளியிடப்பட்டது. பொருட்பால், காமத்துப் பால் ஆகியவற்றுக்கான உரை புத்தகவடிவில் வெளி வரவில்லையே என்ற வருத்தம் ஒரு பக்கம்.

எனது தந்தை வ.உ.சி. மறைந்து அவர் சடலத்தைச் சில தெருக்களின் வழியாகக் கொண்டுபோக வேண்டும் என்றிருந்த நேரத்தில், அதே தெருக்களின் வழியாக அன்று கவர்னராக இருந்த சர் ஆர்தர் ஹோப் ஊர்வலமாக வர ஏற்பாடாகி இருந்தது. சர் ஆர்தர் அவர்கள் இதை எப்படியோ அறிந்து கொண்டு தேசத் தலைவர் திரு. வ.உ.சி. அவர்களின் சடலம் அவ்வழியே செல்லட்டும் என்று சொல்லி தாம் வேறு வழியாகச் சென்று எனது தந்தைக்கு மரியாதை செலுத்தினார்.

திரு ராஜன் பாபு தாம் நாட்டிற்குச் சேவை செய்யவும் நாட்டிற்காக உழைக்கவும் நாட்டுப் பற்று உண்டானதே செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. பத்திரிகையில் எழுதிய வழக்குச் செய்தியைப் படித்துத்தான் என மனம் திறந்து கூறினார்.

நன்றி : புக்ஸ் வொர்ல்டு வெளியீடு



# நன்றி மறக்காத வ.உ.சி

டி. எஸ். சொக்கலிங்கம்

இந்த உலகம் ஒரு விசித்திர மான உலகம். 1912ல் விடுதலை யான வ.உ.சிதம்பரம் பிள்ளை யவர்கள் 1936 நவம்பர் 18-ஆம் தேதி காலமானார். 24 வருஷங்கள் தமிழ்நாட்டில் இருந்தார். கப்பலோட்டிய தமிழரின் பெருமையை அந்த 24 வருஷங்களில் அறிந்தவர்கள் தொகை ரொம்ப சொற்பம். அவர் நம்மை விட்டுப் பிரிந்த பின்னர்தான் அவருடைய புகழ் மேலோங்க ஆரம்பித்தது. அவர் உயிருடன் இருந்த 24 வருஷங்களில் கிடைத்த புகழைவிட, அவர் இறந்து 20 வருஷங்களில் அவருக்குக் கிடைத்த புகழ் பத்தாயிரம் மடங்கு அதிகமாய் இருக்கும்.

உயிரோடு இருக்கும்போது மதிப்பிட முடியாத இந்தக் குணம் தமிழருக்கு மட்டும்தனிப் பட்டதல்ல. உலக , மக்களில் பெரும்பாலோருக்கும் பொதுவானது. ஆனால் நன்றி மறக் காத குணம் பெரும்பாலோருக்கு இல்லாவிட்டாலும், சிறுபான்மையோருக்கு நிச்சயமாக உண்டு. அவர்களைத்தான் 'மாந்தர்களில் பெரியோர்கள்' என்று வாழ்த்த வேண்டும். நமது பிள்ளையவர்களை அந்தப் பெரியோர் கூட்டத்தில் சேர்க்க வேண்டும். ஏனெனில் செய்ந்நன்றியைப் பூரணமாக அவர் உணர்ந்தவர்.

யாராவது பெரிய நன்மை செய்தால், அதைப் பாராட்டுவதற்காகக் குழந்தை பெற்று அவர் பெயரிட வேண்டும் என்று சொல்வது தமிழ்நாட்டில் வழக்கம். அதைப் பிள்ளையவர்கள் செயலில் காட்டி, தமிழர்களின் மதிப்பை இன்னும் உயர்த்தினார். கப்பல் கம்பெனியை ஆரம்பிப்பதற்குத் தமக்குப் பேருதவியாக நின்ற ஆறுமுகம் பிள்ளையின் பெயரைத தமது புத்திரர்களில் ஒருவருக்கு வைத்தார். கோவை சிறைவாசத்தின்போது தமக்கு உதவியாய் இருந்த சுப்பிரமணிய முதலியார் பெயரை மற்றொரு புத்திரருக்கு வைத்தார். அவருக்குப் பல சமயங்களில் உதவி புரிந்த தென்னாப்பிரிக்கா வேதியப் பிள்ளையின் ஞாபகார்த்தமாகத் தமது குமாரிகளில் ஒருவருக்கு வேதவல்லி என்று பெயரிட்டார். தாம் மீண்டும் வக்கீல் தொழில் செய்தற்குத் தம்மில் உதவியாய் இருந்த ஜஸ்டிஸ் வாலஸின் ஞாபகார்த்தமாகத் தமது புத்திரர்களில் ஒருவருக்கு வாலீஸ்வரன் என்று பெயரிட்டார்.

வ.உ.சி.யைப் பார்த்தாலே பார்க்கிறவர்களுக்கு அவரிடம் மரியாதை ஏற்படும். பேசினாலே ஒவ்வொருவருக்கும் அளவற்ற தன்னம்பிக்கையும் வீரமும் ஏற்படும். பேச்சென்றால் வெட்டொன்று துண்டு இரண்டுதான். வழவழா விவகாரம் அவருக்குப் பிடிக்காது. யாரையும் அன்போடு வரவேற்பார். புன்சிரிப்போடு பேசுவார். தமிழ்நாட்டின் தவப்பயனாக அவர் அவதரித்தார் என்று சொல்வது வெறும் உபசாரமல்ல. முழு உண்மை; இன்று தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் தேசபக்திக்கும், அரசியல் விழிப்புக்கும் அஸ்திவாரமாய் நிற்பது வ.உ.சி.யின் தியாகமும், சேவையுமேயாகும்.

நன்றி: 'திங்கள்' (1957)

## சிறையில் இருந்தபோது, சுதேசிக் கப்பல் கம்பெனியாருக்கு வ.உ.சி. எழுதிய மடல்

"சகோதரர்களே! நான் இப்பொழுது சிறையில் உள்ளேன்: நாளை என் கதி என்ன ஆகுமோ தெரியாது. ஆகையினால் சகோதரர்களாகிய நீங்கள் எல்லோரும் என்மேல் காட்டும் அனுதாபத்தையும், அன்பையும் நமது கப்பல் கம்பெனியின் மீது காட்டுங்கள். இந்தக் கம்பெனியானது பங்காளிகளின் தனலாபத்திற்காக ஸ்தாபிக்கப்பட்ட வியாபாரக் கம்பெனி என்றெண்ணாமல், நமக்கு ஆருயிரினும் இனிய பாரதமாதாவாகிய தெய்வத்தின் பரிசுத்த ஆலயமாகவும், தேவஸ்தானமாகவும், தருமமாகவும் கருதி, மாதுர்பக்தியுடனும், தேசாபிமானத்துடனும் உழைக்க வேண்டும். இந்தச் சுதேசிக் கம்பெனி அந்நிய விரோதிகளின் சூழ்ச்சிக்குத்தான் வெற்றி பெறுமானால் அது கேவலம். நாணய ரூபமான லாபமன்று. ஆனால் நாம் இதுவரை பிறரிடம் விற்பனை செய்து கொண்டு வந்த ஸ்வதந்திர சுயேச்சை முதலிய அதிக தனங்களைக் கைப்பற்றியடைந்தாற் போன்ற ஜாதிய ஸ்வதந்திர லாபமாகும்.

—சுதேசமித்திரன் (10.6.1908)




SAA/NIA/2802/TM

முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

(ஜெனரல் இன்ஷ்யூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**

# நான் கண்ட வ.உ.சி.

**முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம்**

திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தமிழ்நாட்டுத் தேச பக்தர்களுள் ஒருவர். தேச பக்தர் என்றாலே திரு பிள்ளை அவர்களைத்தான் குறிக்கும். நாட்டின் மீது அவருக்கு உள்ள பற்று உள்ளபடியே அளவைக் கடந்தது எனக் கூறலாம்.

**பெரியார் காந்தியடிகளுக்கு முன்பே திரு பிள்ளை இந்தியாவில் தேச பக்தராக விளங்கியவர்.** உலோக மான்ய பாலகங்காதர திலகர் அவர்களின் அரசியல் மாணவர் ஆவர். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தொண்டு செய்திருந்த காலத்திலேயே திரு பிள்ளை அவர்கள் இந்தியாவில் தேசத்தொண்டு செய்தவர்கள்.

பலமுறை சிறை சென்றவர்கள். அவர் செய்த குற்றமெல்லாம், இந்நாட்டின்மீதும், மக்களின் மீதும் அன்புகொண்டது ஒன்று தான். இக்காலத்தில் சிறைக்குச் செல்ல விரும்புவோர் பலருக்கு நன்கு தெரியும், முதல் வகுப்பும் முந்திரிப்பருப்பும், அல்வாவும், ஆரஞ்சுப் பழமும் கிடைக்குமென்று. அந்தக் காலத்தில் அனைவருக்கும் தெரியும், செக்கு இழுத்துச் சீரழிய வேண்டுமென்பது. கற்கள் உடைபடச் செய்ய வேண்டும்; இன்றேல் பற்கள் உடைபட வேண்டும். குத்துவதெல்லாம் நெல்லாக இருக்கும். உண்பதெல்லாம் களியாக இருக்கும். இக்காலம் சிறைக்குச் சென்றவர்கள் போற்றுதலும் பூமாலையும் பெறுகிற காலம்; அக்காலம் தூற்றுதலும், துயரமும் பெறுகிற காலம். முடிவாகக் கூறவேண்டுமானால் அக்காலத்தில் எல்லாச் சாதியினரும் சிறைக்குச் சென்றவர்களை வெறுத்துச் சமூக பகிஷ்காரம் செய்த காலமது எனக் கூறலாம். அப்படிப்பட்ட காலத்தில்தான் திரு பிள்ளை அவர்கள் சிறை புகுந்தார்கள்; செக்கும் இழுத்தார்கள்; களைப்பு மிகுதியினால் குடிக்கத் தண்ணீர் கேட்டுத் தண்ணீர் பெறாமல் சவுக்கடியே பெற்றார்கள். சில நாட்கள் அல்ல; பல ஆண்டுகள், நாட்டுப் பற்றுக் காரணமாக உயிர் போகும் வேதனை பெற்று வாடி வதங்கி வருந்த உழைத்தவர் திரு பிள்ளை அவர்கள் ஆவர்.

படிப்பு இல்லாமல் தேசத் தொண்டு செய்யப் போனவரல்ல அவர்; அக்காலத்திலேயே கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர்கள்; தொழிலில்லாமல் தேசத் தொண்டு செய்யப் புறப்பட்டவர் அல்ல அவர்; வக்கீல் தொழில் செய்து கொண்டிருந்தவர். வருமானமில்லாமையால் தேச பக்தி காட்டப்புறப்பட்ட வக்கீல்களைச் சேர்ந்தவர் அல்ல அவர்; தொழிலில் நல்ல வருமானத்தைப் பெற்று வந்தவர். புகழுக்கும் பெருமைக்கும் ஆசைப்பட்டுப் பொதுத்தொண்டு செய்யப்புறப்பட்டவர் அல்ல அவர்; எவ்வளவு கத்திப் பேசினாலும், இந்துவும், சுதேசமித்திரனும் ஏழு எட்டு வரிகூட எழுதாத காலம் அது. அப்படிப்பட்ட காலத்தில்தான் இப்படிப்பட்ட பிள்ளை அவர்கள், **தேசத் தொண்டு செய்து வந்தார்கள். அவரது அருஞ்செயலையும், பெருங்குணத்தையும், உள்ளத் தூய்மையையும் உழைப்பின் சிறப்பையும் விளக்க இதைவிட வேறெதுவும் கூற வேண்டியதில்லை.**

உயர்ந்த அறிவாளிகள், உயிரோடிருக்கும்போது, அவர்களைச் சிறிதும் மதியாமல், அறிவைப் போற்றாமல், செயலை வாழ்த்தாமல், நடத்தையைப் பின்பற்றாமல், வருந்தும்போது ஒரு வேளை உணவுக்கும் வழி செய்யா



மல், மாண்ட பிறகு மணிமண்டபம் கட்டுவதும், காலடிபட்ட மண்ணை எடுத்துக் கண்களில் ஒத்துவதும், 'மாண்டாயோ மன்னனே' என மாரடித்து அழுவதும், படம் திறப்பதும், பாக்கள் பாடுவதும், பூமாலை சாற்றிப் போற்றிப் புகழ்வதும் ஆகிய பழக்கத்தைக் கொண்ட இப்பாழாய்ப்போன தமிழ் நாட்டில்தான் திரு பிள்ளை அவர்களும் பிறந்தார்கள். அதனாலேயே அவர்களும் இக்கூற்றுக்கிலக்கானார்கள்.

இன்னும் ஒரு படி தாண்டி, வாழ்ந்தபோது ஸ்வது கொண்டிருந்தவர்கள் மாண்ட பிறகு மாறி நாட்டிற்கு அவர் பெயரும், ஊர்க்கு அவர் சிலையும், வேண்டுமென ஊருக்கு முன்னே ஓடோடி ஆலோசனை கூறும் மக்களுள்ள இத்தமிழ்நாட்டிலே திரு பிள்ளை அவர்கள் பிறரால் வையப் பெறாமலும் வாழ்த்தப் பெறாமலும் வாழ்ந்து வந்தது ஒரு சிறப்பேயாகும். திரு பிள்ளை அவர்களின் பேச்சு இரத்தத் துடிப்பை அல்ல, எலும்புகளையும் துடிக்கச் செய்யும். உணர்ச்சி கலந்த அரசியல் ஆவேசப் பேச்சுக்கள் திரு பிள்ளை அவர்களோடு மறைந்து ஒழிந்தன.

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகள் தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்குச் செல்லும் கட்டணத்தை உயர்த்தித் தமிழ்நாட்டு வர்த்தகத்திற்கே கேடு விளைவித்தன. இதனையறிந்த திரு பிள்ளை அவர்கள், அவர்களோடு போராடியும், நியாயத்திற்கு இணங்க மறுத்ததனால் அவர்களோடு போட்டியிட்டும் தானே ஒரு கப்பலை ஓட்டித் தமிழ்நாட்டு வர்த்தகத்திற்குத் தொண்டு செய்தார்கள்.

அவர் ஒரு தொழிலாளர் தலைவர். தொழிலாளர் போக்கைத் தொடர்ந்து போகும் தலைவராயில்லாமல், தொழிலாளரைத் தன் போக்கில் நடத்திச் செல்லும் தலைவராயிருந்தவர்.

அவர் ஒருமுறை சிறைசென்ற போது தூத்துக்குடி இரயில்வே நிலையமும் சாக்கார் கட்டிடங்களும் தூள் தூளாக்கப்பட்டன. நெருப்புப் பொறிகளும் பறந்தன. அரசாங்கமே நடுங்கி அஞ்சுகின்ற அளவுக்கு அவர் ஓர் ஆபத்தான மனிதராகக் கருதப்பட்டார்.

அவருடைய தமிழ்ப் பற்று தமிழ்நாட்டிலே நன்கு பதிக்கப் பெற்றிருக்கிறது. அதுதான் ''திருக்குறள் வ. உ. சிதம்பரம் பிள்ளை பதிப்பு'' என்பதாகும். இது இன்னும் நம்மிடையே இருந்து கொண்டு அவர்களையும் அவர்களது தமிழ்ப்பற்றையும் நினைப்பூட்டி வருகின்றது.

திரு பிள்ளை சிறையிலிருப்பார். வீட்டிலிருந்து செய்திவரும். வருகின்ற செய்தி''குழந்தைக்குத் துணியில்லை; உணவுக்கு வழியில்லை'' என்றிருக்கும். கண்கள் கலங்கும். மனம் கலங்காது. இத்தகைய செய்திகள் பலவற்றை அரசியல் உத்தியோகஸ்தர்களே அவரிடம் அனுப்பி வைப்பார்கள். காரணம் எந்த வகையிலாயினும் மன்னிப்பைப் பெற்று விடுதலை பெற்று வெளியேற வேண்டுமென்பதுதான். இரு முறை ஆயுட்காலத் தண்டனை, அந்தமான் தீவுக்கு நாடு கடத்தும் தண்டனைகளைப் பெற்று, செக்கிழுத்து வாடிவதங்கி அடைத்துப் போன காதுகளுக்கு இச்செய்திகள் எட்டும். மடிவதில் மனம் கொண்டாரேயன்றி மன்னிப்பதில் மனம் கொள்ள வில்லை.

ஒரு நாட்டுத் தலைவன் மனைவியையும் மக்களையும் காப்பாற்றத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாமையினால் அவர்கள் இணங்கி உதவி செய்ய வில்லை. அவர் வாழ வகையின்றி வருந்தினார். ''இப்படிப்பட்ட மக்களுக்காகச் சிறை புகுந்து, செக்கிழுத்து மடிவதும், தன்னை நம்பியுள்ள மனைவி மக்களை இப்படிப்பட்டவர்களிடம் உயிரோடு ஒப்புவித்து அவர்களையும் மடியச் செய்வதும் நியாயமாகுமா?'' என்று சிறையில் பல ஆண்டுகள் எண்ணி எண்ணி வருந்தி நொந்தார்கள். கடைசியாக ஒருநாள் கோர்ட் அவருக்கு மன்னிப்பு அளித்தது. மீண்டும் வக்கீல் தொழிலை நடத்தினார்கள். திரு பிள்ளை அவர்களோடு சேர்ந்து நான்கு கூட்டங்களில் பேசியிருக்கிறேன். நான் பேசும் சிலஊர்களுக்கும் அவர்கள் வந்திருக்கிறார்கள். தமிழுக்காக அவர்மீது எனக்கு அளவுகடந்த அன்பு உண்டு. அதற்காக என் மீது அவருக்குப் பற்றுதல் உண்டு. தமிழ் ஒன்றே எங்களைப் பிணைத்தது.

அரசியலிலே நாங்கள் இருவரும் மாறுபட்ட கொள்கையுடையவர்கள், மாறுபட்ட இயக்கங்களைச் சார்ந்தவர்கள். ஒரு நாள் தட்டப்பாறையில் சந்தித்து ''உங்களைப் போன்றவர்கள் ஜஸ்டிஸ் கட்சியை விட்டுக் காங்கிரஸ் கட்சிக்கு வந்து சேரவேண்டும்'' எனக் கூறினார்கள். எனது இளமை முறுக்கினாலும், இரத்தத் திமிரினாலும் அவர்களைக் கடுமையாகத் தாக்கிக் கடுஞ்சொற்களைக் கூறிவிட்டேன்

"தங்கள் அறிவும், திறமையும், உழைப்பும், தமிழர் நலனுக்குப் பயன்படாமல் அறியாமையின் காரணமாகப் பிறர் நலனுக்குப் பயன்படுகிறது. அத்தவற்றை நானும் செய்ய வேண்டுமா?'' என்பதுதான். இதற்காக அவர்கள் எனக்களித்த தண்டனை - அவர்களின் வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்று பலமணி நேரம் நிலைமையை விளக்கி, எனது கருத்தை மாற்றி அவர் தவறு செய்யவில்லை என மெய்ப்பித்ததுதான். பொதுவாக அவர் உள்ளத்தைத் திறந்து காட்டி, தம்முள்ளத்தே மறைத்து வைத்திருந்த பல செய்திகளையும் கூறிக் கண்கலங்கினார்கள்.

வருந்தினேன். எனது வலக்கையால் அவரது கண்ணீரைத் துடைத்ததுதான் இன்றைக்கு ஆறுதலாக இருந்து வருகின்றது. அவர் கூறிய செய்திகளை வெளியிடும் காலம் இன்னும் வரவில்லை. அவரது மனைவியார் என் வயிற்றிற்கு ஒருவேளை உணவளித்தார்கள். அவரோ என் அறிவுக்குப் பலநாள் உணவை யளித்து மறைந்தார்கள். அவர் அளித்த உணவு, ''எவரையும் வையாதே; வைவது தமிழனின் பண்பல்ல - பிறரை வைவது தான் முன்னேறும் வழி என்று எண்ணாதே. எவன் முன்னேறினாலும் வைபவன் முன்னேற முடியாது என்பதை நம்பு. தவறு என்று கண்டால் தீமையற்ற சொற்களால் அச்சமற்றுக் கூறு'' என்பதுதான்.

திரு பிள்ளை அவர்களின் அறிவுரையும் அற உரையுமாகிய இது எனக்குப் பயன்பட்டது. உங்களுக்கும் பயன்படுமா? முயலுங்கள்!

உயிர் போகும் வரை ஒழுக்கத்தைக் கையாண்டு வந்த ஒரே தலைவர் அவர் என்பதினாலுமே யாம்!

வாழ்க வ. உ. சி. புகழ்!

> தமிழ்நாட்டில் காங்கிரஸ் சுதேசி இயக்கம் நடந்து வருவதற்கு முதல் அஸ்திவாரம் போட்டவர் ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளையே!
>
> —தீரர் சத்தியமூர்த்தி

# முழு நிறை மனிதர்

## தவத்திரு குன்றக்குடி அடிகளார்

பாரத விடுதலை வரலாற்றில் வட புலத்தில் திலகரும், தென் புலத்தில் வ.உ.சி.யும் புகழ் பெற்ற வீரர்கள். வ. உ. சி. வளர்ந்த ஒரு முழுநிறை மனிதர். வ.உ.சி. தம்முடைய வாழ்க்கையையே ஒரு போர்க்களமாக்கி வெற்றி வாகை சூடியவர். அவர் தமது புறநிலைகளோடு மட்டும் போராடவில்லை. அக நிலைகளோடும் போராடினார். வ.உ.சி உணர்ச்சி வசப்பட்ட அரசியல் தலைவரல்லர்; ஆனால், உணர்வு வழிப்பட்டவர். பாரத நாட்டு மக்களின் அடிமை வாழ்க்கைக்கு உரிய காரணங்களை ஆராய்ந்து அறிந்தவர். ஒரு நாட்டு மக்கள் இன்னொரு நாட்டுக்கு எளிதில் அடிமையாகி விடுவதில்லை. ஆண்டாண்டுக் காலமாக அடிமைத் தனத்திற்குரிய கீழ்மைக் குணங்களை ஏற்று வாழ்வதன் மூலமே அடிமையாவர். இந்திய வரலாற்றில் - சிறப்பாகத் தமிழக வரலாற்றில் - ஓராயிரம் ஆண்டுகளாக அடிமைத் தனத்திற்குரிய இழிநிலை வாழ்க்கை கால் கொண்டுவிட்டது. வ.உ.சி. இதை உணர்ந்தார். தன்நாட்டு மக்களுக்குக் கல்வியில் ஆர்வமூட்டினார். 'கற்பதற்கு முந்துங்கள், இறப்பதற்குப் பிந்துங்கள்' என்று தமிழக மக்களைத் தூண்டினார். தமிழின் தனி இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தையும், தமிழகத்தின் தனி மறையும் உலகப் பொது மறையுமாகிய திருக்குறளையும் பதிப்பித்தார்.

வாழ்க்கை ஒரு நுண்கலை. வாழ்வாங்கு வாழ்தல் என்பது ஓர் அருமைப்பாடு. வாழ்க்கை என்ற மாளிகை ஓயாது ஒழியாது கட்டப்படுவதொன்று, வினாடி தோறும் அந்த மாளிகை கட்டப்பெற்று வருகிறது. சிலர் வாழ்க்கையைக் கட்டுவதாகக் கருதிக் கொண்டு இடித்துக் கொண்டிருப்பர். அந்தோ, பரிதாபம்! நெஞ்சம் என்ற நிலத்தில் நினைப்பு என்ற மண்ணையெடுத்து உணர்வு என்ற தண்ணீரைக் கூட்டி நனைத்துச் சேறாக்கி ஆர்வம் என்ற அச்சில் இட்டு அறிவு என்ற கற்களாக்கிச் சோதனை என்ற தீயில் அந்தக் கற்களைச் சுட்டு எடுத்து அவற்றைக் கொண்டு வாழ்க்கையென்ற மாளிகை கட்டப்பெற வேண்டும். இதனை வ. உ. சி. தாம் தெளிவாகத் தெரிந்து, தம்முடைய வாழ்க்கையை வரையறுத்துக் கொண்டது மல்லாமல் மற்றவர்களும் அங்ஙனமே வாழ வேண்டும் என்று கருதினார். வாழ்வியல் நூல்கள் பல தந்த ஜேம்ஸ் ஆலனின் சிந்தனையில் தோய்ந்த பெருமை சிதம்பரனாருக்கு உண்டு. ஜேம்ஸ் ஆலன் நூல்களை நல்ல தமிழில் மொழிபெயர்த்துத் தமிழகத்திற்குத் தந்து தமிழினத்தின் வாழ்க்கையை நெறிமுறைப்படுத்த வ. உ. சி. எடுத்துக் கொண்ட முயற்சிகள் அளப்பில.

வ.உ.சி. சிறையில் இருந்த போது கைதிகளைத் திருத்தி வாழ்விக்கும் முயற்சியில் ஆர்வத்தோடு ஈடுபட்டார். வ.உ.சி. ஒரு நல்ல கவிஞர். விரைந்து வெண்பா செய்யும் இயல்பினர். சிறையில் இருந்த கைதிகளைத் திருத்தும் நோக்கத்தில் நாள் தோறும் பத்து வெண்பாக்கள் பாடி 'மெய்யறிவு' என்னும் நூலைச் செய்து கைதிகளுக்குக் கற்றுக் கொடுத்தார். மெய்யறிவு என்ற நூல் ஓர் உயர்ந்த தத்துவ நூல்; வாழ்க்கை நூல், மனிதனுடைய வாழ்க்கையில் வெற்றிக்கும் தோல்விக்கும் அவனுடைய புறநிலை காரணமல்ல; மனம் போல வாழ்வு என்ற கொள்கையில் வ.உ.சிக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. அருள் என்ற சொல்லுக்கு வ.உ.சி விரித்துக் கூறும் பொருள் நினைத்தற்குரியது. பல உயிர்களிடத்தும் அன்பு காட்டுவதையே அருள் என்று முன்னோர் கூறியிருக்க வ.உ. சி. வேறு சிறந்த சில தத்துவப் பொருள்களையும் அதற்கு எடுத்துக் கூறி விளக்குகிறார். ''அறிஞரோடு நட்பு செய்தலும் அருள்; அறிவிலார்க்கு அறிவை அளித்தலும் அருள், கடவுளை உய்த்து உணரும் ஞானிகளுக்கு உதவிகள் செய்வதும் அருள்'' என்று தம் மெய்யறிவு என்ற நூலில்,

''அருளென்ப தெவ்வுயிர்க்கு
மன்புபா ராட்டல்
தெருளொன்றி நிற்பாரைச்
சேர்தல்-மருளொன்றிக்
காய்வார்க்கு நல்லறிவு காட்டிடு
தல் மெய்ப்பொருளை
ஆய்வார்க் கனைத்து மளித் தல்.

(மெய்யறிவு—62)

என்று கூறுகிறார்.

வ.உ.சி. தமிழக வரலாற்றில் ஒரு நிலையான மைல்கல். வ.உ.சி பல நூறு ஆண்டுகளுக்கும் பிறகு இராசராச சோழனை - கடலில் கலம் செலுத்தி நாடுகள் பல கொண்ட இராசராச சோழனை நமக்கு நினைவூட்டிய தலைவர். வ.உ.சி. காலம் தந்த பரிசல்லர். வ.உ.சி. அந்தக் காலத்திற்குக் கிடைத்த பரிசு ஆனார். அரசியல் உலகிலும் அறிவு உலகத்திலும் ஞாயிறென ஒளி வீசியவர் வ.உ.சி. உழவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் தொழில் திறன் வழங்கியும் அவர்கள் வாழ்க்கை வளம் பெறவும் விளங்கிய வகையில் வால் மழையெனத் திகழ்ந்தவர்; ஏழை எளிய; தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தண் நிலவின் அமுதமென வாழ்வளித்தவர். வ.உ.சி. தமிழகத்திற்கு ஒரு முழு வாழ்வளிக்க முனைந்து முயன்றார். ஆனால், வழக்கம்போல் தமிழகம் அவரை ஏமாற்றியது. ஆனால், அவர் ஏமாற்றம் அடையவில்லை. நிலைகலங்கா அந்தப் பேருள்ளத்தினர் அறிவின் திருவுருவமாக - அடக்கத்தின் சின்னமாக-சான்றாண்மையின் வெற்றியாகப் புகழ் பூத்த வாழ்வு வாழ்ந்தார்; இன்ப அன்பின் வடிவம் காட்டினார் - வடிவம் எய்தினார். வ.உ.சி.யின் புகழ் வாழ்க!

வ.உ.சிதம்பரனாரே எனது அரசியல் குரு.

—தந்தை பெரியார்

கோயம்புத்தூர் சிறைச்சாலையைப் பார்க்கப் போகிறவர்களில் யார்தான் நமது தக்ஷிண தேசாபிமான சிங்கமான ஸ்ரீலஸ்ரீ சிதம்பரம் பிள்ளையைப் பற்றிச் சிந்தியாமல் இருக்க முடியும்?

—மகாகவி பாரதியார்

# வ.உ.சி வாழ்விலே...



**திருமதி சு. இராமலட்சுமி**

**வி**வாதத் திறமை மிக்கவரான வ.உ. சிதம்பரனார் அவர்கள், தமிழ்ப் புலமையும் எழுத்து வன்மையும் மிக்கவராவார்.

சிறந்த நூலாசிரியராக, உரையாசிரிய ராக, தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-சொல்லதிகாரம், சிவஞான போதம் ஆகிய வற்றின் பதிப்பாசிரியராக, விவேக பாநு, தமிழ் நேஷனல் பத்திரிகை, இந்து நேசன் ஆகிய இதழாசிரியரர்க, மொழி பெயர்ப்பாள ராக, வழக்குரைஞராக, விடுதலை வீரராக, கப்பலோட்டிய தமிழராகவெல்லாம் விளங்கிய வ.உ.சி. அவர்கள், தலைசிறந்த தமிழ்க் கவிஞரும்கூட. கடிதங்களைக்கூட அவர்கவிதை யாக எழுதியதுண்டு.

*1908*-ல், கோவை சிறையிலிருந்த அவர் அப்படி தனது மனைவிக்கு எழுதிய கவிதைக் கடிதம் வருமாறு:

''திருவும் புகழும் சிறந்தன பிறவும்
மருவுற நிற்குமென் மாசிலா மனைவியே!
என்னரும் உயிரினும் என்னுயிர்
உளத்தினும்
பின்னுள் பாதியைப் பெரியநம் தேயத்தின்
தன்னடிக் களித்தேன்; சத்தியம் இஃதே.
சிறியவிரு சட்டைகள் தேகத்தில்
புனைந்துளேன்.
சிறியவோர் குல்லா சிரத்தினில்
தரித்துளேன்;
வெற்றியே தவத்தினும் வேறுள எஃதினும்
பெற்றிடச் செய்திடும் பெருமையொடு
மற்றுள
நலமெலாம் எளிதினில் நல்கிடுங்
கழலொன்று
வலதுதாள் மேலே மாணுற யாத்துளேன்;
சிவனடித் தொண்டர்கள் சிறப்புற
அணிந்திடும்
நவமறு மணிநான் நற்களம் பூண்டுளேன்;
தவத்தினில் சிறிது சரீரம் இளைத்துளேன்;
உவப்பொடு கண்டெனை உயர்வெலாம்
பெறுவையே!''

**ஓ**ரளவே வசதிமிக்க குடும்பத்தவரான வ. உ. சி. அவர்கள், விடுதலைப் போரில் பங்கேற்று, சிறையில் செக்கிழுக்கும் அள வுக்குத் துன்புறுத்தப்பட்டார். அது மட்டு மல்ல; சிறை மீண்ட பின்பும்கூட அவர் வாழ்க்கை வறுமைப் பாட்டையிலேயே செல்வ தாயமைந்தது. தந்தை பெரியாருக்கு அந்நாளில் வ.உ.சி. எழுதிய கடிதமொன்று ஈரோட்டில் உள்ள பெரியார் நினைவகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. நாட்டுக்குழைத்த அவரது துன்ப வாழ்வைப் பிரதிபலிப்பதாக உள்ள - 'லெட்டர் ஹெட்' டில் எழுதப்பட்டுள்ள அந்தக் கடிதம் வருமாறு:



# வ.உ.சி.யின் சுதந்திர வேகம்!

''சுதந்திரப் போராட்டம், அதில் வ.உ.சி.யின் பங்கு பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்''.

''எங்க முதலாளியின் சுதந்திர வேகம் எப்படிப்பட்டது, தெரியுமா? தாமிரபரணியாறு மாதிரி பொங்கி ஓடிவரும், வெள்ளைக்காரனுக்குப் போட்டியா முதலாளி கப்பல் விடணுமின்னார். அமெரிக்காக்காரனுக்குக் கடுதாசி எழுதி ஒரு கப்பல் கொடுன்னாரு! முதலாளியோடு வெள்ளைக்காரன் போட்டி போட்டான். எங்க கப்பல்ல, சிலோன் போனா, சாப்பாடு தருவோமின்னான். முதலாளி வேட்டியும் துண்டும் தருவேன்னாரு! வெள்ளைக்காரன் தங்கும் வசதி உட்பட சகலதும் தருவேன்னான். உடனே நம்ம ஆட்டு மந்தைக் கூட்டம் அங்கே போயிடுத்து. முதலாளிக்கும் பெருத்த நஷ்டம். கப்பலை ஓட்டமுடியல. அதோடு விட்டானா வெள்ளைக்காரன்? அமெரிக்கக்காரனுக்கு எழுதி, கப்பலுக்கு உள்ள முழுப் பணத்தையும் கேட்கச் சொன்னான். அவனும் முதலாளிக்குக் கடுதாசி எழுதினான். இருந்தால்தானே கொடுக்க முடியும்? அவன் இங்கேயே வந்தான். கேஸ் போட்டான். அந்த நேரத்தில் மில் கிளர்ச்சி வந்தது. முதலாளி ஆவேசமாகப் பேசினாரு. அதனால முதலாளி மேலே கேஸ் போட்டாங்க. முதலாளியையும் சுப்பிரமணிய சிவாவையும் கோர்ட்டுக்கு கொண்டு போயிட்டாங்க. ''லாரன்ஸ்'' விசாரித்தான். முதலாளிக்கும், சுப்பிரமணிய சிவாவிற்கும் வாதாட ஒரு வக்கீலும் வரல, எல்லாரும் வெள்ளைக்காரனுக்கு பயந்துக்கிட்டு இருந்தாங்க. திருநெல்வேலி சாது கணபதி பந்துலுதான் வாதாட முன்வந்தார். வெள்ளைக்காரங்க, ''நீ வாதாடக் கூடாது''ன்னாங்க. அப்படி எந்தச் சட்டத்தில் சொல்லியிருக்குன்னு பந்துலு ஒரு போடு போட்டார்''.

''சிவாவை வெள்ளைக்காரன் விசாரித்தானா?''

''ஆமா, பாரததேவியானவள் இந்திய தேசத்தை இந்தியர்களே ஆளவேண்டும் என்று எண்ணி, அதற்காகப் போராட எங்களைப் படைத்தான்; தேவியின் ஆக்ஞைப்படி நானும் கடமை செலுத்தினேன்'' என்றார், சிவா. இதைக்கேட்டதும் ஜட்ஜ் விழித்தான். பிறகு ரெண்டு பேருக்கும் 12 வருஷமின்னு தண்டிச்சான். 24 வருடமானாலும் கவலையில்லைன்னு சிவாவும் முதலாளியும் ஜெயிலுக்குப் போயிட்டாங்க.

''குலசேகரப்பட்டினம் மரக்காயர் கப்பல் கம்பெனி வைத்திருந்ததாகவும் அதில் வ.உ.சி. பொறுப்பாளராக இருந்தார் என்றும், மரக்காயர் இறந்த பின்னர் அதை வாங்கி வ.உ.சி. நடத்தினார் என்றும் சொல்றாங்களே, இது சரியா?''

''குலசேகரப்பட்டினம் மரக்காயர் கப்பல் கம்பெனிக்கு முதலாளி-பொறுப்பாளர் அல்ல. ஆலோசகர் தான், முதலாளி வாங்கினது அமெரிக்கக் கப்பல்.''

வ.உ.சி. இறந்தபோது அவரை எடுத்துச் செல்லவே மக்கள் அஞ்சினார்களாமே''?

''ஆமாங்க. நாங்க இருபது பேர் கூட இல்ல. காங்கிரஸ் கொடியை அவர் மூடிக்கொண்டு நாங்கள்தாம் எடுத்துச் சென்றோம்'' என்று கண் கலங்கினார் குமாஸ்தா குப்புசாமி.

''உங்கள் தொழில் அனுபவம் ஏதாவது சொல்லுங்களேன்''.

''எவ்வளவோ இருக்குங்க. ஒண்ணு சொல்றேனே. ஒரு சிவில் கேஸ் வந்தது. முதலாளி அதுக்கு ஒரு பிராது தயாரிக்கச் சொன்னார். நான் வேறு விதமா பிராது தயாரிக்கலாம்னு சொன்னேன். ''ஏலே! நீ குமாஸ்தா! நான் வக்கீல், நான் சொல்றதைச் செய், இல்லாட்டா வீட்டுக்குப் போ''ன்னு முதலாளி சொன்னாரு. இப்படிச் சொல்லிட்டாரேன்னு நானும் வீட்டுக்குப் போயிட்டேன். இது தெரிஞ்சு, முதலாளியே எங்க வீட்டுக்கு வந்தாரு. ''ஏலே! இங்கே என்ன பண்ற? வேலைக்கு வா''ன்னு கூப்பிட்டாரு. நானும் முதலாளி பின்னேயே போயிட்டேன்'' என்றார். குப்புசாமி.

**— வ.உ.சியிடம் வக்கீல் குமாஸ்தா வேலை பார்த்த திரு குப்புசாமி (வயது 95) அவர்கள் அளித்த பேட்டி**

நன்றி 'ராணி

## சிதம்பரனார் மாவட்டத்திற்கான கல்வி அலுவலகங்கள்

திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரித்து தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு சிதம்பரனார் மாவட்டம் அமைவதையொட்டி இம்மாவட்டத்திற்கெனத் தனியே கல்வித் துறை அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தூத்துக்குடியில் தலைமைக் கல்வி அலுவலர் அலுவலகமும், பெண்கள் பள்ளிகளின் ஆய்வாளர் அலுவலகமும், வட்டார உடற்பயிற்சி ஆய்வாளர் (ஆண்) அலுவலகமும் செப்டம்பர் 8ஆம் தேதி முதல் செயல்படத் துவங்கி உள்ளன.


வ.உ.சி. முதல் மனைவி வள்ளியம்மாளுடன்

# வ.உ.சி

## வாழ்க்கை ஏடு

**5.9.1872** வ.உ.சிதம்பரனார் தோற்றம்.

பெற்றோர்: உலகநாத பிள்ளை,
பரமாயி அம்மாள்.

கல்வி: ஐந்தாம் வகுப்புவரை ஓட்டப் பிடாரத்தில்

**1891** மெட்ரிகுலேசன் - தூத்துக்குடிசெயின்ட் சேவியர் பள்ளியில். திருச்சி சட்டக் கல்லூரியில் வழக்கறிஞர் கல்வி.

**1894** வள்ளியம்மையைத் திருமணம் செய்தல்.

**1895** வழக்கறிஞர் தேர்வில் வெற்றிபெற்று 2வது கிரேடு வழக்கறிஞராகி ஓட்டப் பிடாரத்தில் பணி.

**1900** தூத்துக்குடியில் வழக்கறிஞர் தொழில். விவேக பாநு-பத்திரிகை தொடங்குதல்.

**1901** வள்ளியம்மை மறைவு.
மீனாட்சி அம்மையை 2ஆம் தாரமாக மணம் செய்து கொள்ளல்.

**1905** சுதேசி வியாபாரிகள் அந்நிய கப்பல் கம்பெனியாரால் புறக்கணிக்கப்படுவது கண்டு வெகுண்டு சுதேசிக் கப்பல் கம்பெனியை நிறுவினார்.

**16.10.1906** சுதேசி ஸ்டீம் நேவிகேசன் கம்பெனி பதிவு செய்யப்பட்டது. இரு கப்பல்கள் வாங்கப்பட்டன.

வங்காளத்தை கர்சான் பிரபு இரு பிரிவாக மாற்றியதனால் எழுந்த கிளர்ச்சி தலை தூக்கியது. அதன் காரணமாக சுதேசி பண்டகசாலை, தரும சங்க நெசவுச் சாலை ஆகியவற்றை நிறுவினார்.

ஆலைத் தொழிலாளர் பிரச்சினைகளில் பங்கேற்றுப் பாடுபட்டார். வேலை நிறுத்தம் செய்தார். அதன் காரணமாகப் பட்டினி இருக்க நேர்ந்த தொழிலாளிகளுக்குத் தமது செலவில் உணவு வசதி செய்து கொடுத்தார். 12 மணி நேர வேலை 9 மணி நேர வேலையாக்கப்படுவதற்கு அரும்பாடுபட்டார்.

**1907** சூரத் காங்கிரஸ் மாநாட்டில் லோகமான்ய பாலகங்காதர திலகருக்குப் பேராதரவாக இருந்தார்.

**9.3.1908** ராஜ துவேஷக் குற்றம் சாட்டப்பட்டார்.

**11.3.1908** கைது செய்யப்பட்டார். வழக்கு விசாரணை நடைபெற்றது. தீவாந்திர தண்டனை வழங்கப்பட்டது. பின்னர் அது ஆறு ஆண்டுக் கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

டிசம்பர் 1912 கண்ணனூர்ச் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். சில ஆண்டுகள் சென்னையில் நெய் வியாபாரம் செய்தார்.

**1922** மீண்டும் வழக்கறிஞர் தொழிலைக் கோவில்பட்டியிலும், தூத்துக்குடியிலும் நடத்தினார்.

**1933** தூத்துக்குடியில் கம்பன் கழகம் நிறுவுதல்.

ஆத்ம வளர்ச்சியை முன்னிட்டு வாரம் ஒரு நாள் மௌனவிரதம் மேற்கொள்ளல்.

**1935** திருக்குறள் அறத்துப்பால் ஆராய்ச்சி வெளியிடல்.

**1936** தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரையை வெளியிடல்.

**18.11.1936** மறைவு.

# பழம்பெருமைப் பதிகள்

சிதம்பரனார் மாவட்டத்தைச் சார்ந்த ஊர்களில் பல, சுமார் 10,000 ஆண்டுகளிலிருந்து 19ஆம் நூற்றாண்டு வரையான வரலாற்று எச்சங்களைத் தன்னகத்தேகொண்டுள்ளன,இரட்டைத் திருப் பதி';'தண்பொருநை' ஆற்றின வடகரையில் அமைந்துள்ளது. இது மிகச்சிறிய ஊராகக் காட்சி அளிக்கிறது. இவ்வூருக்கு நேரிடையாகச் செலவதற்குப் பேருந்து வசதி கிடையாது. திருநெலவேலி திருச்செந்தூர் சாலையில் 'கேம்லாபாத்' என்ற இடத்தில் இறங்கி தண்பொருநையான தாமிரபரணியைக் கடந்தால் இவ்வூரினை அடையலாம்.

நவதிருப்பதிகளில் இரண்டு திருப்பதுகள் இவ்விடம் உள்ளதால் இவ்வூர் 'இரட்டைத் திருப்பதி' என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. வைகுண்ட ஏகாதசித் திருநாளில் பக்தர்கள் கூட்டம் நிரம்பக் காணமுடியும்.

தூத்துக்குடியிலிருந்து 42கி.மீ. தொலைவில உள்ள ஊர்தான் எட்டையாபுரம். கி.பி.18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவ்வூர் வரலாற்றுச் சிறப்பெய்தத் தொடங்குகிறது. வெள்ளையரின் கையிலிருந்து தப்பிய ஒரு சில அரண்மனைகளுள் இவ்வூர் அரண்மனையும் ஒன்றாகும். இதன் கட்டடக் கலை அமைப்பு 18ஆம் நூற்றாண்டின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

எட்டப்ப நாயக்கரால் இவ்வூர் ஏற்பட்டதால் அவன் பெயரிலேயே 'எட்டையபுரம்' என்னும் பெயர் பெற்றது.

எட்டையபுரம் ஜமீன்களின் முன்னோர் ஆகிய 'குமார எட்டப்ப நாயக்கன்' என்பவன் விசய நகர ஆட்சியின் வீழ்ச்சிக்குப்பின் மதுரை அரசன் அதிவீரராம பாண்டியன் என்பவனிடம் அடைக்கலம் புகுந்தான். பாண்டியனும் அவனை ஆதரித்து கள்ளர்களை அடக்கும் பணியை ஒப்படைத்தான். பின்பு அங்கிருந்து நகர்ந்து திருநெல்வேலிப் பகுதியின் சில பகுதிகளை ஆட்சி செய்து வரும்போது அதன் தலைநகராக 'எட்டையபுரத்தை' உருவாக்கினார்கள். இந்நிகழ்ச்சி கி.பி 1423க்கும் 1443க்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்றது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். இவர்களின் வழிவழியினர் இவ்வூரினையே தலைமை இடமாகக் கொண்டு வருகின்றனர்.

இவ்வூர் அரண்மைனயின் ஒரு பகுதியாகக் கொலுமண்டபம் அமைந்துள்ளது. அன்றைய ஜமீனில் அரசவைக்கவிஞராக இருந்த புரட்சிக்கவி மகாகவி சுப்பிரமணியபாரதியார் இவ்வவையிலேதான் 'சாகாவரம் பெற்ற' பல பாக்களை இயற்றியதாகக் கூறப்படுகிறது.

இவ்வூரில், புரட்சிக் கனல், அக்கினிக்குஞ்சு பாரதியின் பிறந்த வீடு நினைவுச் சின்னமாகத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடியிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர்தான் ஓட்டப்பிடாரம். இவ்வூரில் சிவன்கோயில் ஒன்றும், பெருமாள் கோயில் ஒன்றுமாக இரண்டு கோயில்கள் உள்ளன.

பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டியனோடு, நிகழ்ந்த போரில் இறந்துபட்ட வெள்ளை வீரர்களுக்காக எடுக்கப்பட்ட கல்லறைகள் இவ்வூர்க் குளத்தின் அருகே அமைந்துள்ளன. அக்கல்லறையில் கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன.

கி.பி.1799ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் தேதி நடைபெற்ற பாஞ்சாலங் குறிச்சி தாக்குதல் நடைபெற்றதாகவும் அதில் நான்கு அதிகாரிகளும், ஒரு வீரனும் மரணம் அடைந்ததாகவும் அவர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

In Memory<br>of<br>Lieutenants<br>Douglas Dormieus<br>Collins and Blake<br>and<br>Gunner Finny<br>who<br>Fell in the attack<br>of Panjalam courchy<br>5th September<br>1799.

வ.உ.சி. பிறந்த ஊராகையால் அவருடைய வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் வகையில் நினைவில்லம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கழுகுமலையில் காணவேண்டிடிய மற்றொன்று மலைச் சரிவில் செதுக்கப்பட்ட சமணச் சிற்பங்களாகும். சமணர்கள் தங்கள் தாய், தந்தை, மகன், மகள் ஆகியோர்களின் நினைவாக இங்கு சமணச் சிற்பங்களை உருவாக்கியுள்ளனர். 'ஏனாதி' 'காவிதி' போன்ற சிறந்த தமிழ்ப் பட்டங்களைப் பெற்றவர்களும் இங்கு சிற்பங்களைச் செதுக்கியுள்ளனர். இச் சிலைகளின் கீழே அவற்றை உருவாக்கியவன் பெயர் வட்டெழுத்தால் பொறிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வூரில் கொசக்குடித் தெருவில் போரில் வீரமரணம் எய்திய வீரன் குடும்பத்தார்க்கு வழங்கப்பட்ட உதிரப்பட்டி நிலததைக் குறிக்கும் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று இருந்தது. இதில் இவ்வூர் 'பேரெயிற்குடி' என்று குறிப்பிடப்படுகிறது. இது பாண்டியர்களுக்கும், ஆய்மன்னர்களுக்குமிடையில் ஏற்பட்ட போரினைக் குறிப்பிடுகின்றது.

'சிதம்பரனார் மாவட்டத்தின்' தலைமை இடமான தூத்துக்குடி கி.பி.16ஆம நூற்றாண்டின் இடையில்தான் பெருமை பெறத் தொடங்குகிறது. 'போர்த்துக்கீசியர்கள் 'முதல் முதலாக கி.பி. 1532ல் இவண் வருகிறார்கள். 'சேவியர்' கி.பி.1543ல் தூத்துக்குடி வரும்பொழுது அங்கு போர்த்துக்கீசிய கவர்னர் ஒருவர் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். எனவே கி.பி.1543க்கும் இடைப்பட்ட காலத்தில் தான் போர்த்துக்கீசியர்கள் தூத்துக்குடியில் குடியேறி இருக்க வேணடும்.

அவர்கள் தொடக்க காலத்தில் சிறிதுகாலம் வரையில் 'பழைய காயல்' என்ற ஊரையே தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்திருந்தார்கள். கி.பி. 1580ல் தூத்துக்குடியினைத் தங்களது தலைமையிடமாக மாற்றிக் கொள்கிறார்கள்.

கி.பி.1544ல் நாயக்க மன்னர்கள் தூத்துக்குடியில் போர்த்துக்கீசியர்களுடன் போரிட்டு கவர்

னர் வீட்டினைத் தீக்கிரையாக்கி விட்டு அவருடைய சொத்துக்களையும் . கொள்ளையிட்டுச் சென்று விடுகின்றார்கள்.

கி.பி.1658லிருந்து தூத்துக்குடி டச்சுக்காரர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மாற்றி மாற்றிக் கைப்பற்றப்படுகின்றது. 1658ல் டச்சுகள் கைப்பற்றினார்கள். பின்பு 1762ல் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்படுகின்றது. 1785ல் மறுபடியும் டச்சுகள் கைக்கு மாறுகின்றது. 1795ல் ஆங்கில அரசுக்கு வருகிறது. 1818ல் டச்சுகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இறுதியில் அமைதியாக எவ்வித எதிர்ப்புமின்றி தூத்துக்குடியினை 1825ல் ஆங்கிலேயர்களிடம் ஒப்படைக்கிறார்கள். இவ்வாறு ஒருவரொருவராக இவ்வூரைப் பந்தாடினார்கள்.

1801ல் தொடக்க காலத்தில் தூத்துக்குடி பாஞ்சாலங்குறிச்சி ஜமீன்தாரால் தாக்கப்பட்டு கைப்பற்றப்படுகிறது. சிறிது காலம் பாஞ்சாலங்குறிச்சி ஜமீன் வசம் இருந்திருக்கிறது.

தூத்துக்குடியின் அருகில் ஒரு தீவு அமைந்துள்ளது. இது 'பாண்டியன் தீவு' என அழைக்கப்படுகிறது. தூத்துக்குடியில் பழமையான கிருத்துவக் கோயில்கள் உள்ளன. கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள பழமையான 'டச்சு தேவாலயம்' உள்ளது. அதனில் டச்சு கவர்னர் கல்லறை ஒன்று இருந்தது. அதில் தமிழ்க் கல்வெட்டு ஒன்றும், டச்சுக் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகின்றன. கல்லறை தற்போது அழிக்கப்பட்டு விட்டது. கல்வெட்டுகள் வேறு ஒரு (கடற்கரைச் சாலையிலுள்ள) தேவாலயத்தில் உள்ளதாக அறிய முடிகின்றது.

பாஞ்சாலங்குறிச்சி வரலாற்றில் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் சிறப்பிடத்தினைப் பிடிக்கின்றது. 'கட்டபொம்மன்' என்று சிறப்புப் பெயரோடு இவ்வூரில் ஆளுகை செய்த ஜமீன்தார்கள் திகழ்ந்தனர். தற்போது எல்லோராலும் மாவீரன் எனப் போற்றப்படும் வீரபாண்டியகட்டபொம்மன் என்பவன் பாஞ்சாலங்குறிச்சியில் நான்காவதாக ஆட்சிப் பீடம் ஏறியவன் . இவனுக்கு முன்பே ஆட்சி செய்த மூன்றாம் கட்டபொம்மன் காலத்திலும் பாஞ்சாலங்குறிச்சி தாக்கப்பட்டது.

மூன்றாம் கட்டபொம்மன் ஆட்சி செய்து வருகிற காலத்தில் ஆங்கிலேயருக்கு அடிபணியவில்லை. ஆதலால் 'கர்னல் புல்லர்டன்' என்பவர் தலைமையில் பாஞ்சாலங்குறிச்சியை அடக்க கி.பி. 1786ல் படைஅனுப்பப்பட்டது. மூன்றாம் கட்டபொம்மன் அப்பொழுது நடந்த போரில் தோற்று விடுகின்றான். கோட்டையிலிருந்து தப்பி சிவகிரியில் தஞ்சம் அடைகின்றான். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை தகர்க்கப்படுகிறது.

கி.பி. 1785க்கும் 1790க்கும் இடைப்பட்ட காலத்தில் பாளையங்களில் வரி வசூலிக்கும் பொறுப்பு நவாபின் கைக்கு வருகிறது. ஆதலால் பாளையங்கள் மீண்டும் தலை தூக்கின. இக்காலகட்டத்தில் மூன்றாம் கட்டபொம்மன் இறந்து விடவே நான்காம் கட்டபொம்மனாகிய 'வீர பாண்டிய கட்டபொம்மன்' பாஞ்சாலங்குறிச்சியில் அரியணை ஏறுகிறான். இவன் காலத்தில் இடிந்த கோட்டை மீண்டும் வலுவாக எழுப்பப்படுகிறது. இவனுக்கு ஊமைத்துரை, சிவத்தையா என்ற இரண்டு தம்பியர் இருந்தனர்.

ஆங்கிலேயர் 4ஆம் வீர பாண்டிய கட்டபொம்மனை மதிக்காமல் பல வழிகளிலும் அவமானப்படுத்தினர். அதனால் 4ம் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆங்கிலேயரை அதிகமாக எதிர்க்க நேர்ந்தது. 1799ல் மேஜர் பானர்மேன் தலைமையில் பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுப்பு நிகழ்ந்தது. லெப்டினன்ட், டல்லஸ், காலின்ஸ் ஒரெய்லி, டக்லஸ், பிரௌன்



ஆகிய உயர் அதிகாரிகள் இப்படையெடுப்பில் கலந்து கொண்டனர். தென்னகத்தின் 'டிரபால்கர்' என்று அழைக்கப்படும் பாஞ்சாலங் குறுச்சக் கோட்டை தகர்க்கப்பட்டது. இதில் 'காலின்ஸ்' என்ற அதிகாரி வெள்ளைத் தேவனால் குத்தப்பட்டு மாண்டான. பல ஆங்கில அதிகாரிகள் மாண்டனர்.

கட்டபொம்மனும் மற்றும் பலரும் இரவோடு இரவாகக் கோட்டையை விட்டுத் தப்பி ஓடினர். கட்டபொம்மன் புதுக்கோட்டையில் தலைமறைவாக இருக்கையில் புதுக்கோட்டை அரசர் கட்டபொம்மனை ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுத்தார். 1799ல் அக்டோபர் 16ல் பல பாளையப்பட்டுகள் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு கயத்தாற்றில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டான்.

ஊமைத்துரையும், சிவத்தையாவும் பாளையங்கோட்டைச் சிறையில் நீண்ட நாட்களாக அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். திடீரென்று ஒருநாள் மக்கள் பாளைச் சிறையைத் தகர்த்து அவர்களை விடுவித்தனர். கோட்டைத் தடைச் சட்டத்தை மீறி பாஞ்சாலங்குறிச்சியில் இரண்டே வாரங்களில் புதிய கோட்டையை எழுப்பினர். இதனை அறிந்து 'மெக்காலே' தலைமையில் படையொன்றை அனுப்பினர் ஆங்கிலேயர்கள். இப்படையை வழியிலேயே சிதறடித்தனர் பாஞ்சை வீரர்கள். அதோடில்லாமல் தூத்துக்குடி நகரத்தினையும் தங்கள் ஆளுகையின் கீழ்க்கொண்டு வந்தனர்.

இரண்டாம் படையெடுப்பின் போது கோட்டை தகர்க்கப்படுகிறது. ஊமைத்துரையும் மற்றும் சில வீரர்களும் காயத்துடன் தப்பி விடுகின்றனர். சிவத்தயா மரணம் எய்துகின்றான். ஊமைத்துரையின் காயம் ஆறியதும் சிவகங்கை சென்று மருது சகோதரர்களுடன் இணைந்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடுகிறான். பின்பு அவர்களும், ஊமைத்துரையும் ஆங்கிலேயர்களால் இழுத்துச் செல்லப்படுகின்றனர். ஊமைத்துரை பாஞ்சை இடிந்த கோட்டையில் தூக்கிலிடப்படுகின்றான்.

பாஞ்சாலங்குறிச்சிப் போரில் இறந்துபட்ட ஆங்கில வீரர்களுடைய கல்லறை இவ்வூரிலிருந்து 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதில் 45 வீரர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். 1801ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் தேதியில் இறந்துபட்ட வீரர்களுக்காக எடுக்கப்பட்ட கல்லறைகளும் இங்குள்ளன. இவற்றில் உள்ள இரண்டு கல்வெட்டுகள் இச்செய்தியை நமக்குத் தருகின்றன.

— மதுரை, தொல்பொருள் தொழில் நுட்பப் பணியாளர் பண்பாட்டுக் கழகம் வெளியிட்ட கையேட்டிலிருந்து



# சிதம்பரனார் மாவட்டத்தில்...

**கே.ஏ. சுந்தரம், இ.ஆ.ப.,**
**தலைவர்,**
**தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகம்.**

வரலாறு பலருக்கு கௌரவத்தை வழங்கியிருக்கிறது. ஆனால் வரலாற்றுக்கே ஒரு சான்றினை வழங்கிய பெருமை வ.உ. சிதம்பரனாருக்கு உண்டு. அன்றைய அடிமை இந்தியாவின் அரசியல் வானிலே வெடித்துச் சிதறிய சுதந்திரம் என்னும் அனலின் துண்டுகள் தூத்துக்குடிக்கருகே மூன்று இடங்களை முத்தமிட்டன.

''வானம் பொழிகிறது-பூமி விளைகிறது-வழங்கத் தேவையில்லை வரி'' என்று வரலாற்றின் புது ஏட்டை தொடங்க பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மனும், ''சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்து துஞ்சிடோம் - இனி அஞ்சிடோம்'' என்ற கவிதை முழக்கத்தோடு எட்டயபுரத்தில் இலட்சியக் கவிஞன் பாரதியும், 'நாடும் நாமும் மட்டுமல்ல - இந்த நாட்டைத் தொட்டு மகிழும் அலைகளுக்கும் சுதந்திரம் வேண்டும்'' எனக் கப்பலோட்டிய வீரர் வ.உ.சி.யும் சுதந்திரப் போருக்குத் தென்னகம் வழங்கிய முப்படைத் தளபதிகள் என்றால் அது மிகையாகாது. அந்த மூன்று இடங்களுமே, மலரப் போகும் வ.உ.சி. மாவட்டத்துக்குள்ளேயே வடிவம் பெறுவது என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

1906-ஆம் ஆண்டு அக்டோபர் 23-ஆம் நாள் பம்பாய்க் கடற்கரைக் கூட்டத்தில் பாலகங்காதர திலகர், 'தூத்துக்குடிக்கும் இலங்கைக்குமிடையே உத்தம தேசாபிமானியாகிய வ.உ.சி. உருவாக்கி உள்ள சுதேசிக் கப்பல் போக்குவரத்து, இந்திய சுதேசியத்திற்கு அவர் செய்துள்ள பெரும் பணிவிடை மட்டுமல்ல - நமது சுதந்திர முழக்கத்தைக் கடல் கடந்தும் ஒலிக்கச் செய்யும் ஒரு முயற்சியும் ஆகும்' என்று குறிப்பிட்டார்.

இது வெறும் புகழ் மொழியல்ல. ஏராளமான இன்னல்களுக்கிடையில், எதிர்ப்புகளைக் கண்டு இடிந்து விடாமல், எந்தக் கடல் வழியாக வெள்ளை ஆதிக்கம் இங்கே வேரூன்றியதோ, அதே கடல் வழியாகவே அவர்களை, மீண்டும் அனுப்பி வைக்க 1906-இல் சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றைத் தொடங்கி, பம்பாயிலிருந்து எஸ்.எஸ்.லாவோ, எஸ். எஸ். காலியோ என்ற இரு கப்பல்களை விலைக்கு வாங்கி இந்தியத் திருநாட்டின் கடல் வணிகச் சுதந்திரத்திற்குக் கால்கோள் நாட்டிய கடமை வீரர் வ.உ.சியை நினைவு கூராமல் வரலாற்றை நாம் வழங்க முடியாது.

இருட்சிறையின் இரண்டு ஜென்மாந்திர தண்டனைகளோடு, செக்கிழுத்துக் கல்லுடைத்து, சித்திரவதைகளுக்கு ஆளாகி அந்தச் செம்மல் சிந்திய இரத்தத் துளிகளைத் தனது இலட்சியப் பாதையின் மைல் கற்களாகக் கொண்டு அமரர் வ.உ.சி. யின் ஆக்கப்பூர்வமான கனவுகளையே அடித்தளமாகக் கொண்டு உருவானதுதான் தூத்துக்குடி துறைமுகம் என்றால் அது மிகையாகாது.

எந்தச் சுதேசித் தன்மையைப் பாதுகாப்பதற்காகச் சுதேசிக் கப்பலை வ.உ.சி. செலுத்தினாரோ, அதே சுதேசித் தன்மையோடு, அந்நிய நாடுகளின் எந்தப் பணியுறவும் இன்றி முழுக்க முழுக்க இந்தியப் பொறியியல் வல்லுனர்களைக் கொண்டு திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட் சுதேசித் துறைமுகம் தூத்துக்குடித் துறைமுகம் என்பது நமக்கு மட்டுமல்ல - இந்திய

நாட்டுக்கே பெருமை தரக்கூடிய ஒரு செய்தி யாகும்.

இந்தத் துறைமுகத்தின் இரண்டு பிரம் மாண்டமான அலைத்தடுப்புச் சுவர்களில் வடபுறச்சுவர் 4,103 மீட்டர் நீளம் கொண்ட, உலகத்திலேயே அதிக நீளமான அலைத் தடுப்புச் சுவர் என்ற பெருமையைப் பெற்று, 'கின்னஸ்' புத்தகத்தில் 1980-ஆம் ஆண்டு தனியிடத்தைப் பெற்றுள்ளது.

வ. உ. சி. கண்ட கனவு இந்திய அரசின் எண்ணத்தில் கருவாகி 1963-ஆம ஆண்டு ஐந்து கோடி ரூபாய் அனுமதியோடு ஆழ்கடல் துறைமுக அமைப்புப் பணியாக மலர்ந்தது. 1974-ஆம்ஆண்டு ஜூலை மாதம் இந்தியாவின் பத்து மிகப் பெரிய துறைமுகங்களுள் ஒன் றாகத் தூத்துக்குடி துறைமுகத்தை இந்திய அரசு பிரகடனம் செய்தது.

இந்தியாவின் மிகப் பெரிய உரத் தொழிற்சாலைகளுள் ஒன்றான ஸ்பிக் உரத் தொழிற்சாலையின் அத்தியாவசியமான தேவைகளை இறக்குமதி செய்ய 125 இலட்சம் ரூபாய் செலவில் எண்ணெய்த்துறை ஒன்று 1974-ஆம் ஆண்டு இங்கே ஏற்படுத்தப்பட் டது. 1975-டிசம்பரில் இரண்டு கப்பல் தளங் களும், 1976 டிசம்பரில் இரண்டு கப்பல் தளங் களும், 1984-ல் இரண்டு கூடுதல் கப்பல் தளங்களும் அமைக்கப்பட்டன.



1983ஆம் ஆண்டில் 'மெரைன் அன்லோடிங் கருவி' களை இயக்கி வைக்க வந்த மாண்புமிகு நிதி அமைச்சர், பாரதி வேடமணிந்த மாணவர்களால் வரவேற்கப்படுதல்.



தமிழ்நாடு மின்சார வாரியம் தூத்துக் குடியில் உருவாக்கிய அனல்மின் நிலையத் திற்குத் தேவையான ஆண்டுக்குச் சுமார் 20 இலட்சம் டன் நிலக்கரியை ஹால்டியாவி லிருந்து இறக்குமதி செய்ய ரூ. 2.97 கோடி செலவில் நிலக்கரித்துறையும், மணிக்கு 2,000 டன் நிலக்கரியை இறக்குமதி செய்வதற் கேற்ற 5 கி.மீ. தொலைவிற்குத் தானியங்கி யும் (Conveyor) 1983-ஆம் ஆண்டு அமைக்கப் பட்டன.

மணிக்கு 700 லி. பெட்ரோலிய எண் ணெய்ப் பொருட்களை இறக்குமதி செய்ய 'மெரைன் அன்லோடிங் ஆர்ம்ஸ்' என்ற சிறப்புக் கருவிகளும் இத்துறைமுகம் கொண் டுள்ளது. இக்கருவியினை மாண்புமிகு டாக் டர் நாவலர் அவர்கள் தலைமையில், மாண்பு மிகு செய்தித்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இது தவிர, நவீன வசதிகள் கொண்ட பயணிகள் முனை ஒன்றும் இங்கே அமைக்கப் பட்டுள்ளது.

600 அடி முகத்துவாரத்தோடும், ஆறு பக்கவாட்டுத் தளங்களோடும் திகழும் இந் துறைமுகம் சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதி

வசதிக்காக 23 கிரேன்களும், 18 ஃபோர்க் லிப்ட் கருவிகளும், 4 பிரும்மாண்டமான சரக்கு லாரிகளும், 4 ரயில் எஞ்சின்களும், தேவையான அளவு சுமார் 46 ஆயிரம் டன்கள் வைப்பதற்குரிய பாதுகாப்புக் கிட்டங்கிகளும் கொண்டுள்ளது. 1979-ஆம் ஆண்டு துறைமுகத்தின் வருமானம் ரூ. 3.7 கோடியாக இருந்த நிலை இன்று ரூ. 15.13 கோடியாக உயர்ந்திருப்பது இத்துறைமுகத்தின் பரிணாம வளர்ச்சிப் படிகளை நமக்குத் தெளிவுறக் காட்டுகிறது.

தூத்துக்குடியின் துறைமுக வளர்ச்சித் திட்டங்கள் மிகக் கவனமாக ஆய்வு செய்யப் பட்டுத் திட்டமிடப்படுகின்றன. கி.பி. 2,000 வரையிலான இத்துறைமுகத்தின் பணித் திட்டத்தை 4-7-1985-ல் இந்தியத் துறை



மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடன் தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு கே. ஏ. சுந்தரம், இ.ஆ.ப.

முகக் கழகம் தயாரித்துத் தந்துள்ளது. இந்த வளர்ச்சி நிலைகளுக்கெல்லாம் ஆதாரம் அமரர் வ.உ.சி. என்பதை நன்றியோடு நினைவு கூர்வதற்காக இத்துறைமுகத்தின் முதல் கப்பல் தளம் 'வ.உ.சி. கப்பல் தளம்' என்றே பெயரிடப்பட்டு வழங்குகிறது. அன்றையப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார், இதற்குத் தகுதியான பெயரினை வைத்துள்ளார்கள்.

தூத்துக்குடித் துறைமுகம், ஆர்வத்தோடு பணியாற்றித் தனக்குப் பெருமை சேர்க்கும் ஊழியர்களையும் ஒரு போதும் மறந்து விடுவதில்லை. ஏராளமான பதவி உயர்வுகள், பணிக்காலப் பயிற்சிகள், சிகிச்சை முகாம்கள், செம்மையான மருத்துவ வசதிகள், குடியிருப்பு வசதிகள், கல்வி மற்றும் தொழிற் பயிற்சிக் கூடங்கள், சமூக நலக் கூடம், திறமைக்கேற்ற விருதுகள், இவைகளுக்காக ஏராளமான திட்டங்களை அவ்வப்போது தயாரித்து, தொழிலாளர்களை அரவணைக்கத் தவறுவதில்லை.

கிட்டத்தட்ட 35 ஆயிரம் மக்களுக்கு நேரிடையாகவோ, பிறிதொரு வழியிலோ வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் தூத்துக்குடித் துறைமுகம் ஒரு மக்கள் நிறுவனமாகவே மலர்ந்துள்ளது. சமுதாயத்தொண்டு தான் வ.உ.சி. நமக்கு வழங்கிய அரிச்சுவடிப் பாடம் என்பதை இன்றும் இந்தத் துறைமுகம் நினைவில் கொண்டுள்ளது.

மூவேந்தர் காலத்தில் முத்துக்குளிக்கும் துறைமுகமாகத் திகழ்ந்த தூத்துக்குடி இன்று இந்திய நாட்டின் சொத்துக் குவிக்கும் துறைமுகமாகத் திகழ்கிறது. சுதந்திரத்தின் பயனை மக்களுக்கு நல்கும் மாபெரும் நிறுவனமான இத்துறைமுகம், வ.உ.சி. யின் கனவுகளின் அடிகாலாக மட்டுமல்ல - அவருடைய நினைவாலயமாகத் தூத்துக்குடியில் திகழ்கின்றது.

5-9-1972 அன்று இந்தத் துறைமுகப் பகுதியில் வ.உ.சி. யின் வடிவச் சிலையைத் திறந்து வைக்க வருகை தந்த மறைந்த முன்னாள் இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள், ''பாரம்பரியமும், பண்பாட்டுச் சிறப்பும் மிக்க இந்த நகரம் வ.உ.சி. யின் வழியில் எதிர்காலத்திலும் எண்ணற்ற புகழை ஈட்டும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு'' என்று குறிப்பிட்டார்கள்.

இன்று இத்துறைமுகம் பெற்றிருக்கும் இமய வளர்ச்சியும், அமரர் வ.உ.சி. பெயரால் ஆரம்பமாகும் மாவட்டமும் அந்தக் கூற்றினை அர்த்தமுள்ளதாக ஆக்கியிருக்கின்றன. விநாடிக்கு விநாடி சாதனைகளை விளைவிக்கும் வேகத் துடிப்போடு அமரர் வ.உ.சி. அமைத்துக் கொடுத்த அலைகடல் தடத்திலே, இந்திய நாட்டின் இந்த இளைய துறைமுகம் என்றும் தன் இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

# சிதம்பரனார் மாவட்டச் சிறப்புகள்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழ்நாடு அரசு, மக்களின் நன்மைக்காக மேற்கொண்டுள்ள பற்பல நல்வாழ்வுத் திட்டங்களின் பயன், மக்களை முழுமையும் சென்றடையும் வகையில் முனைந்து செயல்பட முடிவு செய்தது. அவ்வாறு செயல்பட மாவட்ட நிர்வாகம் திறமையாகச் செயற்படுதல் வேண்டும்; அரசுக்கும் மக்களுக்கும் தொடர்பு மிகவும் நெருக்கமாகவும் இருத்தல் வேண்டும். மற்றும் மக்கள் அரசு அலுவலர்களுடன் எளிதில் தொடர்பு கொள்ளப்போதுமான வசதிகள் இருத்தல் வேண்டும். அவற்றிற்கு மாவட்டங்கள் சிறியனவாக அமைந்திருத்தல் இன்றியமையாதது என்று உணர்ந்து பெரிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு சிறிய மாவட்டங்களாக அமைக்கப்படும் திட்டங்களை வருவாய்த்துறை முனைந்து மேற்கொண்டுள்ளது. மாவட்டங்களைப் பிரிப்பது பற்றி நன்கு ஆராய்ந்து அரசுக்கு ஆலோசனை வழங்க வல்லுநர் குழு ஒன்று 1984ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு மாவட்டங்களைப் பிரிக்கும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சென்ற ஆண்டு (1985) செப்டம்பர் திங்களில், மதுரை மாவட்டம் இரு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, புதிய அண்ணா மாவட்டம் உருவாகியது.

**தேவ. நடராசன்**
**அரசு சார்புச் செயலர், நிதித் துறை.**

தற்பொழுதுள்ள திருநெல்வேலி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, திருநெல்வேலி மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் என இரு மாவட்டங்களாகக் கீழ்க்கண்ட வருவாய்க்கோட்ட மற்றும் வட்டப் பகுதிகளுடன் அமைந்து செயற்படும்.

### திருநெல்வேலி மாவட்டம்

மாவட்டத்தலைமையிடம் : திருநெல்வேலி

| வருவாய்க்கோட்டங்கள் | வருவாய்வட்டங்கள் |
|---|---|
| திருநெல்வேலி | திருநெல்வேலி<br>பாளையங்கோட்டை<br>சங்கரன்கோயில் |
| சேரன்மாதேவி | அம்பாசமுத்திரம்<br>நாங்குநேரி<br>இராதாபுரம் |
| தென்காசி (புதிய வருவாய்க் கோட்டம்) | தென்காசி<br>வீரகேரளம்புதூர்<br>செங்கோட்டை<br>சிவகிரி |

### சிதம்பரனார் மாவட்டம்

மாவட்டத்தலைமையிடம்: தூத்துக்குடி

| வருவாய்க்கோட்டங்கள் | வருவாய் வட்டங்கள் |
|---|---|
| தூத்துக்குடி | தூத்துக்குடி<br>ஸ்ரீவைகுண்டம்<br>திருச்செந்தூர்<br>சாத்தான்குளம் |
| கோவில்பட்டி | கோவில்பட்டி<br>ஓட்டப்பிடாரம்<br>விளாத்திகுளம் |

**வரலாற்றுச் சிறப்பு:**

இம்மாவட்டப் பகுதி மிகத் தொன்மையான பூமியாகும். டாக்டர் கால்டுவெல் என்ற பேரறிஞர், 'தென் இந்தியாவில் மிகப் பழமையான நாகரிகம் நன்கு சிறந்து விளங்கியது, இம் மாவட்டத்தை வளப்படுத்தும் பொருநை



(தாமிரபரணி) ஆற்றங்கரையில்தான்' என்று இப்பூமியின் தொன்மைச் சிறப்பைப் பெரிதும் புகழந்துரைக்கின்றார். பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பல நாடுகளுடனும் இப்பகுதியில் அமைந்துள்ள கொற்கைத் துறைமுகத்திற்கு வாணிகத் தொடர்பு இருந்தது. இப்பூமியின் பழமையை, ஆதிச்சநல்லூர் பகுதிகளில் கிடைத்துள்ள முதுமக்கள் தாழிகளும், ரோமாபுரி நாணயங்களும் உறுதிப்படுத்துகின்றன. கி.மு. 1200லேயே பொருநை ஆற்றங்கரையில் நெல் பயிரிடப்பட்டதாகவும், பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இரும்பு ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டனவென்றும் வரலாற்று ஆராய்ச்சியிலிருந்து செய்திகள் கிடைக்கின்றன.

பழந்தமிழ்நாட்டில் பாண்டி மண்டலத்தைச் சார்ந்த சிதம்பரனார் மாவட்டப் பகுதி, மன்னர்களும் மகுடங்களும் அலங்கரித்த சிறப்பான வரலாற்றுப் பின்னணி கொண்ட பூமியுமாகும். இது ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேல் தமிழ்ப் பண்பாட்டைப் போற்றி வளர்த்துக் காத்த மண்; 'தென் பாண்டி நாடு' என்று போற்றப்பெற்றது. பாண்டிய மன்னர் கி.மு. 600ல் இம்மாவட்டப் பகுதியிலுள்ள கொற்கையில் இருந்துதான் ஆட்சி செய்தனர் என்று தெரிகின்றது. மேலும் இம்மரபினரில் வேறு சிலர் இம்மாவட்டப்பகுதியில் அமைந்துள்ள காயல்பட்டினத்தில் தமதுதலைநகரை அமைத்துக்கொண்டு ஆட்சி செய்து வந்தனர். இவை இப்பகுதியின் வரலாற்றுச் சிறப்பினைப் பெரிதும் உணர்த்தும். பாண்டிநாடு முத்துடைத்து என்று போற்றினார் தமிழ்மூதாட்டி ஔவைப் பிராட்டி. அவ்வாறு பாண்டியப் பெருமன்னர்க்குப் பெருமையளித்த முத்து, இம்மாவட்டத்தின் கடற்கரையில்தான் இன்றும் குளிக்கப்படுகின்றது. 'முத்துக்குளிப்பதொரு தென் கடலிலே' என்று பாட்டுக்கொரு புலவன்பாரதி போற்றியதும் இப்பகுதியைத்தான்.

பாண்டியர்க்குப் பின்னர் நாயக்கர் ஆட்சியிலும் இப்பகுதி நனி சிறந்து விளங்கியது. நாயக்கர் ஆட்சியை நிலை நாட்டிய அரிய நாயக முதலியார் இப்பகுதியில் பல பாளையங்களை அமைத்தார். பாளையக்காரர்கள் காடுகளை அழித்து ஊர்களை உண்டாக்கினர்; வேளாண்மையைப் பெருக்கினர்; சாலைகள், பாசன வசதிகள் முதலியன அமைத்து ஊர்க்காவலையும் மேற்கொண்டனர். இவற்றால் இப்பகுதி சமூக - பொருளாதார மேம்பாடுற்றது. அரியநாயகர் அமைத்த பாளையங்களுள் எட்டையபுரம், பாஞ்சாலங்குறிச்சி, மணியாச்சி முதலியவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். பிற்காலத்தில், ஆங்கிலேயரை எதிர்த்து ஆண்மையும் வீரமும் காட்டிய வீரபாண்டிய கட்டபொம்மனால் இப்பகுதியின் பெருமை மேலும் உயர்ந்தது. பாண்டியர் மட்டுமின்றி சேர, சோழ அரசர்களுக்கும் இப்பகுதியில் நெருங்கிய உறவுகள் இருந்திருக்கின்றன. பாண்டியர் சேரர்-சோழர் ஆகியோரும் சேர்ந்து மூன்று சகோதரர்களாகக் கொற்கையை ஆண்டனர் என்ற ஒரு கருத்தினை டாக்டர் கால்டுவெல் கூறுகின்றார்.

டச்சுக்காரர்களும் ஆங்கிலேயரும் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இப்பகுதியின் ஆதிக்கத்திற்காகப் போரிட்டுள்ளனர். ஆங்கிலேயர் இப்பகுதியில் கால் ஊன்றிக்கொண்டாலும், பாளையக்காரரின் வீரமிக்க எதிர்ப்பால் பிற மாவட்டங்களை விட இப்பகுதியை ஆள்வதைக் கடினமாக உணர்ந்தனர். கட்டபொம்மனையும் ஊமைத்துரையையும் அழித்த பிறகே ஆங்கிலேயர் இப்பகுதியில் தமது ஆட்சியை நிலைநாட்ட முடிந்தது. இம்மாவட்டப் பகுதியும் திருநெல்வேலி மாவட்டப் பகுதியும் சேர்ந்த பகுதி, முதன்முதலில் 1714ல் ஒரு மாவட்டமானதாகத் தெரிகின்றது. பிறகு இராமநாதபுர மாவட்டம் உருவான 1910-வரை மாவட்டத்தின் அமைப்பில் மாறுதல் இல்லை.

இப்பகுதி பெருமைமிக்க பொருநையாறு என்ற புனித ஆறு பாயும் பூமியாகும். பொருநை, தாம்பிரபரணி என்றும் வழங்கப்படுகின்றது; தாமிரச் சத்து நிறைந்த காரணத்தால் அப்பெயர் பெற்றது என்று சொல்வார்கள். 'தண்பொருநை' என்ற பெயரே தாமிரபரணி என்று மருவியது என்ற கருத்தும் உண்டு. தாமிரபரணி, ஸ்ரீவைகுண்டம் வழியாக ஓடி, ஆற்றூர், கொற்கையருகே, ஆழ்வார்திருநகரிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள புன்னைக்காயல் என்னும் இடத்தில் மன்னார் குடாக் கடலில் கலக்கின்றது. இப் பேராறன்றி, கயத்தாறு, வைப்பாறு, வரட்டாறு முதலிய சிற்றாறுகளும் இப்பகுதியில் பாய்கின்றன.

> திருச்செந்தூர் கோயில் இன்று கடற்கரையில் இருக்கிறது. ஆனால், ஆதியில் அது மலை உச்சியில் இருந்தது!
>
> திருச்செந்தூர் கடற்கரையில் இன்றும் கந்தமாதன மலை என்ற மலை இருக்கிறது. (இந்த மலையில்தான் இப்பொழுது வள்ளிக்குகை இருக்கிறது). இந்த மலை மீதுதான் முன்பு முருகன் கோவில் இருந்தது. கடல் பெருகி, மலை மூழ்கவே, இன்று கடற்கரையில் கோவில் காட்சி தருகிறது.
>
> திருச்செந்தூருக்கு வந்த ஆதிசங்கரர் கூட ''மலை மீது முருகன் கோயில் இருக்கிறது'' என்றுதான் பாடியுள்ளார்.

இம்மாவட்டப் பகுதியில் 'குன்று', 'பறம்பு' என்ற பெயர்களால் வழங்கும் சிறு மலைகள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக ஸ்ரீவைகுண்டத்தின் மேற்கே வல்லன் நாட்டுப் பறம்பு உள்ளது. கோவிற்பட்டிக்குத் தெற்கே குருமலையும், கோவிற்பட்டியை ஒட்டித் தென்மேற்கே பொன்மலைக் குன்றும் உள்ளன. குருமலை மருந்து மூலிகைகள் நிறைந்த ஒன்றாகும். அருள்மிகு அனுமன் இலங்கைக்கு தூக்கிச் சென்ற சஞ்சீவி பர்வதமலையிலிருந்து சிதறி விழுந்த கொழுந்துகளால் இவ்வளத்தினை இம்மலை பெற்றது என்ற செவிவழிச் செய்தியும் உண்டு. திருச்செந்தூர் மற்றும் ஸ்ரீவைகுண்டம் கடலோரப் பகுதிகளில் தேரிகள் என்னும் மணற்குன்றுகள் உள்ளன. தேரி என்பது செக்கச் சிவந்த நிறமுடைய மணற்பாங்கான பூமியாகும். சாத்தான்குளம் பகுதியில் இத்தேரிகள் ஒவ்வொன்றும் 200 அடி உயரமிருக்கும். தமிழ்நாட்டில் இத்தகைய பாலைப் பகுதி வேறு எங்கும் இல்லை.

இம் மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளில் பனை மரங்கள் ஏராளமாக வளர்ந்துள்ளன. இப்பகுதிவாழ்மக்களில் பல்லாயிரம் பேருக்குப் பனைமரங்கள் கற்பகத் தருக்களாகப் பயன்படுகின்றன.



1969ல் சென்னைத் துறைமுக வாயிலில் நிறுவப்பட்ட வ.உ.சி. திருவுருவச்சிலை.

இப்பகுதியில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கனிமப் பொருள்களும் கிடைக்கின்றன. மாவட்டக் கடற்கரை மணலில் உலோகச் சத்து நிறைந்த 'மோனசைட்டு' கிடைக்கின்றது. சாத்தான்குளம், கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் இரும்பு, டிட்டானியம் ஆக்ஸைடுகள் உள்ள 'இல்மனைட்டு' கிடைக்கின்றது. கோயில்பட்டி வட்டத்திலும் ஒட்டப்பிடாரம், எட்டயபுரம் பகுதியிலும் சிமென்டு உற்பத்தியில் பெரிதும் உதவும் ஜிப்சம் ஏராளமாகக் கிடைக்கின்றது. அதே போன்று, சிமென்டு உற்பத்தியில் பயன்படும் உயர்தரமான சுண்ணாம்புக்கல் சாத்தான்குளம் பகுதியில் கிடைக்கின்றது. பாஸ்பேட்டு தூத்துக்குடி கடற்கரைப் பகுதியில் கிடைக்கின்றது. இப்புதிய மாவட்டம் தொழில் வளர்ச்சியில் பெரிதும் மேம்பாடுற இவை உதவும்.

**சமயச் சிறப்பு**

சைவ வைணவ சமயக் குரவர்கள் போற்றிய பல திருக்கோயில்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. ஆழ்வார் திருநகரிக்கும் திருச்செந்தூருக்குமிடையே அமைந்துள்ள நாசரேத் என்ற ஊரில் தென்னிந்தியாவின் முக்கிய பிராடஸ்டண்டு கிறிஸ்துவ ஆலயங்களுள் ஒன்றான செயின்ட் ஜான்ஸ் தேவாலயம் இருக்கின்றது. தூத்துக்குடி சாத்தான்குளம் ஆகிய ஊர்களிலும் புகழ்பெற்ற கிறிஸ்தவத் தேவாலயங்கள் இருக்கின்றன. காயல்பட்டினத்திலுள்ள மசூதியின் அமைப்பு தனிச் சிறப்புடையதாகப் போற்றப்படுகின்றது.

இம்மாவட்டப் பகுதியில் அமைந்துள்ள திருச்செந்தூர் தமிழ்நாட்டின் தலைசிறந்த திருத்தலங்களுள் ஒன்றாகும். இங்குள்ள செந்திலாண்டவன் கோயில் அருள்மிகு அருணகிரியாரின் திருப்புகழ்ப் பாடலைப் பெற்றதாகும். இது ஒரு தொன்மையான திருப்பதி. இத்தலத்தை 'அலைவாய்' எனச் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. பாண்டியரின் தலைநகரமாகவும் சிலகாலம் திருச்செந்தூர் இருந்த தென்பர். ஆறுபடை வீடுகளுள் ஒன்றான திருச்செந்தூரில், முருகன் சிவலிங்க வழிபாடு செய்ய, நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். இம்மூலத்தான மூர்த்திக்குப் பின் ஐந்து சிவலிங்கங்கள் உள்ளன. திருச்செந்தூரிலுள்ள நாழிக்கிணறும் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். இது செந்திலாண்டவர் குத்திய வேலால் உண்டானது என்பர். திருச்செந்தூர் திருத்தலம் ஆண்டின் எல்லா நாட்களிலும் திருவிழாக்கோலம் பூண்டு நூற்றுக்கணக்கான மக்களைத் தன்பால் ஈர்க்கின்றது. இம்மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைகுண்டம் - கயிலாசபுரத்தில்தான் திருப்பனந்தாள் காசிமடம் நிறுவிய அருள்மிகு குமரகுருபரர் தோன்றினார்.

இம்மாவட்டப் பகுதியிலுள்ள ஆழ்வார் திருநகரி, புகழ்பெற்ற வைணவத் திருத்தலமாகும். இங்குதான் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் அருளிய ஆழ்வார்களில் ஒருவரான நம்மாழ்வார் அவதரித்த அப்பன்கோயில் இருக்கின்றது. அக்கோயிலிலுள்ள பெரிய புளியமரத்தடியில் (உறங்காப்புளி), நம்மாழ்வார் பல்லாண்டுகள் தவமிருந்து ஞானம்பெற்றார். வைணவர்கள், ஸ்ரீரங்கத்தை 'பூலோக வைகுண்டம்' எனப்போற்றுவது போன்றே, ஆழ்வார்திருநகரியைப் பரமபதத்து எல்லை, என்று போற்றுகின்றனர். ஆழ்வார் திருநகரியில்தான் வியாக்கியான சக்கரவர்த்தியாக விளங்கிய பெரிய்வாய்ச்சான் பிள்ளை பிறந்தார். ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள, ஏறத்தாழ நூற்றுப்பத்தடி உயரமுள்ள கோபுரத்துடன் திகழும் கள்ளப்பிரான் திருக்கோயிலும் ஒரு புகழ் பெற்ற வைணவத் தலமாகும்.

**பிற சிறப்புச் செய்திகள்**

தமிழ்நாட்டில், ஆங்கிலேயர் ஆட்சியில், பாசன அணை கட்டும் வேலை தொடங்கிய காலத்தில், ஸ்ரீவைகுண்டத்தில் 1889ல் பொருனை ஆற்றில் கடைசி அணையாகக் கட்டப்பெற்ற அணை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அக்காலத்திலேயே ஏறத்தாழ ரூ.18 லட்சம் செலவில் உருவான இவ்வணை, 26,000 ஏக்கர் நன்செய் நிலத்திற்குப் பாசன வசதி தருவதாகும்.

பருத்தி வேளாண்மையில் இம்மாவட்டப் பகுதி சிறந்து விளங்குகின்றது. கோவில்பட்டி வட்டம், நாட்டிலேயே பெரிய அளவில் பருத்தி விளையும் பகுதியாக விளங்குகின்றது. இப்பகுதிப் பருத்திக்கு 'டின்னவெல்லிங்' என்றும் 'டின்னிஸ்' என்றும் பெயர் வைத்து, ஆங்கிலேயர் இப்பருத்தியினைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெருமளவில் தங்கள் நாட்டுக்கு ஏற்றுமதி செய்தனர்.

**தூத்துக்குடி**

தூத்துக்குடி, புதிய மாவட்டத்தின் தலைமையிடம். இது ஏற்கெனவே வணிக உலகில் புகழ்பெற்ற பெரு நகரமாகும். வணிக உலகில் தூத்துக்குடி முதன்மை பெற்ற வரலாறு ஒரு நூற்றாண்டுடையது. இவ்வளவு விரைவில்

முதன்மை பெற்ற துறைமுகப்பட்டினம் நம் நாட்டில் பிறிதொன்றுமில்லை எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், ஒரு சில ரூபாய்களுக்கே கடல்வாணிபம் நடந்து வந்தது. அக்காலத்தில், காயல்பட்டினமும் குலசேகரன் பட்டினமும் சிறந்து விளங்கின. சென்னைக்குக் கருப்புக்கட்டியும், இலங்கையிலுள்ள கொழும்புக்குத் துணியும் ஏற்றிச் சென்று வந்த பதினாறு கப்பல்களே இங்கு இருந்தன. கடல் வழிகளில் தூத்துக்குடித் துறைமுகம் ஒரு கடல் வழியாக ஏற்றுக் கொள்ளப்படாமையே இதற்குக் காரணம். 1874க்குப் பின்னர், தூத்துக்குடி வணிக உலகில் முதன்மை பெறத் தொடங்கிற்று.

சீனாவிற்கும் இங்கிலாந்திற்கும் பஞ்சு முழுவதும் இங்கிருந்துதான் சென்றது. 1976ல் தூத்துக்குடிக்குப் புகைவண்டியும் வந்துவிட, இதன் முக்கியத்துவம் உயர்ந்தது. தற்பொழுது சென்னைக்குப் பாதிக்குமேல் இங்கு வாணிகம் நடைபெறுகின்றது.

தூத்துக்குடித் துறைமுகம் மன்னார் வளைகுடா அருகில் அமைந்துள்ளது. இது உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் நாவாய் வாணிகத் தொடர்புடைய இயற்கையான துறை முகமாகும். புயல் கிளம்பாதவாறு-ஒப்பற்ற இயற்கையான பூகோள அமைப்பு இத்துறைமுகத்தின் சீரிய சிறப்பாகும். இலங்கைத் தீவிலிருந்து வெகு அருகில் ஏறத்தாழ 150 கிலோ மீட்டருக்குள்ளாக இத் துறைமுகம் அமைந்துள்ளது இதன் முக்கியத்துவத்திற்கு மேலும் வலுவூட்டுகின்றது. தென் கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்தும் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலிய நாடுகளிலிருந்தும் வரும் கப்பல்களுக்கு இத் துறைமுகமே இந்தியாவின் வாயிலாக விளங்குகின்றது.

**எட்டையபுரம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் இவ்வூருக்கு ஒரு சிறப்பிடமுண்டு, பாட்டுக்கொடு புலவரான கவியரசன் பாரதியைத் தமிழகத்திற்குத் தந்த ஊர் எட்டையபுரம்தான். கடிகைமுத்துப் புலவர், உமறுப்புலவர், ஆகிய தமிழ்ப்பெருமக்களையும் இவ்வூர் தமிழகத்திற்குத் தந்தது.

**பிள்ளைமார் கோட்டை**

ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள மண் சுவரால் அமைந்த கோட்டையாகும். இது கோட்டைப் பிள்ளைமார் என அழைக்கப்படும் பாண்டிய நாட்டு வேளாளரில் ஒரு வகையினர், பத்து ஏக்கர் பரப்பளவுள்ள இக் கோட்டையில் வாழ்ந்து வருகின்றனர். இவர் தம் பெண்மக்கள் கோட்டையைவிட்டு வெளியே வர எக்காரணத்தாலும் அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களை அவர்தம் உறவினர் தவிர, வேறு ஆடவர் எவரும் பார்த்தலும் அனுமதிக்கப்படுவதில்லை.

**ஓட்டப்பிடாரம் :**

கோவில்பட்டி வட்டத்தின் தென்கோடியில் உள்ள இவ்வூரில்தான் இம் மாவட்டத்திற்கே தமது பெயர் அமையக் காரணமாக இருந்த பெருந்தகை கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் பிறந்தார். வீரமும், தீரமும், புலமையும் மிக்க இவர் பிறந்த இல்லம் அரசால் பெறப்பட்டு நினைவு இல்லமாகப் போற்றப்படுகின்றது.

# சிதம்பரச் செம்மல்

—புலவர் தமிழ்ப்பித்தன்

*சீர்மிகு நெல்லைப் பூமி*
*சிறப்பினை எய்து தற்கே*
*பேர்மிகத் தந்தார்; நாட்டில்*
*பெருமையை நாளும் சேர்த்தார்*
*வேர்என விளங்கி நின்றார்;*
*வேளிரின் குலத்தைச் சார்ந்தார்;*
*ஊர்எலாம் போற்று கின்ற*
*உயர்சிதம் பரனார் ஆவார்!*

*வீரமே குடிகொள் நெஞ்சம்;*
*வீணரை ஒடுக்கும் நெஞ்சம்;*
*ஈரமே நிறைந்த நெஞ்சம்;*
*இன்தமிழ் சுரக்கும் நெஞ்சம்;*
*சாரமில் வாழ்க்கை எய்திச்*
*சங்கடம் கண்ட போதும்*
*தீரமாய் விளங்கி நிற்கும்*
*சிதம்பரச் செம்மல் நெஞ்சம்!*

*வெள்ளையர் கலக்கம் எய்த*
*விரிசுடர்க் கப்பல் ஓட்டிக்*
*கொள்ளையைத் தடுத்தார்; நாட்டின்*
*கூனலை நிமிர்த்தார்; மாற்றார்*
*துள்ளலை ஒடுக்கி வைத்தார்;*
*தொழில்புரி இனத்தார்க் கெல்லாம்*
*வள்ளலாய்க் காட்சி தந்தார்*
*வான்மழைத் தோற்றம் தந்தார்!*

*மேதினி வாழ்வில் மக்கள்*
*வேதனை அனலைச் சேர்க்கும்*
*சாதியை வகுத்த போதும்*
*சார்ந்திடார் அந்தப் பக்கம்!*
*நீதியை, நேர்மை என்னும்*
*நேசத்தைக் கொல்லு கின்ற*
*சாதியின் திமிரைக் கொன்றார்*
*சரித்திரம் போற்ற நின்றார்!*

*அன்னவர் திறத்தை எண்ணி*
*அருந்தமிழ் நாட்டோர் எல்லாம்*
*பன்னரும் சொற்கள் சொல்லிப்*
*பார்க்கிறோம்; அவரைப் போன்றே*
*நன்னயம் நாளும் செய்தே*
*நாட்டினுக் குழைத்தே நின்றால்*
*என்னரும் நாட்டுத் தாய்தான்*
*இன்புற மகிழ்வாள் அன்றோ?*

# தந்தை பெரியாருடன் வீரர் சிதம்பரனார்



நாற்காலியில் அமர்ந்திருப்போர்: 1. தந்தை பெரியார், 2. வ.உ. சிதம்பரனார், 3. சிதம்பரம் தண்டபாணிப் பிள்ளை, 4. திரு.வி.க. 5. டாக்டர் வரதராசுலு நாயுடு.

## பாவேந்தரும் நாவேந்தரும்

திங்கட்கிழமை காலை நான் பாளையங் கோட்டை ஜெயிலுக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்குள்ள அதிகாரிகளின் அனுமதியின்பேரில் உள்ளே சென்று, வ.உ.சி.,சிவா இருவரையும் கண்டு பேசினேன். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையை நான் தூத்துக்குடியிலேயே அவருடைய அரிய பிரசங்கங்களை ஆயிரக்கணக்கான ஜனங்கள் கேட்டுப் புகழ்ச்சி கூறிக்கொண்டிருந்த காலத்தில் பார்த்தபொழுது அவருடைய முகம் எவ்வளவு பிரசன்னமாகவும், தேஜஸுடனும்விளங்கியதோ அதே மாதிரியிலேயே இப்பொழுதும் இருக்கக் கண்டேன். உடனே எனக்கு,

மெய்த்திருப் பதமேவென்ற போழ்தினும்
இத்திருத் துறந்து ஏகுஎன்ற காலையும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்.

என்ற கம்பராமாயணப் பாடல் நினைவிற்கு வந்தது. அதிகாரிகள் இவர் தலைமீது செக்ஷன் கணக்கான கேஸ்களைக் கொண்டு சுமத்தியிருக்க, ஜெயிலிலே அதிபாதகமான குற்றவாளிகளுடன் சேர்ந்து அடையுண்டவராக இருக்கவும், இவருக்கு விரோதமாக இதுவரை சொல்லப்பட்டிருக்கும் சாட்சிகள் வெகு பலமாகவும், பயத்தை விளைவிக்கக் கூடியனவாகவும் இருக்க, இவர் சிறிதேனும் முகவாட்டம் இல்லாமலும், சோர்வில்லாமலும் வீர மூர்த்தியாக விளங்கிய அற்புதத்தைக் காண்பேன். அதை என்னால் வருணிக்க முடியாது.

—பாரதியார் (2-5-1908)

## தீவே நன்று!

ஆங்கிலேய அரசினால் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்ட வ.உ. சிதம்பரனார் அவர்கள் சிறைச்சாலையில் பலவகையில் துன்புறுத்தப்பட்டார். அந்தச் செய்தியை அவர் பாடல் கடிதங்களாக எழுதி, தமது மனைவிக்குத் தெரிவித்து வந்தார்.

சிதம்பரனார் படும் துன்பங்களை அறிந்த அவரது மனைவி மீனாட்சி அம்மாள், மனம் கொதித்தார். அவர், இந்தியாவை ஆட்சி செய்துவந்த 7-வது எட்வர்டு மன்னருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

“சிறையதிகாரிகள் என் கணவரைச் செக்கிழுக்க வைத்தும் கல்லுடைக்கச் செய்தும் துன்புறுத்துகின்றார்கள். இதைத் தடுக்க வேண்டும்; அல்லது இந்தக் கணமே அவரைக் கண் மறைவாக அந்தமான் தீவுக்கு அனுப்பி விடுதல் நலம்’’ என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

மிகுந்த மனோதிடம் கொண்டவர் மீனாட்சி அம்மாள் என்பது இந்தச் செய்தியால் தெரிய வருகிறது.



வ.உ.சி. 1900-ஆம் ஆண்டில்

“இனி என்பேரில் கலகக் குற்றஞ்சாட்டப்படும். அவர்கள் எச்சரிக்கின்றபடி விலகா விட்டால் என்னையும், சுட்டுத் தள்ளிவிட இருக்கிறார்கள். யாரோ ஒரு பெரிய போலீஸ் அதிகாரி தம் படையோடு வந்து சுட்டுத் தள்ளும் பட்சத்தில் என்ன செய்யக் கூடும் என்று என்னையே கேட்டால் 35 கோடி ஜனத்திலே 3,000, 4,000 பேர் சுடப்பட்டால்தான் என்ன! அப்பேர்ப்பட்ட சாவு எங்களுக்கு விதிக்கப் பட்டதானால் நானும் சிவாவும் சுடப்படத் தயார்தான். மனிதன் இறக்கவே பிறக்கிறான்; இன்னவிதமாய் இறக்கிறோம் என்பதைக் கவனிக்கவில்லை. இந்தியன் இறப்பதற்கு அஞ்சான்! ”

—தூத்துக்குடியில் பேச்சு
(3.3.1908)

# சிதம்பரனாரின் பதிப்புரைகள்

## தொல்காப்பியத்துக்கு ...

(தொல்காப்பியத்தின் கடைசிப் பகுதியாகிய மெய்ப்பாட்டியல் முதலிய நான்கையும் பதித்து வெளியிடும்போது 15.1.1936ல் வ.உ.சி எழுதிய பதிப்புரை.)

''தொல்காப்பியத்தைப் படிக்கும் பாக்கியம் எனக்கு 1910-ஆம் வருடம் கிடைத்தது. அதன் பொருளதிகாரத்தை யான் படித்தபோது, அதில் வேறு எம்மொழி இலக்கணத்திலும் காணப் படாத நிலப்பாகுபாடு, நிலங்களின் மக்கள், ஏனைய உயிர்கள், மரங்கள், செடிகள், மலர்கள், மக்களது ஒழுக்கங்கள், பழக்க வழக்கங்கள் முதலியன கூறப்பட்டிருக்கக் கண்டேன். இவ்வொப்புயர்வற்ற நூலைத் தமிழ் மக்கள் படியாததற்குக் காரணம் இந்நூலிற்கு ஆன்றோர் இயற்றியுள்ள உரைகளின் கடின நடையென்று உணர்ந்தேன். இந்நூலைத் தமிழ் மக்கள் யாவரும் கற்கும்படி எளிய நடையில் ஓர் உரை எழுத வேண்டுமென்று நினைத்தேன்; உடனே எழுத்ததிகாரத்தின் முதற் சில இயல்களுக்கு உரையும் எழுதினேன்.

''பின்னர், யான் சென்னை - பிரம்பூரில் வசித்த காலத்தில் என் உரையைப் பூர்த்தி செய்யக் கருதி முன் எழுதியிருந்த எழுத்ததிகார இயல்களின் உரையைத் திரு தி. செல்வக் கேசவராய முதலியார் (எம்.ஏ.) அவர்களும் யானும் சரிபார்த்தோம். அப்போது தொல்காப்பிய இளம்பூரண எழுத்ததிகார அச்சுப் புத்தகமும், சொல்லதிகார ஏட்டுப் பிரதியொன்றும் திரு த. கனகசுந்தரம் பிள்ளை (பி.ஏ.) அவர்களிடமிருந்து கிடைத்தன. இளம்பூரணத்தை யான் படித்தபோது அதன் உயர்வும், சிறப்பும், எளிய நடையும் தொல்காப்பியத்திற்கு யான் உரையெழுதுவது மிகையென்று நினைக்கச் செய்தன. பின்னர் என் உரையைப் பூர்த்தி செய்யும் எண்ணத்தை விடுத்து, இளம் பூரணத்தை அச்சிட்டு வெளிப்படுத்த எண்ணினேன். முதலில் எழுத்ததிகாரத்தை ஒரு புத்தகமாகவும், பின்னர் பொருளதிகாரத்தின் அகத்திணை யியலையும் புறத்திணை யியலையும் ஒரு புத்தகமாகவும் அச்சிட்டு வெளிப்படுத்தினேன். அச்சமயம் யான் சென்னையை விட்டுக் கோயம்பத்தூர் முதலிய வெளியூர்களுக்குச் சென்று அவ்வூர்களில் வசிக்க நேர்ந்தது. அதனால் இளம்பூரணப் பொருளதிகாரத்திற் பிந்திய இயல்களை அச்சிட்டு முடிக்க இயலாமற் போயிற்று.

## மெய்யறிவு என்னும் நூலுக்கு...

இராஜ நிந்தனைக் குற்றத்திற்காக யான் நாடு கடத்தல் தீர்ப்புப் பெற்றுக் கண்ணனூர்ச் சிறையில் வசித்த காலத்தில் என் பக்கத்தில் வசித்துக் கொண்டிருந்த மற்றைக் குற்றவாளிகளுக்குப் பல பாவங்களையும், அவற்றால் இம்மையிலும் மறுமையிலும் விளையும் கேடுகளையும் அவற்றை நீக்குவதற்குரிய மார்க்கங்களையும் அடிக்கடி யான் எடுத்துக் கூறுவதுண்டு. ஒருநாள் அக்குற்றவாளிகளிற் சிலர் ''பல பாவங்களையுந் தொகுத்துச் சில பாக்களாகச் செய்து கொடுத்தால் அவற்றை நாங்கள் மனப்பாடம் செய்து வைத்து அடிக்கடி நினைத்துக் கொள்வோம்'' என்று கூறினர். அவர் சொற்படி அன்றிரவு இந்நூலின் ''மறங்களைதல்'' என்னும் அதிகாரத்திலுள்ள பத்து வெண்பாக்களையும் பாடி மறுநாள் அவர்களுக்குச் சொன்னேன். அவற்றை அவர்கள் மனப்பாடம் செய்த பின்னர் அவர்களது விருப்பப்படியே இந்நூலின் ''அறம்புரிதல்'' என்னும் அதிகாரத்திலுள்ள பத்து வெண்பாக்களையும் இரண்டு அதிகாரங்களாக்கி, அவற்றை முன்னும் பின்னும் சில அதிகாரங்களைச் சேர்த்து, மொத்தம் நூறு வெண்பாக்களாக்கி, அவற்றை ''மெய்யறிவு'' என்னும் பெயருள்ள இந்நூலாக உருப்படுத்தினேன். உரைகோளாளர் ஒருவரால் இதன் உரை எழுதப்பட்டது. அவர் பெயரை வெளியிட அவர் விரும்பாததால் அதனை யான் இங்குக் கூறவில்லை.

இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கில் இன்பம் தவிர மற்றைய மூன்றையும் உணர்த்தாநின்ற நூல்களின் சாரம் என்று கொள்ளத்தக்கது. அறநூலும், பொருள் நூலும், வீட்டு நூலும் கற்றுணர்ந்து அம் முப்பொருள்களையும் அடைவிக்கும் நெறிகளில் ஒழுகுபவரே இந்நூலைச் சொல்லுவதற்கு உரியவர். இந்நூலைக் கேட்போர் அறங்களைச் செய்யவும் பேணவும் அவற்றிற்குப் பொருத்தமான நிலைகளை எய்தவும் முயற்சிக்கச் செய்தலே இந்நூலைச் சொல்லும் முறை. அறத்தையோ, பொருளையோ, அடைய அவாவுகின்ற ஆண்பாலாரும் பெண்பாலாரும் இந்நூலைக் கேட்டற்கும் கற்றற்கும் உரியவர். இந்நூல் கூறும் அறநெறியையும் பொருள் நெறியையும் வீட்டு நெறியையும் நன்கு உணர்ந்து, பற்றி நின்று அவற்றை ஒழுகுதலே இந்நூலைக் கேட்கும் அல்லது கற்கும் முறை. இந்நூலும் எனது முதல் மனைவி வள்ளியம்மை சரித்திரமும் தென் ஆப்பிரிக்காவில் வசித்துவராநின்ற எனது மெய்ச்சகோதரர்கள் ஸ்ரீமான். த. வேதியம் பிள்ளையவர்களும் ஸ்ரீமான். சொ. விருத்தாசலம் பிள்ளையவர்களும் அளித்த பொருளுதவியால் அச்சிடப்பெற்றன.

# தரத்தின் சின்னம் 'டான்சி'



தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின்(டான்சி) விழாக் காலச் சிறப்பு விற்பனைத் தொடக்க விழா 1.10.86 அன்று கோலாகலமாக நடந்தது.

நிர்வாக இயக்குநர் திரு ந.பி. குப்தா இ.ஆ.ப.,அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

'டான்சி' தலைவர் திரு ப.பா. கிருஷ்ணசுவாமி,இ.ஆ.ப., தலைமை வகித்துப் பேசுகையில், ''டான்சி மூலம் தமிழ்நாட்டுத் தொழில் வளம் பெருகியிருக்கிறது. உற்பத்தியும் விற்பனையும் பெருக வேண்டும், விலை குறைய வேண்டும், தரம் உயர வேண்டும் என்பதுதான் டான்சியின் கொள்கை ''என்றார்.

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு ஆனூர் ஜெகதீசன் அவர்கள், முதல் விற்பனையைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தனியார் உற்பத்திப் பொருள்களைக் காட்டிலும் டான்சியின் பொருள்கள் நேர்த்தியாகவும், தரமாகவும் உள்ளன. அதே சமயத்தில் நல்ல பொருள்களை வாங்கினோம் என்ற திருப்தியும் ஏற்படுகிறது.

''டான்சி வெறும் மேசை நாற்காலி மட்டும் செய்யவில்லை. பாதுகாப்புத் துறைக்குத் தேவையான பொருள்கள், தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள், முதலமைச்சர் கல்விச் சத்துணவுத் திட்டத்துக்கான உணவுக் கூடங்களை அமைப்பதுடன், அதற்கான பாத்திரங்களையும், கட்டடத் தளவாடப் பொருள்கள் முதலானவற்றையும் தயாரிக்கின்றன.''

விழாவில் திரு ஆர்.எஸ்.முனிரத்தினம் எம்.எல்.ஏ., தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனத் தலைவர் திருமதி கல்யாணி ராமசாமி, தொழில் துறை இயக்குநர் திரு சி. செல்லப்பன், இ.ஆ.ப., டான்சி இயக்குநர் திரு சையது அப்துல் கபூர் ஆகியோர் பேசினர். சிறந்த தொழிலாளர்களுக்கு மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், தமிழ்நாடு அரசு, முதல் முதலில் நிறுவிய பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்றாகும்.

இந்தியத் துணைக் கண்டத்தின் அனைத்து மாநிலங்களிலும், பொதுத்துறை நிறுவனங்கள் பரவலாகத் தோற்றுவிக்கப்பட்டன. தமிழ்நாடு தவிர்த்து, பிற மாநிலங்களில் இருந்த இந்த நிறுவனங்கள் அனைத்தும் அந்தந்த மாநில அரசுகளால் தொடர்ந்து நடத்த முடியாமல் கைவிடப்பட்டன. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் ஒன்றே தொடர்ந்து தனது பணியினைச் சிறப்பாகக் கையாண்டு, அகில இந்தியாவிற்கும் முன்மாதிரியாக விளங்குகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு ரூ. 2.50 கோடி ஒதுக்கியுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ. 20 இலட்சம் டான்சிக்கு அரசு வழங்கியுள்ளது. ஆண்டு இறுதிக்குள் ரூ. 80 இலட்சம் இந்தத் திட்டங்களுக்காகச் செலவிடப்பட இருக்கிறது.

ஆண்டுதோறும், டான்சி விழாக் காலங்களில் இல்லங்களுக்குத் தேவைப்படும் பலதிறப்பட்ட தரம்மிகுந்த பர்னிச்சர் வகைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது.

இந்த விழாக் காலத்தில் டான்சி இரும்பு மற்றும் மர பர்னிச்சர் வகைகள் அனைத்திற்கும் 15 சத வீதம் தள்ளுபடி தரப்படுகிறது. இந்த ஆண்டு விற்பனையின் சிறப்பு, மர பர்னிச்சர்களில் ''பாப்புலர்'' என்ற வகைகள் குறைந்த விலைகளில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கின்றன.

—நமது செய்தியாளர்.



# மதுரை மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

**1986** ஆகஸ்ட், முடிய குறுவை 6,310 எக்டேரிலும், நவரை 540 எக்டேரிலும், சோளம் (இறவை) 2,848 எக்டேரிலும், சோளம் (மானாவாரி) 8,899 எக்டேரிலும், கம்பு (இறவை) 2,756 எக்டேரிலும், கம்பு (மானாவாரி ) 800 எக்டேரிலும், ராகி (இறவை) 929 எக்டேரிலும், ராகி (மானாவாரி) 52 எக்டேரிலும், பயறுவகை 8,849 ஹெக்டேரிலும், பருத்தி (இறவை) 1,385 எக்டேரிலும், கரும்பு 4,974 எக்டேரிலும், இதர சிறுதானியங்கள் 6,489 எக்டேரிலும் பயிரிடப்பட்டுள்ளது. பெரியாறு, வைகை ஆற்றுப்பாசனப் பகுதிகளுக்கு நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நெல் நாற்றங்கால் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது. தேவையான நெல் விதைகள் வேளாண்மை கிடங்குகளில் இருப்பு வைத்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**பிற்படுத்தப்பட்டோர் நலம்**

மதுரை மாவட்டத்தில் கல்லூரி மாணவர்களுக்காக 3 இல்லங்களும், கல்லூரி மாணவியர்களுக்காக 1 இல்லமும், அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்காக 25 இல்லங்களும், மாணவியர்களுக்காக 4 இல்லங்களும் ஆகமொத்தம் 33 இல்லங்கள் உள்ளன. இவற்றில் 2,361 மாணவ மாணவியர் தங்கிப் பயன் பெறுகிறார்கள்.




நடப்பாண்டிற்கு மாணவர், மாணவியர் இல்லங்களுக்கு உணவுக்காக ரூ. 26 இலட்சமும், சீருடைக்காக ரூ. 1,34,000 படிப்பிற்கு உதவித்தொகை வழங்க ரூ. 39,51,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்காக!**

ஒரு கிராமத்திற்கு ஒரு நியாயவிலைக் கடை என்னும் வீதத்தில் கிராமப்பகுதிகளில் நியாயவிலைக்கடைகளைத் திறக்க ரூ.19.40 லட்சமும், நியாயவிலைக்கடைகளைக் கூடுதலாகத் திறக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்க ரூ. 2.80 லட்சமும், நுகர்வோர் சங்கங்கள் கிடங்குகள் கட்டுவதற்கு நிதியுதவி அளிக்க ரூ. 3.16 லட்சமும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக்கழகம் கிடங்குகள் கட்ட நிதியுதவி அளிக்க ரூ. 1.448 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உணவுப்பொருள் கையிருப்பு**

12,295 டன் நெல், புழுங்கல் அரிசி 14,805 டன், பச்சரிசி 676 டன், சர்க்கரை 1,162 டன் கையிருப்புள்ளது

**மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பணிகள்.**

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இந்நிதியாண்டில் ஆகஸ்டு, 86 வரை 23,480 பேருக்கு குறுகிய காலக்கடன் ரூ. 527.55 லட்சமும், மத்தியகாலக் கடனாக 1,365 பேருக்கு ரூ. 32.‌.0 லட்சமும், நீண்ட காலக் கடனாக 522 பேருக்கு ரூ. 9.16 லட்சமும், நகைக்கடனாக சங்கங்கள் மூலம் 3,485 பேருக்கு ரூ. 148.10 லட்சமும், மத்திய வங்கியின் மூலம் 1,822 பேருக்கு ரூ. 81.17 லட்சமும் தொழில் கடன் 82 பேருக்கு ரூ.1.60 லட்சமும் வழங்கியுள்ளது.

**பயிர் ஈட்டுறுதித் திட்டப் பணிகள்.**

ஆகஸ்டு, 86 வரை இத்திட்டத்தின் கீழ் நெல் பயிர் வகையில் 296 விவசாயிகள் உறுப்பினர்களாக்கப்பட்டு, 857 ஏக்கர் நிலப்பரப்பிற்கு ரூ. 5 லட்சம் கடன் வழங்கியதில் ரூ. 7,54,948 ஈட்டுறுதி செய்யப்பட்டு, ரூ. 12,867 பிரிமியம் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

நிலக்கடலை (மானாவாரி) வகையில் 522 ஏக்கர் நிலப்பரப்பிற்கு, காப்பீட்டுறுதித் தொகையாக ரூ. 2,53,274 செய்யப்பட்டு, ரூ. 2,035 பிரிமியம் வசூலிக்கப்பட்டுள்ளது.



**சமூகக் காடுகள் வளர்ப்புப் பணிகள்.**

சமூகக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வளர்க்கப்பட்ட காடுகள் மூலம் கிடைத்த தொகையில் 50% தொகை அந்தந்த ஊராட்சி மன்றங்கட்கு வழங்கப்பட்டுள்ளது. இதுகாறும் ரூ. 5,69,375 அந்தந்த ஊராட்சி மன்றங் கட்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகையா கும்.

நடப்பாண்டில் 4,40,000 கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய ரூ.4.62 லட்சமும், சமுதாயக்காடுகள் 1000 எக்டேரில் வளர்க்க ரூ. 16.80 லட்சமும் 5 கி.மீ. சாலை ஓரத்தில் மரம் நட ரூ. 35,600ம், 8 கி.மீ. இருப்புப்பாதை ஓரத்தில் மரம் நட ரூ. 75,400ம், கண்மாய் ஓரங்களில் பசுந்தழை நாற்றுகள் நட ரூ. 4,000ம், மனமகிழ் காடுகள் 1,20,000 நட ரூ. 72,000, மரம் வளர்ப்பு விரிவாக்கத் திட்டத்தில் 9 லட்சம் மரங்கள் நட ரூ. 21.34 லட்சமும், பழைய் தோட்டங்களைப் பராமரிக்க, பணி யாளர்கள் செலவினத்திற்காக ரூ. 17.36 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன.

**ஆதிதிராவிடர் மேம்பாட்டிற்கு.**

ஆதிதிராவிடர் பொருளாதார மேம்பாட் டுத்திட்டத்தின் கீழ் 86-87வது நிதியாண்டில் 311 பேருக்கு வீடுகள் கட்டித்தர ரூ. 18.66 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆண்டிப் பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குன் னூரில் 67 வீடுகளும், கோவில்பட்டியில் 20 வீடுகளும் மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத் தில் உள்ள ஆத்தங்கரைப்பட்டியில் 32 வீடு களும் கட்டப்பட்டு வருகின்றன.

**நகர்ப்புற ஆதிதிராவிடர்கட்கு சிறுதொழில்.**

நகர்ப்புறத்தில் வாழும் ஆதிதிராவிடர் கட்கு சிறுதொழில் துவங்க 50%மானியத்துடன் 150 பேருக்கு நடப்பு நிதியாண்டில் வழங்கு வதற்காக, மானியத்தொகை ரூ. 4.50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுகாறும்122 பேருக்கு ரூ. 3 லட்சம் மானியம் வழங்கப்பட் டுள்ளது.

**கிராமப்புற ஆதிதிராவிடர்களுக்கு சிறுதொழில் துவங்க!**

நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 352 பேருக்கு ரூ. 19,500 மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**வறட்சி நிவாரணப்பணிகள்.**

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 200 ஆழ்குழாய்க்கிணறுகள் ஊராட்சி ஒன்றி யப்பகுதிகளில் அமைக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக 150 புதிய ஆழ்குழாய்க்கிணறுகள் அமைக்க அனுமதிக்கப்பட்டு, இதுகாறும் 50 ஆழ்குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

பேரூராட்சிகளில் 25 ஆழ்குழாய்க்கிணறு கள் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண் டுள்ளன.

554 கிணறுகளை ஆழப்படுத்த அனுமதிக் கப்பட்டு, 527 கிணறுகள் ஆழப்படுத்தப்பட் டன. இதற்காக ரூ. 21.94 லட்சம் செலவிடப் பட்டுள்ளது.

தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத் தின் கீழ் 69 கிணறுகள் ரூ 5 லட்சம் செலவில் ஆழப்படுத்தப்பட்டன.

பேரூராட்சிப் பகுதிகளில் 12 கிணறுகள் ரூ. 40 ஆயிரம் செலவில் ஆழப்படுத்தப்பட் டன.

பழுதடைந்த ஆழ்குழாய்க்கிணறுகளுக்காக 120 ஆழ்குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் முதல் கட்டமாக திருமங் கலம் நகராட்சியில் 10 ஆழ்குழாய்க் கிணறு களும், கம்பம் நகராட்சியில் 10 ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டன. இரண்டாவது கட்டமாக தேனி அல்லி நகரத்தில் 15, போடி நாயக்கனூரில் 3, பெரியகுளத்தில் 3, சின்ன மனூரில் 9, மேலூரில் 10 ஆக மொத்தம் 40 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

குடிநீர் வழங்கும் பணிகட்காக, தேனிக்கு ரூ. 5 லட்சமும் பெரியகுளத்திற்கு ரூ. 3 லட்ச மும், மேலூருக்கு ரூ. 3.50 லட்சமும், ஆக மொத்தம் ரூ. 11.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேலைகளைத் துவக்கிட, குடி நீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட் டுள்ளது.

**விதவைகள் குடும்பம் வாழ!**

விதவைகள் மகள் திருமணத்திற்காக, 60 பேர்கட்கு தலா ரூ. 1000ம் வீதம் வழங்கு வதற்கு ரூ. 60,000-ம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.



**சிறுசேமிப்பு வசூல்**

நடப்பு நிதியாண்டில் ரூ. 720 லட்சம் சிறுசேமிப்பு வசூல் செய்ய தற்காலிகமாக இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. தற்போது அது ரூ. 1,044 லட்சமாக உயர்த்தப் பட்டுள்ளது. ஜூலை 86 முடிய ரூ. 436.19 லட்சம் சிறுசேமிப்பு வசூல் செய்யப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகள்.**

இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 14,567 குடும்பங்கள் பயனடைய ரூ. 200 லட்சம் மான்ய உதவி அளிக்கப்படவுள்ளது.

ஆகஸ்டு 86 வரை 3970 குடும்பங்களுக்கு ரூ. 56.65 லட்சம் மான்யமும், ரூ. 90.33 லட்சம் கடனும் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 2,093 ஆதிதிராவிடர்களும், 1357 பெண்களும் அடங்குவார்கள்.

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டப் பணிகள்.**

இத்திட்டத்தின் கீழ் பணிகளை நிறைவேற்ற நடப்பு நிதியாண்டிற்கு ரூ. 211.27 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 21 ஊராட்சி ஒன்றியங்களிலும் இதுகாறும் ரூ.87.63 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டப்பணிகளை நிறைவேற்ற 2419 டன் அரிசியும், 2419 டன் கோதுமையும் நடப்பாண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுகாறும் 408 டன் அரிசி, 186 டன் கோதுமை விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதியளிப்புத் திட்டப் பணிகள்.**

30 கசிவுநீர்க்குட்டைகள் ரூ. 30 லட்சம் மதிப்பீட்டில் உருவாக்க வேலைகள் துவங்கியுள்ளன.

693 வீடுகள், தலா ரூ. 6000 செலவிலும், அதற்கு இதர வசதிகள் தலா ரூ.3000 வீதமும் ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் கட்ட வேலைகள் துவங்கிவிட்டன.

இதுகாறும் ரூ. 28.72 லட்சமும், 160 மெட்ரிக் டன் அரிசி, 320 மெட்ரிக் டன் கோதுமை செலவிடப்பட்டுள்ளன. இதுகாறும் 387 வீடுகள் முடிக்கப்பட்டன.

நடப்புநிதியாண்டில் 1081 வீடுகள் கட்டத்துவங்கியுள்ளனர்.

**தொழில் வளர்ச்சிக்கு.**

தொழில் வளர்ச்சிக்கு மாவட்டத்தொழிமையம் மூலம் ஆகஸ்ட் 86 வரை 1092 சிறுதொழில்கட்கு தற்காலிகச் சான்றுகளும், 2109 சிறுதொழில்கட்கு நிரந்தரப்பதிவுச் சான்றும் வழங்கப்பட்டுள்ளன.

15 ஊராட்சி ஒன்றியங்களில் தொழில் ஊக்குவிப்பு முகாம் நடத்தப்பட்டு 491 தொழில் முனைவர்கள் தொழில் துவங்க உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**குடிநீர் வழங்க நிதி ஒதுக்கீடு.**

மதுரை மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் 200 குடியிருப்புகட்கு குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற ரூ. 205.25 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நகர்ப்புறக்குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்புநிதியாண்டிற்கு, திருமங்கலத்திற்கு ரூ. 7.60 லட்சம், மதுரை மாநகராட்சிக்கு ரூ. 34 லட்சம், உசிலம்பட்டிக்கு ரூ. 46,000ம், அலங்காநல்லூருக்கு ரூ. 10.32 லட்சம், மதுரை அரசு இராசாசி மருத்துவ மனைக்கு ரூ. 19.40 லட்சம், கூடலூருக்கு ரூ. 62.55 லட்சம், காமயக்கவுண்டன் பட்டிக்கு ரூ. 14.11 லட்சம், கம்பத்திற்கு ரூ. 42.34 லட்சம், புதுப்பட்டிக்கு ரூ. 8 லட்சம், ஹனுமந்தன்பட்டிக்கு ரூ. 8.15 லட்சம், உத்தமபாளையத்திற்கு ரூ. 24.94 லட்சம், சின்னமனூருக்கு ரூ. 6.896 லட்சம், தேனிக்கு ரூ. 14.88 லட்சம், போடிக்கு ரூ. 67,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன.




**ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலப்பணி.**

ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் நடப்பு நிதியாண்டில் பல்வேறு வகைகளில் பணிகளை நிறைவேற்ற ரூ. 1,24,46,000ம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; இதில் உபகாரச்சம்பளமாக கல்லூரியில் படிப்போர்க்கு ரூ. 3,18,000ம் பள்ளியில் படிப்போர்க்கு ரூ. 7,57,000ம் வழங்கப்படும். மேலும் உசிலம்பட்டி, சொக்கிகுளம், எரசக்கநாயக்கனூர், ஆண்டிப்பட்டி, பேரையூர் ஆகிய இடங்களில் மாணவியர் இல்லங்கட்கு கட்டடங்கள் கட்ட ரூ. 87.22 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மின்துறையின் ஆக்கப்பணிகட்கு நிதி ஒதுக்கீடும் பணிகளும்.**

மின்துறையின் மூலம் பல்வேறு பணிகளை நிறைவேற்றும் வகையில் டிரான்ஸ்மிசனுக்காக ரூ. 33.25 லட்சமும், மின்சார விநியோகப் பணிகட்காக ரூ. 131.10 லட்சமும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தாழ்ந்த மின் அழுத்த தொழிற்சாலைகள் 300க்கு மின் இணைப்புத்தரவும் 1,489 பம்பு செட்டுகட்கு மின் இணைப்புத்தரவும் 100 குடிசைகட்கு மின் இணைப்புத் தரவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 523 குடிசைகட்கும் 193 பம்பு செட்டுகள் 126 தொழிற்சாலைகட்கும் மின் இணைப்புச் செய்து தரப்பட்டுள்ளது.

# மறைமலை நகர் விழா

சென்னையிலிருந்து செங்கற்பட்டு செல்லும் தேசிய நெடுஞ்சாலையில், 43-ஆவது கிலோ மீட்டரில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் புதிதாக உருவாக்கப்பட்டு வரும் நகரமே மறைமலைநகர்.

மறைமலைநகர் திட்டப்பணிக்காக 3,300 ஏக்கர் நிலம் கையகப்படுத்தத் திட்டமிடப்பட்டது. வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், முதல்கட்டமாக இரண்டே முக்கால் கோடி ரூபாய் செலவில் 1,186 குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டன. இப்போது இரண்டாவது கட்டமாக ஏறத்தாழ ஒன்றரைக்கோடி ரூபாய் செலவில் 786 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இதுவரை ஏறத்தாழ 1,300 குடும்பத்தார் குடியேறியுள்ள மறைமலை நகரில், அண்மையில் ஓர் இனிய விழா காலை நேர நிகழ்ச்சியாகக் கவினுற நடைபெற்றது (27-9-1986); மறைமலைநகர் நகர்ப்புற வசதிகள் துவக்க விழாவே அது.



ரூ. 145.83 இலட்சம் திட்ட மதிப்பிலான இரண்டாம் கட்ட கூட்டமைப்பு வீட்டுவசதித் திட்டம்; ரூ. 2.03 இலட்சத்தில் சமூகக் கூடம்; ரூ. 2.26 இலட்சத்தில் மருந்தகக் கட்டடம்; ரூ. 80 இலட்சத்தில் புதிய குடியிருப்புப் பகுதி ஆகியவற்றிற்கான திறப்பு விழாவும், ஆற்றப்படவிருக்கும் அரிய பணிகளின் அற்புதத் துவக்க விழாவுமே அது.

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு ந. நல்லுசாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு. ஆனூர் கோ. ஜெகதீசன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் - மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன்அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. வி. ஆர். மணிமாறன் அவர்கள் குத்துவிளக்கேற்றி வைத்தார்.

வேலூர் செல்வரத்தினத்தின் 'கீதாலயா' குழுவினரின் தமிழ்த் தாய் வாழ்த்து வரையிலான இசை நிகழ்ச்சி, தொடக்கத்தில் களைகட்டியது. விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சிறுவர் சிறுமியரால் மலர் தூவி மகிழ்ந்து வரவேற்கப்பட்டார்கள்.

25-7-'85 முதல், நகரியம் ஆகிவிட்ட மறைமலை நகரின் கீழ் 16 கிராமங்கள் உள்ளன. மறைமலை நகர் நகரியத்தின் கடந்தகால நிலை என்ன? இப்போதைய நிலவரம் எப்படிப் பட்டது, எதிர்காலம் எத்தகைய ஏற்றம் உடையதாக இருக்கும்?- என்றெல்லாம் தனது வரவேற்புரையில் குறிப்பிட்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர் திரு ஏ. எஸ். ஆலுவாலியா, இத்திட்ட வளர்ச்சியில் தமிழ்நாடு அரசு காட்டும் ஆர்வத்திற்கு நன்றி தெரிவித்தார். வீடுகள் கட்ட வேளாண்மை நிலங்களைக் கையகப்படுத்த வேண்டியிருப்பதாவும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

**வாழ்த்துரைகள்:**

திருமதி யசோதா எம்.எல்.ஏ. தமது வாழ்த்துரையை நிகழ்த்தினார்:

''காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நான் மட்டுமல்ல; மத்தியிலிருந்து வருகிறவர்களே வியந்து பாராட்டத் தக்கதாக இந்த அரசின் வளர்ச்சித் திட்டங்கள் அமைந்துள்ளன. தமிழ்நாட்டு அரசாங்கம் ஒரு தேசீய அரசாங்கமாக இருக்கிறது; மத்திய அரசுக்கு எந்த வகையிலும் தொல்லை தராமல் ஒத்துழைக்கும் அரசாங்கமாக இருக்கிறது.

''ஆட்சியிலிருந்த காலத்தில் எங்கள் காங்கிரஸ் அரசே செய்யாத பல அரிய செயல்களையெல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு செய்து வருகிறது. அவர் அமைச்சரவையிலே இருக்கிற - தெய்வபக்தியும் தேசபக்தியும் நிரம்பிய அமைச்சர் ஆர்.எம்.வீ. அவர்களால் துவக்கு வைக்கப்படும் இத்திட்டம் எந்தக்குறையும் இல்லாமல், விரைவில் நிறைவேறும் என்பதில் சந்தேகமில்லை.'

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் திரு எல்ல. இராசமாணிக்கம் எம். எல். ஏ., ''ஒரு காலத்தில் காடாயிருந்த இந்த இடத்தை நகரமாக்கி, நகரியமும் ஆக்கிய தமிழ்நாடு அரசை - சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தைப் பெரிதும் பாராட்டுகிறேன்.'' என்றார். தேசீய நெடுஞ்சாலையில், போக்குவரத்து நெருக்கடி காரணமாக அடிக்கடி நிகழும் விபத்துக்களைத் தவிர்க்க இதை நான்கு வழிப் பாதையாக்க மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து திட்டம் தீட்டியிருப்பதாகத் தெரிவித்த அவர், விரைவில் அத்திட்டம் நிறைவேற்றப்படவேண்டும்என்று கேட்டுக் கொண்டார்.

குழாய்க் கிணறு வாரியத் தலைவர் திரு கொளத்தூர் கோதண்டம் தமது உரையில்— ''நாட்டு மக்கள் எது தேவை என்று கருதுகிறார்களோ, அதை பேரறிஞர் அண்ணா அவர்களைத் தொடர்ந்து செய்து வருபவர் நமது புரட்சித் தலைவர் ஒருவரே'' என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

கதர் கிராமத் தொழில் வாரியத் தலைவர் கவிஞர் நா. காமராசன் அவர்கள் பேசுகையில் - ''ஏழை எளியவர்கள் ஏற்றம் பெறப் பாடுபடுகிற, ஏழை எளியவர்களை நேசிக்கிற எங்கள் புரட்சித் தலைவரின் அரசை இந்தியாவே பாராட்டுகிறது'' என்றார்.

திரு ஆர். எஸ். முனிரத்தினம் எம். எல். ஏ., ''மறைமலைநகர் விரிவாக்கத் திட்டம் தமிழ்நாடு அரசுக்குத் தனிப்புகழ் சேர்க்கும் திட்டமாகும்.'' என்றார்.

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரான திரு வே. தமிழ்மணி தம்முடைய வாழ்த்துரையில்— ''மறைமலை நகருக்குத் தனியே ஓர் நிரந்தர நுழைவு வாயில் வளைவு அழகுற அமைக்கப்பட வேண்டும்; சென்னையிலிருந்து வரும் இந்த முக்கியச் சாலை ஜி. எஸ. டி. சாலை என்று குறிப்பிடப்படுகிறது - இதை மாற்றி, தாம்பரத்திலிருந்து செங்கற்பட்டு வரையிலாவது மறைமலை அடிகளார் சாலை எனக் குறிப்பிடும்படி செய்ய வேண்டும்; மறைமலை நகரில் மின் தட்டுப்பாடு, தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாத நிலை உண்டாக்க வேண்டும். முக்கியமாக இப்பகுதி மக்களுக்கு விளையாட்டுத் திடல் அமைத்துத் தர வேண்டும்'' என்று அரசைக் கேட்டுக் கொண்டார்.

''வீட்டு வசதி வாரியம் எல்லா மாநிலங்களிலும் உண்டென்றாலும், தமிழ்நாட்டிலேதான் சிறப்புறச் செயல்படுவதாக மத்திய அரசே பாராட்டுகிறது'' என்று தமது உரையில் குறிப்பிட்டார் திரு ஆலந்தூர் இரா. மோகனரங்கம்.

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரான திரு பி. பாண்டியன் இ.ஆ.ப., தம்முடைய வாழ்த்துரையைக் கவிதையிலேயே நிகழ்த்தினார்.

திரு எஸ். ஜெகத்ரட்சகன் எம். பி. பேசுகையில், ''புது டெல்லி பழைய டெல்லி என்பது போல - அங்கே இருப்பது பழைய சென்னை; இங்கே உருவாவது புதிய சென்னை என்ற சிறப்புப் பெற வேண்டும்; அருகில் உள்ள ஏரி, சிறந்த சுற்றுலாத் தலமாக்கப்பட வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

வீட்டுவசதி வாரியத் தலைவர், திரு. வி. ஆர். மணிமாறன் தம்முடைய வாழ்த்துரையில் குறிப்பிட்டதாவது :

''ஒன்றரையாண்டுகளுக்கு முன்னால் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இந்தத் திட்டம் குறுங்கதையோ சிறுகதையோ அல்ல; தொடர்கதையாகும். 'எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்' என்ற குறிக்கோளுடன் ஆட்சி புரியும் புரட்சித் தலைவர் அவர்களது ஆட்சியில் இப்படிப்பட்ட வளர்ச்சிப் பணிகள் ஏராளம்.

''அண்மையில் தமிழகத்திற்கு வருகை தந்த அமெரிக்கத் தூதுக் குழுவினர். மூன்றாண்டுகளில் 30 இலட்சம் வீடுகள் என்ற நம் திட்டத்தின் விவரம் கேட்டறிந்து வியந்து பாராட்டினார்கள். முதல்வர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தையும் போற்றிப் புகழ்ந்தார்கள்.

'ஒரு கூட்டத்தில் பேசுகையில் அமைச்சர் ஆர்.எம்.வீ. அவர்கள், 'ஒரு ஃபைல் ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்குப் போகவே சில ஆண்டுகள் ஆகிற நிலையிருக்குமானால், விரைந்து செயல்படவேண்டும் என்ற அரசின் குறிக்கோள் எப்படிச் சாத்தியமாகும்' என்று. கேட்டார்கள். அதைக் குரு வாக்கியமாக ஏற்று நான் செயல்பட்டு வருகிறேன். எந்தக் குறையானாலும் சரி; மக்கள் அதிகாரிகளை அணுகலாம். பின்னர் அவர்களும் நாங்களும் கலந்து பேசி விரைந்து முடிவெடுப்போம், குறைகளை களைவோம்.''

**அமைச்சர்கள் வாழ்த்துரை**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு ஆனூர் கோ. ஜெகதீசன் அவர்கள் பேசியதாவது :

''பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியிலிருந்தபோது என்னென்ன செய்ய வேண்டும் என்று கருதினார்களோ அதையெல்லாம் ஈடேற்றி வரும் அரசு இது. ஆகவே, இதை அண்ணா தி.மு.க. அரசு என்பதைவிட அண்ணாவின் அரசு என்றே கூறலாம். அண்ணாவின் அரசுதான் தொடர்கிறது.

''மறைமலைநகர் பகுதியில் பஸ் வசதி போதுமான அளவு இல்லை என்றார்கள்; டவுன்பஸ் விட்டிருக்கிறோம். அதன் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். மூன்று கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பாலாறில் பாலம் அமைக்கப்படும்.

''மறைமலைநகர் இப்போது நகரியம் ஆகியிருக்கிறது; சென்னைபோல விரைவிலே மாநகராட்சியாகும் காலமும் வரும். இப்பகுதியில் உள்ள தொழிற்பேட்டையில் மேலும் 20 தொழிற் கூடங்களை இந்த ஆண்டே துவங்க 'சிட்கோ' ஏற்பாடு செய்துள்ளது.

''தமிழ்ப் பெரியார் மறைமலை அடிகளார் பெயரால் அமைந்த நகரிலே விழா நடக்கும் இநத நேரத்தில் - தமிழ் வளர்சசி கருதி எல்லோரும் தமி



## சிறை - அன்றும் இன்றும்

வ.உ.சி. 6 ஆண்டுக் காவல் தண்டனை அக்காலத்தில் அடைந்தார். இக்காலத்தில் 60,000 பேர்கள் ஜெயிலுக்குப் போவதும் சரி, அக்காலத்தில் ஒரு சிதம்பரம் பிள்ளை ஜெயிலுக்குப் போனதும் சரி.

—தமிழ்த் தென்றல் திரு.வி.க.

ழிலேயே பேச வேண்டும்; எழுத வேண்டும்; குறைந்த பட்சம் கையெழுத்தையாவது தமிழிலேயே போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு ந. நல்லுசாமி அவர்கள், புதிய திட்டப் பகுதி வளர்ச்சிப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டிப் பேசிய விவரம் பின்வருமாறு:

''உலக வங்கிமூலம் கிட்டத்தட்ட 60 நாடுகளுக்கு நிதி வழங்கப்படுகிறது; அதில் தமிழகமும் ஒன்று. அவைகளில், இந்தியாவில்தான் - அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில்தான் வேகமாகத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்று அவர்களே பாராட்டுகிறார்கள். உலக வங்கியால் 'Urbanage' என்றொரு பத்திரிகை நடத்தப்படுகிறது. அதில் கூட நமது ஆக்கப்பணிகள் பற்றி அவர்கள் மிகவும் பாராட்டி எழுதியிருக்கிறார்கள்.

''இருபதாண்டுக் காலத்திற்குள் ஒரு லட்சம் பேர் குடிபுகுவர் என்ற எதிர்பார்ப்பில், மறைமலைநகர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு நகருக்குப் பள்ளிக்கூடம், கடைகள், மருத்துவமனை, அஞ்சலகம் என்று எத்தனைத் திட்டங்கள் தேவையோ அத்தனையும் இங்கே படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, சத்துணவுத் திட்டத்தை அடுத்து, மக்களுக்கு வீட்டுவசதி உண்டாக்கித் தரும் இதுபோன்ற திட்டங்களில் மிகுந்த அக்கறையோடு செயல்பட்டு வரும் நல்லரசாகத் திகழ்கிறது.

''1987-ஆம் ஆண்டில், சென்னையில் பெருநகர்வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் முப்பதாயிரம் மனைகள் சுமார் 30 கோடி ரூபாய் செலவில் வழங்கும் திட்டமும், 75 ஆயிரம் குடிசைவாசிகளுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் வீட்டுவசதி அளிக்கும் திட்டமும் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் மறைமலைநகர் வசதிகள் அமைப்புப் பொறுப்புகளை நகரியத்திற்கு மாற்றித்தந்தும், புதிய கட்டடப் பகுதியைத் திறந்து வைத்தும் ஆற்றிய உரைச்சுருக்கம்:

''தமிழகத்தின் தளநாயகர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி அமைந்ததற்குப் பின்னாலே, இந்த மறைமலை நகர் முழுவேகத்தோடு உருவாகி வளர்ந்து வருகிற ஒரு புதிய நகராகப் பொலிவடைந்துள்ளது. சென்னை நகரின் பழைய அமைப்பை மாற்றும் வகையிலும், பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சென்னை நகரின் நெரிசலைத் தவிர்க்கும் வகையில் - சென்னைக்கு வடதிசையில் மணலியும், தென் திசையில் மறைமலை நகரும் அப்படிப் புதிதாக உருவாக்கப்பட்டு வரும் நகரங்களாகும். வீடுகளின் அமைப்பு முறை எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று இவர்களே மக்கள் நலன் கருதிச் சில வழிமுறைகளை வகுத்திருக்கிறார்கள். இத்திட்டங்களால் பயன்பெற வேண்டிய மக்களே அதை மீறும் நிலை இருக்கிறது; இது சரியல்ல.

''இதை இன்னும் விரிவாக்க விளைநிலங்களைக் கையகப் படுத்தலாமா என்று கேட்கப்பட்டது. விளைநிலங்களுக்கு நீர் ஆதாரம் வேண்டும். அப்படிப் பட்ட நிலங்களை வீடுகட்டும் நிலங்களாக்கி விட்டால் விளைநிலங்களுக்கு எங்கே போவது? அப்படிக் கட்டினால் வீடு இருக்கும்; அதிலே மக்கள் இருப்பார்கள் ; அவர்களுக்கு உணவு இருக்காது. அப்படியொரு நிலை வரக்கூடாது என்பதால்தான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்கூட, வேறு வழியில்லை என்ற நிலை இருந்தால் தவிர, விளைநிலங்களில் கைவைக்கக்கூடாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்கள். அரசு மூலம் அதற்காக ஒரு சட்டமே இயற்றப்படவிருக்கிறது. விளைநிலங்களுக்குச் சொந்தக்காரர்கள் வீடுகட்டுவதற்காக அதை விற்பதானால் கூட அரசின் அனுமதி பெற வேண்டும் என்ற நிலை வரும்.

''மறைமலை நகருக்கு அருகிலேயே, வீட்டுமனை விற்பனை என்றெல்லாம் தனியார் விளம்பரங்கள் வருகின்றன. அவை விளை நிலங்களானால் தனியாரும் வாங்க முன்வரக்கூடாது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தைச் சேர்ந்தவர்களை நான் வேண்டுவதெல்லாம் — சென்னையைச் சுற்றி முப்பது நாற்பது கிலோமீட்டர் தூரத்தில் நகரங்கள் எழுப்பப் புதிய இடங்களைத் தேர்ந்தெடுங்கள். எவ்வளவோ இடங்களில் தரிசு நிலங்கள் கிடக்கின்றன.

''இது போன்ற இடங்களில் வீடுகள் கட்டும்போது, குடிவரும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்துதர அதிகாரிகள் தவறக் கூடாது.

''அழகான காடாக ஒப்படைத்த இந்த இடத்தை நகரமாக்கி விட்டீர்கள்; காடுகள் இல்லையேல் மழையில்லை. ஆகவே இந்தப் பகுதியில் போதுமான மரங்கள் வளர்க்கப்பட வேண்டும். பக்கத்திலுள்ள ஏரித் தண்ணீரை அது நிரம்பும்போது வெளியேற வகை செய்ய வேண்டும் என்றார்கள். வேளாண்மைக்காக உள்ள அந்த ஏரிப்பகுதியைச் சுற்றுலாத்தலமாக்குவதோ நீரை வெளியேற்றுவதோ முறையல்ல. ஏரிநீரால் இந்த நகருக்குப் பாதிப்பு நேராதிருக்கத் தடுப்புக் கட்ட இந்த வளர்ச்சிக் குழுமமே நிதி ஒதுக்கலாம். குறிப்பிட்ட அளவு தண்ணீர் ஆண்டு முழுதும் அந்த ஏரியில் இருக்கும்படி சேமிக்கலாம். சென்னை மக்கள் கடற்காற்று வாங்கப் போவது போல இந்தப் பகுதி மக்கள் ஏரிக்காற்று வாங்கி மகிழலாம்.''

—இவ்வாறு மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

விழா முடிவில் - சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை நிர்வாக அலுவலர் திரு எம். எப். பாரூக்கி, இ.ஆ.ப., நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்.

**தென்னார்க்காடு மாவட்டம்:**

# ஆலய மேம்பாட்டு நிதி...

ஆலயம் தொழுவது சாலவும் நன்று, கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பன தமிழ் மூதுரைகள். தமிழகத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கும், தமிழர்களின் நெறி முறைகளுக்கும் அடிப்படையாக விளங்குவது தொன்றுதொட்டு நிலவுகிற நமது கோயில்களும் பக்தி இலக்கியங்களுமே ஆகும். தமிழர்களின் தெய்வ நெறிசார்ந்த வாழ்வுக்கு வழி வகுக்கும் ஆலயங்களில் தீபங்கள் அணையாது அன்றாடம் எரியவும், நாள்தோறும் அர்ச்சனைகளும் வழிபாடுகளும் தவறாது நடத்தப்படவும் தொன்றுதொட்டே மன்னர்கள் கோயில்களைப் பராமரிக்க மான்யங்களையும், நிலங்களையும் ஒதுக்கித் தந்ததை வரலாறு நமக்கு உணர்த்தும். இப்படிப்பட்ட போற்றத்தக்க கோயில் பராமரிப்பு முறைகள் இடைக்காலத்தில் நலிவடைந்த தமிழகத்தில் எண்ணற்ற சிறு ஆலயங்களில் போதிய வருமானம் இல்லாததால் ஒரு வேளை பூஜைகூட நடத்த முடியாத நிலையேற்பட்டது. இந்நிலை சிறு கோயில்களைப் பொறுத்தவரை இன்று வரை சோகத் தொடர் கதையாக வளர்ந்துவிட்டது. இக்குறையைப் போக்குகிற வகையில்தான் இன்று தமிழக அரசு ஆலயமேம்பாட்டுத் திட்டம் தீட்டி, இதன் கீழ் நலிந்த கோயில்களில் நாள்தோறும் ஒரு வேளை பூஜையாவது நடத்துவதற்கென ஒவ்வொரு கோயிலுக்கும் 5000 ரூபாய் வழங்கி வருகிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் ஆலய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 60 கோயில்களுக்கு ரூ. 5000 வீதம் 3 இலட்சம் ரூபாய் நிதி வழங்கும் விழா 31.8.86 அன்று கடலூர் டவுன்ஹாலில் சிறப்பாக நடைபெற்றது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் திரு வே. முனியசாமி வரவேற்புரை நல்க, திருவந்திபுரம் அருள்மிகு வேதநாத சுவாமி திருக்கோயில் தக்கார் திரு என். எஸ். ரங்கநாதன், மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் திரு டி. ராதா கிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் திரு வி. ஜி. செல்லப்பா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு பி. ஆர். எஸ். வெங்கடேசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

கடலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு வி. ஜி. செல்லப்பா அவர்கள் தனது சிறப்புரையில் சமுதாய ஒருமைப்பாட்டுக்கு வழி வகுக்கின்ற இந்த ஆலயங்கள் மூலமாகத்தான் தேசிய ஒருமைப்பாடு ஏற்பட முடியுமென்றும், இன்று 60 கோயில்களுக்கு நிதியுதவி வழங்குவது ஆரம்பக் கட்டம் தான் எனத்தான் நம்புவதாகவும் விரைவில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள எல்லா கோயில்களுக்கும் நிதியுதவி வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். கடலூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு பி. ஆர். எஸ். வெங்கடேசன் அவர்கள், தனது உரையில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருவக்கரை சந்திர மவுலீசுவரர் கோயிலைத் தமிழக அரசு புதுப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

---

**அ. சந்திரசேகரன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தென்னார்க்காடு மாவட்டம்.**

தொடர்ந்து, விழாவிற்குத் தலைமை தாங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். சி. பண்டா இ. ஆ. ப., அவர்கள், தமிழ்நாடு ஆலயங்கள் மேம்பாட்டிற்காக ஏழு கோடி ரூபாய் வைப்பு நிதித் திட்டத்தின் கீழ், இம் மாவட்டத்தைச் சார்ந்த மூன்று கோயில்களிலிருந்து ரூ. 1,90,000 முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இன்று இங்கு நிதியுதவி பெறுகின்ற 60 கோயில்களிலும் இனி தினந்தோறும் பூஜைகள் நடத்தப்பட்டு மக்களின் ஆன்மீக உணர்வுக்கும் ஒழுக்கம் தவறாத வாழ்வுக்கும் வழி வகுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

தலைமையுரையைத் தொடர்ந்து, தமிழகஅரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு சு. சுந்தரமூர்த்தி இ. ஆ. ப. அவர்கள், விழாப்பேருரை ஆற்றினார். ஆணையர் அவர்கள் தனது பேருரையில், தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தின் கீழ் தமிழ் நாட்டில் 30,000 சமய நிறுவனங்கள் உள்ளதாகவும், தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டும் இம் மாதிரி 2660 சமய நிறுவனங்கள் உள்ளதாகவும், ஆலய மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணித் திட்டம், ஆலய ஊழியர்கள் நலங்காக்கும் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களுக்காகத் தமிழகத்திலுள்ள வசதியுள்ள பெரிய ஆலயங்களிலிருந்து ரூ. 7 கோடி நிதி திரட்டி அதனை முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியைப் பயன்படுத்தும் வகையில் தமிழக அரசின் அறநிலையத்துறை சிறப்பானதொரு திட்டத்தினை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும், இந்த 7 கோடி ரூபாயில் 5 கோடி ரூபாய் ஆலய மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டதாகவும் இதிலிருந்துதான் இன்று இம்மாவட்டத்திலுள்ள தினமும்



# பிற்பட்டோர் பயிற்சி வகுப்பின் பலன்

ஐயா,

தென்னார்க்காடு மாவட்டத்தினைச் சேர்ந்த சொரையப்பட்டு என்ற குக்கிராமத்தில் வசித்து வரும் நான் இந்த ஆண்டு +2 தேர்வில் கணிதப் பிரிவில் 200க்கு 171 மதிப்பெண்கள் எடுத்துத் தேர்ச்சி அடைந்தேன். எஞ்சினீயர் ஆகவேண்டும் என்று விரும்பிய நான், நுழைவுத் தேர்வில் எப்படி மதிப்பெண் எடுத்துத் தேறப் போகிறேன் என்று அஞ்சிக் கொண்டிருந்தேன். நகரத்தில் இருக்கும் மாணவர்கள் மற்றும் ஆங்கில மீடியத்தில் படித்த மாணவர்களுக் கிடையில் என்னுடைய அறிவு நுழைவுத் தேர்வில் எவ்வாறு போதுமானதாக இருக்கும் எனபதே என் கவலையாக இருந்தது.

தமிழக அரசின் பிற்பட்டோர் நலத்துறையினர் தொழில் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வுக்காகப் பயிற்சி வகுப்புகள் நடத்தப் போவதாக இந்த ஆண்டு அறிவிப்பு வரவே அதற்கு விண்ணப்பித்தேன்.

நுழைவுத் தேர்வுப் பயிற்சி வகுப்பில் சென்னையில் இரண்டு வாரங்கள் பயிற்சி பெற்றதன் மூலம் பொது அறிவு பெற்று நுழைவுத் தேர்வினைத் தைரியமுடன் எழுதினேன். பி. இ. அட்மிஷன் பட்டியலை செய்தித்தாளில் பார்த்தபோது அதில் என்னுடைய எண்ணும் (213174) இருந்தது கண்டு பெரு மகிழ்ச்சி அடைந்தேன்.

பிற்படுத்தப்பட்டோர் துறையினர் நடத்திய பயிற்சி வகுப்புகள் மூலமே எனக்கு எஞ்சினீயரிங் படிப்பில் இடம் கிடைத்தது என்பதால் இத்துறைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். தொடர்ந்து இத்தகைய பயிற்சிகளை நடத்தினால் கிராமப்புற, ஏழை மாணவர்களும், சமுதாயத்தில் பிற்பட்டவர்களும் அதிகம் பயன் பெறுவார்கள் என்பது நிச்சயம்.

—ஆர். இராதாகிருஷ்ணன்,
சொரையப்பட்டு,
திருக்கோயிலூர் வட்டம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

—ஆசிரியருக்குக் கடிதம் பகுதி
*'தினமணி'* 10.9.86

---

ஒரு வேளைபூஜை கூட நடத்திட இயலாத நலிந்த 60 திருக்கோயில்களுக்குத் தலா ரூ. 5000 வீதம் 3 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் அறநிலையத்துறை ஆணையர் அவர்கள், ஆண்டு தோறும் இம்மாவட்டத்தில் சேக்கிழார் விழா நடத்துவதற்காக 5 இலட்சரூபாய் வைப்பு நிதியாக வைக்கப்படுமென்றும், இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையை வைத்து, தொடர்ந்து சேக்கிழார் விழா சிறப்பாக நடத்தப்படும் என்றும் சிதம்பரத்தில் உள்ள தீட்சிதர்களின் முன்னேற்றத்திற்காக 2 இலட்ச ரூபாய் வைப்புநிதி வைத்து அதில் கிடைக்கும் வட்டியைத் தீட்சிதர்களின் பிள்ளைகளின் படிப்புக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் வழங்கவுள்ளதென்றும் இம்மாவட்டத்திலுள்ள திருவக்கரை சந்திரமவுலீசுவரர் கோயிலைப் புதுப்பிக்க ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாகவும், இதேபோல் கல்வராயன் மலையிலுள்ள காமாட்சியம்மன் கோயிலைச் செப்பனிட ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மேலும், இங்குள்ள சின்ன திருப்பதி என்ற கோயிலைப் புதுப்பிக்கத் தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் ஆலயங்களின் முன்னேற்றத்திற்கான கருத்துக்களை எல்லாத் துறையிலுள்ளவர்களும் கோயில் தக்கார்கள் மூலம் தமிழக அரசுக்குத் தெரிவிக்க முன்வரல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பேருரையின் முடிவில் ஆணையர் அவர்கள் கடலூர் வட்டத்திலுள்ள 7 திருக்கோயில்களும், பண்ருட்டி வட்டத்திலுள்ள 3 திருக்கோயில்களும், சிதம்பரம் வட்டத்தில் 10 திருக்கோயில்களும், காட்டுமன்னார்குடி வட்டத்தில் 9 திருக்கோயில்களும், உளுந்தூர்பேட்டை வட்டத்திலுள்ள 9 திருக்கோயில்களும், விருத்தாச்சலம் வட்டத்தில் 3 திருக்கோயில்களும், திட்டக்குடி வட்டத்தில் 4 திருக்கோயில்களும் திருக்கோயிலூர் வட்டத்தில் ஒரு திருக்கோயிலும், கள்ளக்குறிச்சி வட்டத்தில் 6 திருக்கோயில்களும், திண்டிவனம் வட்டத்தில் 4 திருக்கோயில்களும், விழுப்புரம் வட்டத்தில் 54 திருக்கோயில்களும் ஆக மொத்தம் இம்மாவட்டத்தில் 60 திருக்கோயில்களுக்குத் தலா ரூ. 5000 வீதம் ரூபாய் 3 இலட்சம் நிதி வழங்கினார்.

ஏழைகளின் பசிப்பிணி போக்கும் சத்துணவுத் திட்டத்தை வழங்கிய தமிழக அரசின் சாதனைகளின் இரண்டாவது அத்தியாயம்தான் ஆலய மேம்பாட்டுத் திட்டம் என்பதைத் தெரிவிக்கும் வகையில் சீரும்சிறப்புமாக அமைந்தது இவ்விழா!





# அண்ணா நகர் அங்காடித் திறப்பு விழா

சென்னை அண்ணா நகர் மேற்கு விரிவாக்கத்தில், வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள அங்காடிகள் மற்றும் அலுவலகக் கட்டடத் திறப்பு விழா அண்மையில் (29-9-86) சிறப்புற நடைபெற்றது.

வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு வி. ஆர். மணிமாறன் தமது வரவேற்புரையில்- 'இவ்வாறான கட்டடங்கள் மூலம் வாரியத்திற்குக் கிடைக்கும் வருவாயில், குடும்பத்திற்கு ஒரு வீடு என்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களின் இலட்சியம் நிறைவேறப் பாடுபடுவோம்'' என்றார்.

ரூ. 82.47 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம் பற்றிய திட்ட அறிக்கையை, வாரியத் தலைமைப் பொறியாளர் (பொறுப்பு) திரு. டி.பி. காளியப்பா படித்தார்.

''இன்று திறந்து வைக்கப்படும் அங்காடி இந்தப் பகுதி மக்களின் தேவையை நிறைவு செய்கிற ஒரு நல்ல காரியமாகும்'' என்று— சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்றுவாரியத் தலைவர் திரு. ஜேப்பியார் தமது வாழ்த்துரையில் குறிப்பிட்டார்.

திரு ஆர். எஸ். முனிரத்தினம் எம். எல். ஏ., பேசுகையில்— ''மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணங்களை ஈடேற்றும் வளர்ச்சிப் பணிகளில் இதுவும் ஒன்று. இப்பகுதியில் உள்ள குடிநீர்ப் பிரச்னை நீங்க,



அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. ந. நல்லுசாமி அவர்கள் பேசும்போது— 'ஹட்கோ' மூலம் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழகமே முன்னணியில் நிற்கிறது; புதிய புதிய நகரங்களை உருவாக்கித் தருவதும், அங்கே குடியேறும் மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவதும் எங்கள் குறிக்கோள். ஏழை எளியவர்களுக்கு மட்டுமல்ல; அயல்நாட்டுத் தமிழர்களுக்கும் வீடளிக்கும் தொண்டினை இந்த அரசு செய்து வருகிறது'' என்றார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்துப் பேசியதாவது- ''மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையினால், சிறந்த வழிகாட்டுதலால் இப்பகுதி மக்களுக்கு வரப்பிரசாதமாக இந்தக் கட்டடம் கிடைத்திருக்கிறது. இந்த அரசு கிராமப்புற மக்களுக்காக ஏராளமான திட்டங்களைத் தீட்டிநிறைவேற்றி வருகிறது. இருந்தும்கூட, கிராமப்புற மக்கள் பெருமளவில் நகரங்களை நோக்கிப் படையெடுக்கும் நிலைமை இருக்கிறது. நாம் இப்படி எவ்வளவு நல்ல பணிகளைச் செய்தாலும் தேவைக்கேற்ப செய்யமுடியாத நிலைமை இருப்பதற்கு இதுவே காரணம். இதில் நாம் கவனம் செலுத்தியாக வேண்டும்.''

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள அங்காடிகள மற்றும் அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசும்போது, ''இந்தக் கட்டடத்திற்கு அறிஞர் அணணா சிறப்பு அங்காடி வளாகம் எனப் பெயர் சூட்டவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:

''தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அரிய பணிகளை ஆற்றிவருகிறது. இந்த முயற்சியிலே ஈடுபட்டு வெற்றி கண்டவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்கத்தா, பம்பாய், டில்லி போன்ற பெரிய நகரங்களோடு சென்னையை ஒப்பிட்டுப் பார்த்தால், அங்கெல்லாம் உள்ளது போன்ற வீட்டு நெருக்கடி இங்கில்லை. ரஷ்யாவிலேகூட தேவையான அளவு மக்களுக்கு வீடு கட்டித் தரப்படவில்லை. பக்கத்திலுள்ள சிங்கப்பூரிலும். டோக்கியோவிலும்கூட அதே நிலைமைதான். தண்ணீர்த் தேவை பற்றி இங்கே பேசினார்கள். இதைத் தீர்க்கவே கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் தீட்டப் பட்டது. ஒரு சிறிய பிரச்னை. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு ஆந்திர முதல்வர் அவர்களும் சந்தித்துப் பேசவிருக்கிறார்கள். விரைவில் அந்தப் பிரச்னையும் நீங்கிவிடும். தண்ணீர்த்தட்டுப்பாடு அடியோடு தீர்ந்து விடும்.

கூட்ட முடிவில், மேற்பார்வைப் பொறியாளர் திரு எஸ். மாரியப்பன் நன்றி கூறினார். செயற்பொறியாளர் திரு க. சௌந்திரராஜன் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்.

—நமது செய்தியாளர்.










# அண்ணலைப் போற்றுதும்!

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**
**சிலம்புச் செல்வர்**

## டாக்டர் ம. பொ. சி.

"அக்டோபர் 2 ஆம் நாள்!

ஒரு நவ இந்தியா பிறந்தநாள்.

உலகெங்கும் உள்ள ஏகாதிபத்தியத்துக்கு ஒரு எதிரி பிறந்த நாள்.

வன்முறைக்கு எதிராக ஒரு அகிம்சைத் தத்துவம் பிறந்த நாள்.

இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம் காந்தியடிகள் பிறந்த தினத்திற்குரிய சிறப்பைக் குறித்து!

அவர் பிறப்பதற்கு முன்பு, அகிம்சையின் மூலம் ஒரு நாடு சுதந்தரம் பெற முடியும் என்பதைப் பலரும் நம்ப மறுத்தார்கள்.

பிரெஞ்சு நாடு அகிம்சையாலா சுதந்தரம் பெற்றது, அயர்லாந்து அகிம்சையாலா சுதந்தரம் பெற்றது என்றெல்லாம் கேட்டார்கள்.

காந்தியடிகளைக் குறித்து தமிழகக் கவிஞர் நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையவர்கள்,

பெற்றெடுத்த தாய்...

என்ற கவிதையைப் பாடினார்கள்.

கான்பூரில் வாழ்ந்த கணேஷ் சங்கர் வித்யார்த்தி என்பவர் ஒரு பெண்ணைத் தீயிலிருந்து காப்பாற்றச் சென்று, தான் உயிர் விட்டார். அவரது நினைவாக ஒரு ஸ்தூபியைத் திறந்து வைத்த போது காந்தியடிகள் பேசிய சொற்பொழிவை நாமக்கல் கவிஞர் கவிதையாகப் பாடியிருக்கிறார்.

காந்தியடிகளை இனங்கண்டு சொல்ல ஒரு கவிஞர் தமிழ் நாட்டில்தான் பிறந்தார்.

காந்தியடிகளை மகாத்மா என்று தாகூர் சொன்னார். எப்படி அவர் மகாத்மா என்பதைத் தாகூர் விளக்கவில்லை; ஆனால் தமிழகத்தில் தோன்றிய பாரதி அதற்கு விளக்கம் தந்தார்..., 'வாழ்க நீ எம்மான்' என்ற கவிதையின் வாயிலாக!.

'தமிழகத்திற்கு வரும்போதெல்லாம் என் உள்ளத்தில் ஒரு வகை அமைதி ஏற்படுகிறது' என்று காந்தியடிகள் சொல்லியிருக்கிறார்.

ஒரு தனி மனிதன் இந்த நாட்டுக்கு விடுதலை தேடித் தர முடியும் என்பதை காந்தியடிகள் நிரூபித்தார்."

**மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்**

## திரு இராம. வீரப்பன்

"இந்த அக்டோபர் 2 ஆம் நாளன்று காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதன் மூலம் ஆண்டுக்கு ஒரு முறை அவரை நினைப்பதற்குப் பழகிக் கொண்டிருக்கிறோம்.

இந்தியத் துணைக் கண்டத்திற்கு விடுதலை வாங்கித் தந்த தேசப்பிதா! மாமனிதரில் சிறந்த மனிதராக — உத்தமராக மகாத்மா வாழ்ந்து காட்டியிருக்கிறார். அவரும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். காட்டுமிராண்டித்தனமான செயல் இது. மிருகங்களை விடக் கேவலமான நிலை இது. மிருகங்கள் கூட, நன்றி காட்டியவர்களுக்கு-தமக்கு உதவுபவர்களுக்குத் தீங்கு இழைப்பது கிடையாது. அதை விடக் கொடிய உணர்வோடு மனிதன் நடந்து கொள்கிறான்.

ரத்தம் சிந்தி, இந்த நாட்டு மனிதர்களுக்கு நாகரிகத்தை உணர்த்திச் சென்றிருக்கிறார் காந்தியடிகள்.

அதன் பின்னாவது நம்மைத் திருத்திக் கொண்டிருக்கிறோமா என்றால், 'இல்லை, இல்லை' என்று சொல்லி வருந்துகின்ற நிலையில்தான் இன்றும் இருந்து வருகிறோம்.

வன்முறை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். வெள்ளையர் ஆட்சி ஒழிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையுடைய அவர், வெள்ளைக்காரர்களைக் கொன்று, விடுதலை வாங்க வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொள்ளவில்லை.

அவர், சத்தியத்தின் காவலராக - சன்மார்க்கவாதியாக

விளங்கினார். கத்தியின்றி ரத்தமின்றி சுதந்தரம் வாங்குவது தான் விடுதலைக்குரிய இலக்கணம் என்பதை நிருபித்துக் காட்டியவர் அவர்.

அவரது தொண்டினால்தான், இந்தியா, உலகத்தில் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்று என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

அவர் எந்தத் தத்துவத்தை உலகுக்கு உணர்த்த விரும்பினாரோ, அதற்காகப் பாடு பட வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது என்பதை உணர வேண்டும்.''

**திரு சி. ஆர். பட்டாபிராமன்**

''ஒரு நிருபர் காந்தியைச் சந்தித்து 'உங்கள் நாடு எது, உங்கள் மதம் எது?' என்று கேட்ட போது, 'உலகமே என் நாடு! எல்லா மதமும் என் மதம்' என்றார் காந்தி.

வெள்ளைக்காரன் வீட்டுக்குப் போய் இந்தியப்பெண்கள் வேலை பார்க்கக் கூடாது என்ற கொள்கையைச் சிலர் வலியுறுத்திய பொழுது, 'பாவம் தாய்மார்கள்! தங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்காக வேலை செய்கிறார்கள்! அதைத் தடுக்கக் கூடாது' என்று மனித நேயத்துடன் கூறியவர் காந்திஜி.

அந்தத் தூயவரை நினைத்தாலே போதும், நமக்குப் புண்ணியம் கிடைக்கும். அவரது கொள்கைகளை நாம் விடாது கடைப்பிடிக்க வேண்டும்.''

**திரு ஏ.கே.ஏ.**
**அப்துல்சமத், எம்.எல்.ஏ.**

''இன்று நாம் சுதந்தரக்காற்றை சுவாசிக்கிறோம் என்று சொன்னால், அதற்கு அரும்பாடு பட்ட ஞானியாக அண்ணல் காந்தி திகழ்கிறார்.

எந்த நாடு பெரியவர்களை— பெருமைக்குரியவர்களை-போற்ற முன் வரவில்லையோ அந்த நாட்டுக்கு எதிர்காலமில்லை என்று ஓர் அறிஞர் சொல்லியிருக்கிறார்.

காந்தி, 75 கோடி மக்கள் வாழும் இந்த நாட்டுக்கு மட்டுமே சுதந்தரம் பெற்றுத் தந்தவரல்லர்! அவர் உண்டாக்கி விட்ட இந்த சுதந்தர உணர்வு, உலகமெல்லாம் பரவியது. பின்னடைந்த மக்கள் - தமது நிலையை உணர்ந்து கொள்வதற்கு-நாமும் சுதந்தரத்துடன் வாழ வேண்டும் என்ற வீர உணர்வு கொள்வதற்கு- அடிமைத் தனத்தை நீக்கி சுதந்தரமாக வாழ்வதற்கு அவரது தொண்டு பயன்பட்டது.

அந்த நாட்களிலே காந்தியடிகளின் சொற்பொழிவு வெளிவராத பத்திரிகை கிடையாது.

அவர், எந்த அரசியல் கட்சியிலும் அடக்கிவிட முடியாதவராக இருந்தார். எந்த மொழிக்கும், எந்த மதத்திற்கும், எந்தக் கலாச்சாரத்திற்கும் சொந்தக்காரர் என்று சொல்லிவிட முடியாதபடி வாழ்ந்தார். உலகத்தில் உள்ள எல்லா மதத்தினரும், எல்லாமொழியினரும் சகோதரர்கள் என்று எண்ணினார் அவர்.

''மதம் என்று சொன்னால் அது மக்களுக்கு அன்பையும் பாசத்தையும் ஊட்டுவதாக இருக்க வேண்டும். வேற்றுமை பாராட்டும் மதத்தை நான் மதமாக ஏற்றுக் கொள்ள மாட்டேன். அது என் மதமல்ல'' என்று கூறினார்.



சகோதர பாசத்துடன் அனைவரும் வாழ வேண்டும், கடவுளை நம்பி வாழ வேண்டும் என்ற கொள்கையுடைய பேராத்மாவாக அவர் விளங்கினார்.''

**திருமுருக கிருபானந்தவாரியார்**

''உயர்ச்சி பெற வேண்டும் என்று எல்லோரும் நினைக்கிறார்கள். அது சுலபமாக முடியாது. சிலர், செல்வம் இருந்தால் உயர்ச்சி அடைய முடியும் என எண்ணுகின்றார்கள். அது பிழை; சிலர், படித்தால் உயர்ந்து விடலாம் எனக் கருதுகிறார்கள். மாணிக்கவாசகர் 'கற்றாரை யான் வேண்டேன்' எனக் கூறியிருக்கிறார். உயர்ச்சி அடைய வேண்டுமென்றால் உள்ளத்தில் சத்திய ஒளி வீச வேண்டும். சத்தியத்தைக் கடைப்பிடித்தால் நித்திய வாழ்வு வாழலாம். உள்ளத்தாற் பொய்யாதொழுகின் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் உளன் என்று வள்ளுவர் கூறினார். மகாத்மா காந்தி எல்லோரது உள்ளத்திலும் இருந்தார்; காரணம் அவரிடம் உண்மை இருந்தது.

நவகாளியில் கொடுமை கோரதாண்டவமாடிய காலத்தில்காந்தி அங்கே சென்றார். அவருக்கு என்ன நேருமோ என்று இங்குள்ளவர்கள் பயந்துகொண்டிருந்தார்கள்.

அல்லல்பட்டு, துன்பப்பட்டு, கண்ணீர் சிந்திய மக்களுக்கு ஆறுதல் கூறப் புறப்படுகிறார் அண்ணல். எப்போதும் பாதரட்சையை அணிந்து கொள்ளும் அவர் அன்று, அணியாமல் புறப்படுகிறார்.

அவரது பேத்தி மனுபாய் காந்தி நினைவுபடுத்துகிறார்.

''தெய்வங்களை வணங்கப் போகும்போது பாதரட்சை அணியக் கூடாது அம்மா'' என்று கூறுகிறார் காந்தி.

''நவகாளியில் எந்தக் கோயில் இருக்கிறது?'' என்று கேட்டாள் மனு.

''அல்லல்பட்டு, கஷ்டப்பட்டு, வாடுகின்ற மக்கள் எல்லாம் தெய்வங்கள்தான் அம்மா'' என்கிறார் காந்தி.

எத்தனை மனிதாபிமான உணர்வு அவரிடம் நிறைந்திருந்தது?

அவரிடம் எப்போதும் தெய்வ சிந்தனை இருந்தது. உண்ணாதிருந்தாரே தவிர கடவுளை எண்ணாதிருக்கவில்லை.

அவரது உள்ளத்தில் தெய்வ மணம் கமழ்ந்தது.

''கடவுளைப் பார்க்கவில்லை; ஆனால் அவரது குரல் என் செவியில் விழுகிறது. கடவுள் மீது வீசிய காற்று என் மேல் படுகிறது'' என்றார் காந்தி.

ராமனிடம் காந்திக்கு அளவு கடந்த பக்தி இருந்தது. ராம நாமத்தைச் சொல்லியே நாட்டுக்குச் சுதந்தரத்தை வாங்கித் தந்தார் காந்தி. குண்டடிபட்டுச் சாகும்போது கூட, ''ஐயோ என்னைச் சுட்டுவிட்டானே'' என்று அவர் சொல்லவில்லை.

''ஹரே ராம்'' என்றுதான் சொன்னார்.

அவரிடம் சத்தியமும் ஒழுக்கமும் நிறைந்திருந்தன.''

**(கிண்டி காந்தி மண்டபத்தில் 2.10.86 அன்று மாலை நடைபெற்ற காந்தியடிகள் பிறந்த நாள் விழா உரைகளிலிருந்து).**



# அரசு அலுவலர் அகம் மகிழ...

இன்றைய வளர்ந்து வரும் சமுதாயத்தில் வீட்டுவசதி ஒரு முக்கியப் பிரச்னை. நாளுக்கு நாள் கிராமப்புற மக்கள் அதிகமாக நகர்ப்புறத்தையே நாடி வரும் சூழ்நிலை பெருகி வருகிறது. இதனால் நகர்ப்புறங்களின் குடியிருப்புகளின் தேவை அதிகமாகிறது. வளர்ந்து வரும் பொருளாதாரத்தின் மூலம், இன்றைய சமுதாயத்தில் மிகச்சிலரே வசதி வாய்ந்த வீடுகளைக்கட்டி வசிக்க முடிகிறது. சமுதாயத்தின் அடிமட்ட, நடுத்தர மக்கள் வசதியான வீடுகளில் வாழ முடிவதில்லை.

இப்படிப்பட்ட மக்களின் தேவையை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் தமிழக முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் ஏராளமான வீடுகளை கட்டி, சிறுசிறு நகரங்களை உருவாக்க முனைந்ததோடு, 'குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இதன் அடிப்படையில் பொருளாதாரத்தில் நலிவுற்றோர், குறைந்த வருவாய்ப்பிரிவினர், நடுத்தர வருவாய்ப்பிரிவினர் ஆகியோருக்காக அடிப்படை வசதிகளுடன் தனித்தனி வடிவமைப்புகளில், குறைந்த செலவில் வீடுகளைக் கட்டித் தருகிறது அரசு.

இந்தச் சீரிய திட்டத்தின் கீழ் காமராஜர் மாவட்டத்தில் உள்ள பெரிய நகரான விருதுநகரில் முதல்கட்டமாக அரசு ஊழியர்களுக்கு சலுகை விலை அடிப்படையில் வாடகைக் குடியிருப்புகளை ரூ. 81 இலட்சம் செலவில் 72 வீடுகளைக் கட்டி முடித்துள்ளது. இரண்டாவது கட்டமாக ரூ. 369 இலட்சம் மதிப்பில் 384 வீடுகள் கட்டி முடிக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான விழா விருதுநகரில் நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு என். நல்லுசாமி தலைமையில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் புதிய குடியிருப்புகளைத் திறந்து வைத்தும் இரண்டாம் கட்ட புதிய வீடுகளுக்கு அடிக்கல் நாட்டியும் விழாவில் சிறப்புரையாற்றினார்.

விழாவில் கலந்து கொண்டு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு திருப்பூர் மணிமாறன் அவர்கள், இத்திட்டங்களின் வளர்ச்சியை எடுத்துக் கூறினார். மாவட்ட ஆட்சியர் திரு எல்.என். விஜயராகவன் இ.ஆ.ப அவர்கள் முன்னிலை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பாலகிருஷ்ணன், திரு. ஏ. ஆறுமுகம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு நல்லுசாமி அவர்கள் பேசும்போது கூறியதாவது:

''விருதுநகரில் சத்திரரெட்டிபட்டி அருகிடைத் திட்டத்திற்காக 98.42 ஏக்கரும், அருப்புக்கோட்டை சாலை அருகிடைத் திட்டத்திற்காக 143.55 ஏக்கரும் கையகப்படுத்தி நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காமராஜர் மாவட்டத்தில் இராசபாளையத்தில்33 உயர் வருவாய் குடியிருப்புகளும், சிவகாசியில் 72 அரசு அலுவலர் சலுகை வாடகை குடியிருப்புகளும், கட்டி முடிக்கப்பட்டுள்ளன!'' மேலும் சாத்தூரில் 170 நடுத்தர வருவாய் வீடுகள் கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளது என்றார். மேலும் அவர் பேசும்போது, இம்மாவட்டத்தில் விரைவில் அருப்புக்கோட்டை தூத்துக்குடி சாலையில் 53 ஏக்கரிலும், திருச்சுழி சாலையில் 140 ஏக்கரிலும் சிவகாசி ஸ்ரீவில்லிபுத்தூர் சாலையில் 113 ஏக்கரிலும், வெம்பக்கோட்டை சாலையில் 151 ஏக்கரிலும் சாத்தூர் அருகே உள்ள படந்தால் கிராமத்தில் 69 ஏக்கரிலும் சிவகாசி சாலையில் 60 ஏக்கரிலும் ஸ்ரீவில்லிபுத்தூரில் 32 ஏக்கரிலும் வீடுகள் கட்ட விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார். இவ்வாறு குடும்பத்துக்கு ஒரு வீடு திட்டத்தை அடைய தமிழகம் விரைந்து நடைபோடுகிறது'' என்று தன் உரையில் குறிப்பிட்டார்.

வளர்ந்து வரும் புதிய மாவட்டத் தலைநகரான விருதுநகரில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கட்டித் தந்துள்ள 72 வீடுகள், இனிமேலும் கட்டவுள்ள 384 வீடுகளால், அரசு அலுவலர்கள் வசதியுடன் வாழ வழி வகுத்துள்ளதின் மூலம் அவர்கள் அகம்மகிழ்ந்து இத்திட்டம் வெற்றி பெற வாழ்த்துகிறார்கள் என்றால் அது ஆச்சரியப்படத் தக்கதல்ல!

**எஸ். தீனதயாளன்,**
**செய்தி, மக்கள்-தொடர்பு அலுவலர்**
**காமராசர் மாவட்டம்.**

# பாடல்களுக்கு ஒரு பாபநாசம் சிவன்



பழம்பெரும் கலைஞர்களைப் போற்றும் வகையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் விழாக்கள் எடுத்து அவர்களைக் கௌரவித்து வருகிறது. அந்நாளைய திரைப்படத்துறையிலும், இசைத்துறையிலும், கர்நாடக சங்கீதத்திலும் புகழ் பெற்று விளங்கிய பாபநாசம் சிவன் அவர்களின் நினைவு நாளை 1.10.86 அன்று வெகு சிறப்புடன் மன்றம் நடத்தியது.

தஞ்சை மாவட்டத்தில் 1890 ஆம் ஆண்டு பிறந்தார் பாபநாசம் சிவன். திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் சேர்ந்து தமது 18வது வயதில் 'சாஸ்திரி' 'உபாத்தியாயா' என்ற பட்டங்களைப் பெற்றார்.

இசையின் மீதான ஆர்வத்தை தமது தாயிடமிருந்து பெற்ற இவர் ,இசைத் தொடர்பான ஆரம்பப் பாடங்களை நூரணி மகாதேவ பாகவதரிடமும் சம்பா பாகவதரிடமும் கற்றறிந்தார்.

பின் தமிழ்நாட்டில் பல்வேறு திருத்தல விழாக்களில் கலந்து கொண்டு இசை நிகழ்ச்சிகள் நடத்தினார். ஏறத்தாழ 15 நாடகங்களை எழுதி இயக்கி, முக்கிய பாத்திரங்களேற்று நடிக்கவும் செய்தார். திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதினார். தியாகபூமி, பக்த குசேலா, பக்த சீதா, சிவகவி, அசோக் குமார், போன்ற திரைப்படங்களில் அவரின் பாடல்கள் மிகப் பிரபலமானவை. மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைத் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் எழுதியுள்ளார்.

நினைவுநாள் நிகழ்ச்சிக்கு வருகை தந்தோரை, இயல் இசை நாடக மன்றத் தலைவர் கவிஞர் வாலி வரவேற்றார்.

தலைமை ஏற்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.அரங்கநாயகம் அவர்கள் பாபநாசம் சிவன் இயற்றிய 'கீர்த்தனை மாலை' நான்காம் பாகம் நூலை வெளியிட்டார். இயல் இசை நாடக மன்றத்தின் நிதி உதவியுடன் வெளியிடப்பட்ட இந்நூலின் முதல் பிரதியை டாக்டர் சீர்காழி எஸ்.கோவிந்தராஜன் பெற்றுக்கொண்டார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தமது தலைமை உரையில் ''தமிழ் இசைப் பாடல் வளர்ச்சிக்குப் பாபநாசம் சிவன் அவர்கள் செய்த தொண்டு ஈடு இணையற்றது. 'கீர்த்தனமாலை' நான்காம் பாகத்தைத் தொகுத்துத் தந்த அவரது புதல்வி ருக்மணிரமணி அவர்களையும், நூலாக்க நிதிஉதவி வழங்கிய இயல் இசை நாடக மன்றத்தையும் பாராட்டுகிறேன். பின்னால் வருபவர்கள் தமிழிசையை வளர்ப்பதற்கு படிக்கட்டு அமைத்த பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தி என்றென்றும் நிலைக்கும்" என்று கூறினார்.

'எல்லா ஞானமும் கொண்டு எல்லாருக்கும் எடுத்துக் காட்டாக விளங்கிய அவர், தமிழ் இசைக் கலைக்கு ஒரு பரம்பரையை உருவாக்கித் தந்தார்' என்று புகழ்ந்துரைத்தார் சிறப்புரை ஆற்றிய அரசவைக்கவிஞர் புலவர் புலமைப்பித்தன்.

பாபநாசம் சிவன் ரசிகர் சங்கத் தலைவர் வித்வான் திரு.கே.வி.நாராயணசாமி, கலாட்சேத்ரா நிறுவனத் தலைவர் திரு கே.சங்கரமேனன் ஆகியோரும் சிறப்புரை ஆற்றினர். விழாவின் இறுதியில் சங்கீத கலாநிதி திருமதி டி.கே.பட்டம்மாள் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இயல் இசை நாடக மன்றச் செயலர் திரு.வி.எஸ். இராகவன் நன்றி நவின்றார்.

—நமது செய்தியாளர்.

## சித்த மருத்துவர்களுக்கு ஓய்வூதியம்

தமிழ்நாட்டில் வேலை செய்ய இயலாமல் உள்ள 60 வயதிற்கு மேற்பட்ட சித்த மருத்துவர்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் தேதி முதல் மாதம் ரூ. 150 வீதம் ஓய்வூதியம் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம் ஜி.ஆர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்குரிய விண்ணப்பப் படிவங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோட்ட வருவாய் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். இவ்வோய்வூதிய ஆணைகள் அந்தந்தக் கோட்டாட்சியர்களால் வழங்கப்படும். அச்சிடப்பட்ட விண்ணப்பங்களை, உரிய வடிவத்தில் மனுதாரர்கள் தாங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள வட்டாட்சி அலுவலகத்தில் சேர்ப்பிக்கலாம். இதற்குரிய விண்ணப்பங்களுக்கு முத்திரைப் பதிவுக் கட்டணம் (Court Fee Stamp) ஒட்டத் தேவையில்லை.

# எல்லாம் பிளாஸ்டிக் மயம்!

கற்காலம், உலோக காலம் போய், இன்று பிளாஸ்டிக் காலம் வந்திருக்கிறது.

பல்வேறு துறைகளில், தொழில்களில் இன்று பிளாஸ்டிக் நீக்கமற நிறைந்திருக்கிறது. பிளாஸ்டிக் தொழில் மேலும் மேலும் வளர்ந்திட, அத்தொழில் குறித்த எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய 'நவீன தகவல் மையம்' ஒன்று மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் சென்னையில் அமைக்கப்படவிருக்கிறது.

சென்னை கிண்டித் தொழிற்பேட்டையில் உள்ள 'சிப்பெட்' நிறுவனத்தில் அதன் இயக்குநர் திரு ஐ. எஸ். பரத்வாஜ் செய்தியாளர்களிடம் பேசுகையில் மேற்கண்ட தகவல்களைக் கூறினார். மேலும் அவர் தெரிவித்ததாவது:

'பிளாஸ்டிக் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட தொழிற்கூடங்களின் எண்ணிக்கை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியில், எட்டாயிரத்திலிருந்து இருபதாயிரமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

''நடப்பு ஆண்டில் பிளாஸ்டிக் தொழிலைத் திறம்பட நடத்திச் செல்ல 51,590 பேர் தேவைப்படுவார்கள். இந்த எண்ணிக்கை 1989-90-ஆம் ஆண்டில் 48,240 ஆகவும், 1994-95இல் 81,930 ஆகவும், 1999-2000இல் 84,900 ஆகவும் உயரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு பிளாஸ்டிக் தொழிலில் ஈடுபடுபவர்களுக்குச் சிறந்த தொழில் நுட்ப மற்றும் நிர்வாகப் பயிற்சி அளிப்பதற்காக இந்நிறுவனம் ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் தன்னுடைய மையங்களைத் திறக்கத் தீர்மானித்துள்ளது.''

கிண்டியில் 'சிப்பெட்' வளாகத்தில் ரூ. 4.5 கோடி மதிப்பீட்டுச் செலவில் பிளாஸ்டிக் சோதனை மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இதற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த மையத்தை மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 21-9-86 அன்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

அப்போது அவர் பேசுகையில்:

''ஜப்பான் நீங்கலாக ஆசியாவிலேயே மிகவும் புகழ் பெற்ற ஒரு நிலையமாக 'சிப்பெட்' விளங்குகிறது. இத்துறையில் உயர் கல்விக்கான ஒரு நிலையமாகச் சென்னைப் பல்கலைக் கழகம் இதனை அங்கீகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

''தொழில் நுட்ப உதவிக்கான ஐ. நா. அமைப்புகளின் உதவி சிப்பெட்டுக்குக் கிடைத்துள்ளது. அவற்றால் அனுப்பப்பட்ட 60-க்கும் மேற்பட்ட அயல்நாட்டு மாணவர்கள் இங்குப் பயின்று தேறியிருக்கிறார்கள்.''

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு மத்தியத் தொழில் துறைத் துணை அமைச்சர் திரு எம். அருணாசலம் அவர்கள் பேசுகையில், ''பிளாஸ்டிக் என்றால் சோப்புப்பெட்டி, பக்கெட் என்று கருதிய காலம் போய், உயர் தொழில் நுட்பத் திறனோடு தொடர்புடையதாகத் தொலைத் தகவல் தொடர்புத் துறை, மின் அணுவியல்துறை, போக்குவரத்துத்துறை என்று பல தொழில்களிலும் பிளாஸ்டிக் இப்போது இடம் பெற்றுள்ளது. இத்துடன் வேளாண்மையிலும், கால்வாய்க் கரைகளைப் பலப்படுத்தவும், உணவுத் தானிய மூட்டைகளை மூடி வைக்கவும், நாற்றங்கால்களைப் பாதுகாக்கவும் என்று பல வழிகளிலும் பிளாஸ்டிக் பயன்படுகிறது'' என்றார்.

மாண்புமிகு தமிழக வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு என். நல்லுசாமி அவர்கள் பேசுகையில், ''இந்த நிலையம், ஆசியாவின் முன்னணி பிளாஸ்டிக் தொழில் நுட்ப நிறுவனமாக மலரத் தமிழக அரசு தொடர்ந்து தன் ஆதரவை அளித்து வரும்'' என்றார்.

விழாவில் திரு கே. ராமமூர்த்தி எம். பி. உட்படப் பலர் பேசினர்.

—நமது செய்தியாளர்.









சென்ற இதழில்....

அண்ணல் காந்தியடிகள் திருவுருவப் படத்தினை சென்ற இதழ் (1.10.86) அட்டை அலங்கரித்தது.

## செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் வீராசாமி மறைவு

தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத்துறையில், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலராகப் பணியாற்றி வந்த திரு. ஆர்.வீராசாமி, 30.9.1986 அன்று இயற்கை எய்தினார்.

1942 செப்டம்பர் 7ஆம் நாள் தஞ்சை மாவட்டம் வடக்கூர் தென்பாதி கிராமத்தில் பிறந்த வீராசாமி, தஞ்சையில் படித்து இளங்கலை பட்டம் பெற்றவர். 1973இல் செய்தித் துறையில் சேர்ந்த இவர், நெல்லை, முகவை, புதுக்கோட்டை, தஞ்சை, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் மக்கள் தொடர்பு அலுவலராகப் பணியாற்றியவர். கடைசியாக அவர் பணிபுரிந்தது சென்னை இராஜாஜி மண்டபம் ஆகும்.



வீராசாமிக்கு மனைவியும், ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர்.

ஆணையர் மற்றும் செயலர், செய்தி மற்றும் சுற்றுலாத் துறை திரு. ஏ.பி.முத்துசாமி, இ.ஆ.ப., செய்திமக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. மற்றும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை அலுவலர்கள் மருத்துவமனைக்குச் சென்று, மறைந்த வீராசாமிக்கு அஞ்சலி செலுத்தினர்.

எப்போதும் எளிமையாகவும், இனிமையாகவும் பழகி வந்த திரு வீராசாமி அவர்களின் மறைவுக்கு, 'தமிழரசு' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## கல்விப் பணிக்குத் தேசிய விருது

சிறந்த கல்விப் பணிக்கான தேசிய ஃபெலோஷிப் கல்வி விருதை தமிழ்நாட்டைச் சேர்ந்த டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் பெற்றிருக்கிறார்.

புதுடில்லியில் நடைபெற்ற தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கவுன்சிலின் வெள்ளி விழாவையொட்டி 12-9-86 அன்று நடைபெற்ற விழாவில் இந்த விருதினை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் வழங்கினார். இந்த விருது பத்தொன்பது கல்விப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் கோயம்புத்தூரில் உள்ள அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் (அவினாசிலிங்கம் ஹோம்சயன்ஸ் காலேஜ்) இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். மனையியல் கல்வி, உணவுமுறை, சத்துணவு ஆகியவை குறித்த கல்வியில் சிறந்த நிபுணராக இவர் விளங்குகிறார்.

டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் அமெரிக்காவிலுள்ள தேசிய கவுரவ சங்க உறுப்பினர் பதவி உட்பட பல்வேறு சிறப்பினைப் பெற்றிருக்கிறார். முந்நூறு ஆய்வுக் கட்டுரைகளும், 37 நூல்களும் எழுதியுள்ளார்.

ஒஹியோ சட்டமன்றத்தில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்திய தனிச் சிறப்பையும் பெற்றிருக்கும் டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ், 1978ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற டில்லி சாகித்திய சம்மேளனத்தில் 'விஞ்ஞான சரஸ்வதி' என்ற விருதையும் பெற்றிருக்கிறார்.



ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




DIPR/Efficient

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

